பக்கங்கள்: இருபது

Registered as a Newspaper

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை: 8 வள்ளுவர் ஆண்டு 2029 ஆனி 27 சனிக்கிழமை [11 07- 1998] SANJEAVY- Regenerative Tamil Weekly சிகரம் :06

ஓகஸ்ட் முதலாம் வாரத்தில் நாடு முழுதும் அவசரகாலம்?

அரசின் திட்டம் இதுவாம்

கொழும்பு, ஜூலை 11

தென்பகுதியில் உள்ள ஐந்து மாகாண சபைகளுக்கான தேர்தல்களை ஒத்திவைக்கும் தனது முயற்சிக்கு ஐ.தே.க. ஒத்துழைக்காது விட்டால், அடுத்த மாதம் முதல் வாரத்தில் அவசர காலச் சட்டத்தை நாடு முழுவதற்கும் விஸ்தரித்து, அச்சட்டத்தின் கீழ் தேர்தல்களை ஒத்திவைப்பதற்கான பிரகடனத்தை வெளியிட அரசு திட்டமிட்டுள்ளது எனக் கூறப்படுகிறது.

தற்போது வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டுவரும் ஐந்து தென்பகுதி மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை எந்த வகையிலேனும் ஒத்தி வைப்பதென அரச உயர்பீடம் முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

வடக்கு—கிழக்கு மாகாண சபைத் தேர்தல்களை ஒத்தி வைப்பதற்கு நாடாளுமன்றத்தில் விசேட சட்டதிருத்தம் அடக்கிய தீர்மானம் கொண்டு வரப்பட்டிருந்தது.

தற்போது தென்பகுதியின் ஐந்து மாகாண சபைத் தேர்தல்களையும் ஒத்திவைப்பதற்கென இதே வகையான பிரேரணையை நாடாளுமன்றத்தில் கொண்டு வரமுயற்சி எடுப்பதெனவும் —

இதற்கு ஐ.தே.க. ஆதரவைத் தேடும் பொறுப்பை அமைச்சர் பீரிஸிடம் ஒப்படைப்பதெனவும் —

அந்த முயற்சியில் அவர் வெற்றி பெறாவிட்டால் அவசர காலச்சட்டத்தை நாடு முழுவதும் விஸ்தரித்து அதன் மூலம் சம்பந்தப்பட்ட தேர்தல்களைப் பின்போடுவது எனவும் —

அரசு முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

அநேகமாக ஓகஸ்ட் 7 அல்லது 8 ஆம் திகதி அவசர காலச் சட்டம் நாடு முழுவ

(8 ஆம் பக்கம் பார்க்க)

ஜெனரல் சரத் முனசிங்க வடக்குக்கு நியமனம்

கொழும்பு, ஜூலை 11

அண்மையில் மேஜர் ஜெனரலாகப் பதவிஉயர்வு பெற்ற சரத் முனசிங்க அடுத்த வாரம் முதல் யாழ். மாவட்டத்தில் வலிகாமம் மற்றும் தீவகத்தில் நிலை கொண்டுள்ள 51 ஆவது படையணிக்குத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது 51 ஆவது படையணித் தளபதியாகப் பணியாற்றிவரும் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட இராணுவ தலைமையகப் பயிற்சிப் பிரிவின் பணிப்பாளர் நாயகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இராணுவபுலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் இராணுவப் பேச்சாளராக உடனடியாக நியமிக்கப்பட்டுள்ளார். (உ-1-3-21)

நாடாளுமன்றை சூழவுள்ள கிராமங்கள் சுற்றிவளைப்பு

கொழும்பு, ஜூலை 11

கோட்டேயில் அமைந்துள்ள நாடாளுமன்றத்தைச் சுற்றியுள்ள கிராமங்கள் நேற்றுமுன்தினம் அதிகாலை படையினரால் திடீரெனச் சுற்றி வளைக்கப்பட்டது.

இந்தச் சுற்றிவளைப்பின் போது 22 தமிழ் இளைஞர்கள் தலங்கம பொலீஸாரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-1-3)

1,061 பட்டதாரிகளுக்கு 15 ஆம் திகதி நியமனம்

டிவகலாலா அறிவிப்பு

திருகோணமலை, ஜூலை 11

வடக்கு — கிழக்கில் ஆயிரத்து 61 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் எதிர்வரும் 15 ஆம் திகதி வழங்கப்படவிருக்கிறது.

மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் சு. டிவகலாலா திருமலையில் நேற்று தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

மாகாணக் கல்வியமைச்சு அலுவலகத்தில் இந்தச் செய்தியாளர் மாநாடு நடந்தது.

புதிதாக நியமனம் பெறும் ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் அந்தந்த மாவட்ட கல்விப் பணிப்பாளர்களிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்துக்கான நியமனக் கடிதங்கள் விமான மூலம் அனுப்பப் பட்டுள்ளன.

அந்த மாவட்டக் கல்வி அலுவலகங்களில் வைத்து எதிர்வரும் 15 ஆம் திகதி உரியவர்களுக்கு அது கையளிக்கப்படும் — என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அவர் வெளியிட்ட தகவலின்படி ஒவ்வொரு மாவட்டங்களிலும் நியமனம் பெறுவோர் எண்ணிக்கை வருமாறு:

யாழ்ப்பாணம் — 342, மட்டக்களப்பு — 194, திரு

(8 ஆம் பக்கம் பார்க்க)

புலிகள் தாக்குதல்!

கொழும்பு, ஜூலை 11

மாங்குளத்திற்குத் தென்கிழக்கே நிலைகொண்டுள்ள படையினரின் காவலரண்கள் மீது விடுதலைப்புலிகள் நேற்றுக் காலை மோட்டார்த் தாக்குதலை நடத்தினர் எனவும்—

ஒலுமடு, கிளிநொச்சி, வாழைச்சேனை ஆகிய இடங்களில் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நேற்று மோதல் சம்பவங்கள் இடம்பெற்றதாகவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்று அறிவித்தது. (உ-7)

பாஸ் வழங்கலில் மோசடி

கொழும்பு, ஜூலை 11

வவுனியாவில் இருந்து வெளியேறுபவர்களுக்குப் போலீப் பாஸ் வழங்கும் மோசடி குறித்து நேரில் ஆராய உயர்மட்டப்பொலீஸ் கோஷ்டி ஒன்று வவுனியா சென்றுள்ளது.

வவுனியாவில் உள்ள பாஸ் கெடுபிடிகளைப்பயன்படுத்தி போலீஸார் போலிப் பாஸ்களை வழங்கி பணம் பெறுவதாகத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து அங்கு சென்ற மேற்படி உயர்மட்டப் பொலீஸ் கோஷ்டி போலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உட்பட மூவரைக் கைது செய்துள்ளது (உ-1-3-21)

பெறுமதிமிக்க ஓவியங்களை ஜனாதிபதி ஒருவரின் மருமகனே திருடினார்

ஜனாதிபதி இல்லத்தில் இருந்த—பழைமைவாய்ந்த—பெறுமதி மிக்க ஓவியங்கள் மற்றும் புராதனப் பொருள்களை முன்னாள் ஜனாதிபதியின் மருமகன் ஒருவரே களவாடியதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

வெளிநாட்டுச் செய்தியாளர்களுடன் கடந்த 3ஆம் திகதி நடந்த இரவு விருந்தின் போதே அவர் இந்தக் குற்றச்சாட்டைத் தெரிவித்துள்ளார்.

லண்டனில் நடந்த கிறிஸ்டல் பொருள்காட்சியில் இந்தப் பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன எனத் தெரிவித்த ஜனாதிபதி, அந்த ஜனாதிபதியின் மருமகன் தொடர்பான விவரங்களையும் வெளியிட்டார். (உ-10-3)

தொலைபேசி மூலம் உரையாடுகிறார் டக்ளஸ்

கொழும்பு, ஜூலை 11

ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவை கொழும்புப் பத்திரிகையாளர்கள் சிலர் நேற்றுச் சந்தித்து சில நிமிடங்கள் உரையாடினர்.

வடமாகாணத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்லவும் நேற்றுப் பலாலியிலிருந்து 'செல்டெல்' தொலைபேசி மூலம் ஆஸ்பத்திரியில் இருக்கும் டக்ளஸ் தேவானந்தாவுடன் ஒரு சில நிமிட நேரங்கள் உரையாடினார்.

தாக்குதல் சம்பவம் மற்றும் தாக்கியோரின் முகங்கள் போன்றவை தமக்கு நன்கு நினைவிருப்பதாக டக்ளஸ் தெரிவித்துள்ளார். (உ)

தங்கத்துரை கொலைக்கு தமிழ்க் கட்சியே காரணம்?

கொழும்பு, ஜூலை 11

கடந்த வருடம் படுகொலை செய்யப்பட்ட திருகோணமலை மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் அ. தங்கத்துரையின் கொலையுடன் ஜனநாயக வழிக்கு திரும்பிய அரசியல் கட்சி ஒன்றுக்கும் தொடர்பு இருப்பதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

அவரின் கொலை குறித்து விசாரணை நடத்தி வந்த குழுவே மேற்கண்டதகவலை வெளியிட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது (உ-3-7)

வவுனியா கல்விக் கல்லூரி: பயிற்சியை முடித்தோருக்கு மாத இறுதியில் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

வவுனியா கல்விக் கல்லூரியில் 1997 ஆம் ஆண்டில் கற்கை நெறியை முடித்துக் கொண்ட மாணவர்களுக்கு இம்மாத இறுதிக்குள் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட உள்ளன.

இது தொடர்பாக கல்வி உயர்கல்வி அமைச்சு தமக்கு அறிவித்துள்ளதாக வவுனியா கல்விக் கல்லூரி பீடாதிபதி எஸ். அழகரட்ணம் உதயனுக்குத் தெரிவித்தார்.

1997 ஆம் ஆண்டு சுமார் 30 மாணவர்கள் வரையில் கற்கை நெறியை முடித்துக் கொண்டனர். அவர்களுக்கான ஆசிரிய நியமனங்கள் கடந்த ஆறு மாத காலமாக வழங்கப்படாமல் இருந்தன. இது தொடர்பாக உயர் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர்களுக்கு விரைவில் நியமனம் வழங்கப்படும் என உறுதி மொழி அளிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இம் மாதம் 15 ஆம் திகதி இவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் 15 ஆம் திகதி நியமனங்கள் வழங்குவதில் சில இடையூறுகள் ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் இம்மாத இறுதிக்குள் எப்படியாவது நியமனங்கள் வழங்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

செம்மணிப் புதைகுழிகள்!

தென் பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் போது யாழ் நகருக்கு முன்னால் சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்தில் யாழ். நகர் வரவேற்கிறது என சிமெந்தினால் அமைக்கப்பட்ட நிரந்தர வரவேற்பு வளைவு உள்ளது. இந்த வரவேற்பு வளைவுக்கும் நாவற்குழிப் பாலத்துக்கும் இடையிலேயே செம்மணி சோதனைச் சாவடிகள் அமைந்துள்ளன. செம்மணி சோதனைச் சாவடிக்கு ஒரு புறத்தில் உப்பளமும் மறு புறத்தில் உப்பளத்துக்குக் கடல் நீரை இறைக்கும் நீர் இறைக்கும் பகுதியும் உள்ளன. செம்மணி சோதனைச் சாவடிக்குரிய கட்டடங்களைத் தவிர வேறு கட்டடங்கள் எவையும் அங்கில்லை. சுற்றுப்புறத்தில் கைவிடப்பட்ட பரந்த வயல் நிலங்கள் காணப்படுகின்றன.

''ரிவிரச'' இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் இரவு நேரங்களில் இருளைக் கிழித்துக்கொண்டுவரும் இராணுவ 'ட்ரக்' வாகனங்களில் யாழ். பிரதேசத்தில் கைது செய்யப்பட்டவர்களோ அல்லது கொல்லப்பட்டவர்கள் சடலங்களாகவோ அடிக்கடி கொண்டு வரப்பட்டனர். உயிருடன் கொண்டு வரப்பட்டவர்களின் உயிர் பறிக்கப்பட்டு அவர்களின் சடலங்களும் ஏற்கனவே கொண்டு வரப்பட்ட சடலங்களும் சோதனைச் சாவடியை அண்டிய பகுதிகளில் ஆங்காங்கே புதைகுழிகளில் புதைக்கும் கடமையையும் செம்மணி சோதனைச் சாவடியில் பணிபுரிந்த சிப்பாய்கள் தமது சாதாரண கடமைகளுக்கு மேலதிகமாக நிறைவேற்ற வேண்டியிருந்தது.

கொலை செய்வது சாதாரண நிகழ்வு

கைதுசெய்யப்பட்டு செம்மணி சோதனைச் சாவடிக்கு கொண்டுவரப்படுபவர்களைக் கொல்வது அல்லது ஏதாவது காரணத்தின் பேரிலோ, குற்றச்சாட்டின் பேரிலோ ஆள்களைப் படுகொலை செய்வது அக்காலகட்டத்தில் அப் பகுதியில் அவ்வளவு பாரதூரமான விடயமாகக் கருதப்படவில்லை. அவை மிகவும் சில்லறை விடயங்களாகவே கருதப்பட்டன, அந்தச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை. அவை குறித்து கேள்விகள் எழுப்பப்படவுமில்லை தண்டனையும் வழங்கப்படவில்லை. இருந்தபோதிலும் கொலைக் குற்றத்திற்கு மரண தண்டனை வழங்கப்படும் என அந்தக் காலகட்டத்திலும் சட்டப்புத்தகங்களில் தடித்த கறுத்த எழுத்துக்களில் அச்சிடப்பட்டுததான் இருந்தது.

1996 செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி பகல் ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சையை எழுதிவிட்டு சைக்கிளில் வீடு நோக்கி வந்துகொண்டிருந்த கிருஷாந்தி குமாரசுவாமி என்ற மாணவியைக் கைது செய்தது—

அவரை அன்று மாலை தேடிவந்த அவரது சகோதரன், அவரது தாயார் மற்றும் அயல் வீட்டுக்காரர் ஆகியோரைக் கைது செய்தது—

ஆகியவற்றை தமது உயரதிகாரிகள் பெரிதாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்பதை செம்மணி சோதனைச் சாவடியில் பணியாற்றிய பொலீஸாரும் சிப்பாய்களும் அறிந்திருந்தனர்.

சிப்பாய்களாலும் பொலீஸ்காரர்களாலும் கிருஷாந்தி கற்பழிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். அவரது தாயார், சகோதரர் மற்றும் அயல் வீட்டுக்காரர் ஆகியோரும் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து உள்நாட்டில் மாத்திரமல்ல சர்வதேச மட்டத்திலும் கண்டனக் கணைகள் எழுப்பப்பட்டன. இறுதியில் இச்சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவத்தினருக்கு எதிராக அரசு வழக்குத் தாக்கல் செய்தது. இப்போது அந்த வழக்கு விசாரித்து முடிக்கப்பட்டு குற்றவாளிகள் அறுவருக்கும் மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

> செம்மணியில் சுமார் நானூறு பேர் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டுள்ளதாக வெளிவந்த தகவல்கள் குறித்து 'யுக்திய' சிங்கள வார இதழ் வெளியிட்ட கட்டுரையும் வரைபடமும் இங்கு பிரசுரமாகின்றன. இக் கட்டுரையுடன் மேஜர் ஜெனரல்கள் கருணதிலக, ஸ்ரீலால் வீரசூரிய, ஜானக பெரேரா ஆகியோரின் படங்களும் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

நீதிமன்றில் வெளியான தகவல்கள்

இந்த வழக்கு விசாரிக்கப்பட்டபோது பல்வேறு தகவல்கள் வெளியிடப்பட்டன. இருப்பினும் இவற்றையெல்லாம் தூக்கி எறியும் விதத்தில் குற்றவாளிகள் தெரிவித்த தகவல்கள் முக்கிய இடம் பெற்றுள்ளன. நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்படுவதற்கு முன்னர் கூறுவதற்கு ஏதாவது உள்ளதா என நீதிமன்றம் எதிரிகளிடம் கேட்டபோதே அந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன. முதலாவது எதிரியான சோமரத்ன ராஜபக்ச உட்பட எதிரிகள் அனைவரும் நீதிமன்றில் தெரிவித்த தகவல்களின்படி இவ்வாறு ஆள்களைக் கொன்று புதைப்பது மிகவும் சில்லறை விடயமாகும். தமது உயரதிகாரிகளின் கட்டளைகளுக்கு இணங்க அவ்வாறு செய்யவேண்டும். இல்லையேல் அந்த இடத்திலேயே தண்டனை கிடைக்கும் எனவும், செம்மணி சோதனைச் சாவடியை அண்டிய பகுதிகளில் சுமார் முந்நூறு, நானூறு சடலங்கள் புதைக்கப் பட்டுள்ளன எனவும், அவற்றைத் தங்களால் அடையாளம் காட்ட முடியுமெனவும் தெரிவித்துள்ளனர்.

தென்பகுதியில் அநாமதேய தொலைபேசித் தகவல் அல்லது ஒரு துண்டுக்கடதாசியில் கிடைத்த வரைபடத்தை வைத்துக்கொண்டுவழிதேடிச் சென்று இருளில் காணாமல் போனோரின் அடிமுடிதேடிய சூரியகந்த புதைகுழியைத் தோண்டிய – அரசியல்வாதிகளும் பத்திரிகையாளர்களும் பொலீசாரும் நீதிமன்றமும் இந்நாட்டு வரலாற்றின் மறைந்துபோன ஓர் அத்தியாயத்தை அப்போதுபுதுப்பித்தனர். அதன் பிரதிபலனாக அன்று ஆட்சியில் இருந்த அரசு வீழ்த்தப்பட்டு புதிய அரசு ஆட்சியைக் கைப்பற்றியது. அன்று சூரியகந்தவில் காணாமல் போனோரைக் கண்டறியமுற்பட்டோர் இன்றைய அரசில் உயர் பீடங்களில் இருக்கிறார்கள்.

சூரியகந்த புதைகுழி தோண்டியோருக்கு சமர்ப்பணம்

அன்று சூரியகந்த சம்பவத்தை வெளிக்கொணரக் கிடைத்த துப்புக்குச்சமமான தகவல் இன்று எமது ''யுக்திய'' செய்தித்தாளுக்குக் கிடைத்துள்ளது. அன்று அந்தக் கடதாசித் துண்டில் வரையப்பட்டவரைபடத்தை ஒத்த வரைபடம் இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது. அரச பயங்கரவாதம் காரணமாக கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட புதைகுழியைக் கண்டறிய மிகவும் ரகசியமாகவே சூரியகந்த செல்லநேர்ந்தது. ஆனால் இன்று அந்த அரசுக்குப் பதிலாக ஆட்சிக்கு வந்த இந்த அரசுக்கு 'மனித உரிமைகளைப் பேணுவதில் சர்வதேச சான்றிதழ் கிடைத்துள்ளது என்பது வெளிப்படை. 1998 ஜூலை 6 ஆம் திகதி வெளியான தினமினப் பத்திரிகையின்பிரதமதலைப்புச் செய்தியாக இச்செய்தி வெளியிடப்பட்டுள்ளது. எனவே எமக்குக் கிடைத்துள்ள இந்தத்துப்பை இரகசியமாகப் பாதுகாக்க வேண்டிய தேவை எமக்கு ஏற்படவில்லை. அதனைப்பகிரங்கப்படுத்த நாங்கள் விரும்புகின்றோம்.



எமக்குக் கிடைத்துள்ள வரைபடத்தின்படி சாவகச்சேரியில் இருந்து யாழ். நோக்கிச் செல்லும் கண்டி வீதியில் விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்ட நாவற்குழிப் பாலத்தைத் தாண்டியதும் செம்மணி சோதனைச் சாவடி ஆரம்பிக்கும் பாதுகாப்பு வலையம் அமைந்துள்ளது.

இதிலிருந்து சற்று வலது புறமாக உப்பள வீதியும் அவ்விடத்தில் முதலாவது சோதனைச் சாவடியும் அதிலிருந்து சற்று முன்னோக்கிச் செல்கையில் இடப்புறத்தில் குறுகிய கிளை வழியும் உள்ளன. அவற்றைத் தாண்டி சில மீற்றர்களுக்கு அப்பால் அமைந்துள்ள 2 ஆவது சோதனைச் சாவடியைத் தாண்டும்

தமிழில் கஜனி

போது ''யாழ். நகர் வரவேற்கிறது'' என்ற வரவேற்பு வளைவு அமைந்துள்ளது. இந்தப் புதைகுழிகள் சோதனைச் சாவடிகளுக்கு இடைப்பட்ட வீதியில் இரு பக்கங்களிலும் உள்ளன.

இந்த வரைபடத்தில் கிருஷாந்தி குமாரசுவாமியும் மற்றவர்களும் புதைக்கப்பட்ட புதைகுழிகள் காட்டப்பட்டுள்ளன. அத்துடன் முந்நூறு, நானூறு பேர் புதைக்கப்பட்ட ஏனைய புதைகுழிகளும் காட்டப்பட்டுள்ளன. இதன்படி கிருஷாந்தி விசாரணையின் போது தயாரிக்கப்பட்ட வரை படங்களையும் இந்த வரைபடத்தையும் ஒப்பிட்டு நோக்கும் போது இந்தப் புதைகுழிகளை இலகுவாக கண்டறியக் கூடியதாயிருக்கும்.

''ரிவிரச'' இராணுவ நடவடிக்கையின் பின்னர், யாழ். குடாநாட்டின் பிரதான கட்டளை அதிகாரியாக பிரிகேடியர் சிறிலால் வீரசூரியா பணிபுரிந்தார். யாழ். குடாநாடு அவரது நிர்வாகத்தின் கீழ் இரு வலயங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன, அவற்றின் கட்டளை அதிகாரிகளாக பிரிகேடியர் ஜானக பெரேராவும், பிரிகேடியர் கருணதிலகவும் கடமையாற்றினர். பிரிகேடியர் ஜானக பெரேராவின் நிர்வாக வலயத்திற்குள்ளேயே செம்மணி சோதனைச் சாவடி அமைந்துள்ளது. இந்த அதிகாரிகள் பிரிகேடியர்களாக உத்தியோக பூர்வமாக இருந்த போதிலும் அவ்வேளையில் உத்தியோகப் பற்றற்ற மேஜர் ஜெனரல் பதவிகளையே வகித்தனர். எனவே தான் அவர்களின் கீழ் பிரிகேடியர்கள், கேணல்கள் உட்படப் பல அதிகாரிகள் பணிபுரிந்தனர். இவர்கள் எவருக்கும் தெரியாமல் இவ்வாறு முந்நூறு நானூறு பேர் புதைக்கப்பட வாய்ப்பு இல்லை.

எவ்வாறாயினும் இந்தப் புதை குழிகள் தோண்டப்படுமாயின் அதற்குப் பொறுப்பான அதிகாரிகள் யார்? இந்த நாடகத்தில் அவர்கள் என்ன பாத்திரங்களை ஏற்று நடித்தனர்; என்பன போன்ற விடயங்கள் வெளிவரும். அப்போதுதான் சிறிலங்காவின் மனித உரிமைகள் தொடர்பான உண்மையான சொரூபம் தெரியவரும்.

இன்று வேள்வி

கல்லுண்டாய் காத்தவராயர் ஆலய வருடாந்த வேள்வி வைபவம் இன்று காலை இடம்பெறும்.

இந்த வைபவத்தில் சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆடுகளும் கோழிகளும் பலியிடப்பட விருப்பதாக அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கூட்டம்

மீளக்குடியமர்த்தப்பட்ட தெல்லிப்பழைப் பிரதேசத்தில் கிராமிய வங்கிகளின் தேவைகளை அளவிடும் முகமாக ப. நோ. கூ. சங்கத் தலைவர்கள் பொதுமுகாமையாளர்கள் ஆகியோருக்கான கூட்டம் ஒன்று இன்று காலை 10 மணிக்கு மக்கள் வங்கி பிராந்தியத் தலைமையகத்தில் நடைபெறவிருக்கிறது.

ஐ. நா. அபிவிருத்தி அமைப்பு மற்றும் மக்கள் வங்கி ஆகியன இணைந்து இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளன. (உ-3)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

பரமு தேவராஜா

மலர்வு: 11 - 11 - 1922 உதிர்வு: 22 - 06 - 1997

திதி 11 - 07 - 1998

ஆறிரு மாதங்கள் ஓடி மறைந்தாலும் – அப்பா
நித்தமும் உங்கள் நினைவுகள் நெஞ்சில் வாழ்கின்றன
அன்புத் தெய்வமே!
உங்களை நாம் இனி எப்போது காண்போம்?
எம் உயிர் உள்ளவரை தங்களின்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன்மார், பேரப்பிள்ளைகள்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (57510)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்புப் பதியப்படாத சின்னஞ் சிறுசுகள்

ஜெனிவா, ஜூலை 11

உலகிலுள்ள சிறுவர்களில் மூன்றில் ஒரு பங்கினருக்கு பிறப்புச்சான்றிதழ் இல்லை என 'யுனிசெவ்' அமைப்புத் தெரிவித்துள்ளது.

இதனால் சுமார் 20 நாடுகளைச் சேர்ந்த சிறுவர்களுக்குச் சட்டபூர்வமான விதத்தில் தடுப்பூசிகளைப் போட முடியாதிருப்பதாகவும் அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

இதுதவிர, உலகில் வருடந்தோறும் சுமார் 4 கோடி சிறுவர்களின் பிறப்புப் பதியப்படுவதில்லை எனவும் — ஈராக், சவுதிஅரேபியா, ஜோர்ஜியா, பூட்டான், லாவோஸ், ஐவரிகோஸ்ட், வியட்நாம் மற்றும் வடகொரியா ஆகிய நாடுகளில் குழந்தைகள் பிறந்ததும் உரியமுறையில் பிறப்புப் பதியப்படுவதில்லை என்றும் யுனிசெவ் அறிக்கை சுட்டுக்காட்டி உள்ளது.

பிறப்புப் பதிவு செய்யப்படாத பெரு நாட்டைச் சேர்ந்த பள்ளிச் சிறுமிகளை படத்தில் காணலாம்.

(ஐ)

5 லட்சம் தபால் ஊழியர்கள் இந்தியாவில் பகிஷ்கரிப்பு!

அஞ்சல் பணிகள் ஸ்தம்பிதம்

புதுடில்லி, ஜூலை 11

இந்தியாவில் தபாற் துறையைச் சேர்ந்த சுமார்5லட்சம் ஊழியர்கள் காலவரையறையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளதை அடுத்து நாடு முழுவதும் தபாற் சேவைகள் சீர்குலைந்துள்ளன.

சம்பள அதிகரிப்பு உட்பட 10-க்கும் மேற்பட்ட கோரிக்கைகளை முன்வைத்து இப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இந்த வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர அரசுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்துவிட்டதாக அஞ்சல் துறை ஊழியர்களின் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்தது.

தபால் விநியோகிப்போர் தவிர்ந்த, ஏனைய அஞ்சல் துறை ஊழியர்கள் இப் போராட்டத்தில் குதித்துள்ளனர். போனஸ் கொடுப்பனவுகள், தற்காலிக ஊழியருக்கு நிரந்தர நியமனம், நல்ல வேலைச் சூழ்நிலை ஆகியன உட்பட பல கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்துள்ளனர்.

இவைதொடர்பாக கடந்த வருடமே அரசிடம் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டும் எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை என தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இந்த வேலை நிறுத்தம் காரணமாக பல மாநிலங்களில் கடிதவிநியோகம் பாதிக்கப்பட்டுள்ளன.

நைஜீரியாவில் கலவரங்கள்

தென்மேற்கு நகரங்களில் வன்செயலில் 50 பேர்பலி

மகூட் அபியோலாவின் திடீர் மரணத்தை அடுத்து நைஜீரியாவில் கலவரங்கள் மூண்டுள்ளன.

இராணுவ அரசுக்கு எதிராக மக்களும், மாணவர்களும் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர்.

லாகோஸ், அபிகுட்டா, இபடன் உட்பட தென்மேற்கு பிராந்திய நகரங்களிலேயே வன்செயல்கள் பரவி வருகின்றன.

அபியோலாவை இராணுவ அரசு திட்டமிட்டுப் படுகொலை செய்து விட்டதாக கோஷமிட்டவாறே ஆர்ப்பாட்டக்காரர்கள் வாகனங்களுக்கும் கடைகளுக்கும் தீவைத்தனர். படையினர் மீது கற்களை வீசினர்.

இதுவரை நடந்த வன்முறைகளில் 50 பேர் பலியாகியுள்ளனர்.

(ஐ)

உலகக் கிண்ண பராக்கில்

தாய்லாந்துச் சிறையில் கைதிகள் தப்பினர்!

பாங்கொக், ஜூலை 11

உலகக் கிண்ணகால் இறுதிப் போட்டியில் குரோஷிய - ஜேர்மனி அணிகள் மோதிக் கொண்டிருந்த போது பாங்கொக்கிலிருந்து 15 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள ரேயாங் சிறையில் அடைபட்டுக் கிடந்த 8 கைதிகள் தப்பியோடி விட்டனர்.

விறுவிறுப்பாக நடந்து கொண்டிருந்த உதை பந்துப் போட்டியை சிறை அதிகாரிகள் ரீ. வி. யில் தம்மை மறந்து பார்த்துக் கொண்டிருந்த போது கைதிகள் சிறையினை உடைத்து தப்பியோடி இருக்கலாம் என்று பரவலாகக் கூறப்படுகின்றது. எனினும் தாய்லாந்துக் காவற்துறை அதிகாரிகள் இதனை மறுக்கின்றனர். அந்த நேரத்தில் பலத்த மழை பெய்து கொண்டிருந்ததனால் வழக்கமாக ரோந்துப் பணியில் ஈடுபடும் அதிகாரிகள் அன்று ரோந்துப் பணியில் ஈடுபடவில்லை. இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட கைதிகள் சிறைக் கம்பிகளைச் சிறிய அரத்தால் அறுத்து 'கம்பி நீட்டி' விட்டனர் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

(ஐ-6-10)

பிரதமர்களின் விமான பயணச்செலவு 35 லட்சம் டொலர்கள் பாக்கி!

புதுடில்லி, ஜூலை 11

இந்தியாவில் 3 முன்னாள் பிரதமர்கள் உட்பட மற்றும் அமைச்சர்கள் அரசுப் பிரமுகர்கள் மேற்கொண்ட உத்தியோக பூர்வமற்ற விமானப் பயணங்களின் கட்டணமாக 35 லட்சம் டொலர்கள் செலுத்தப்படாமல் பாக்கியாக உள்ளன.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த ஓர் அறிக்கையில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர்களான பி.வி. நரசிம்மராவ், எச்.பி. தேவகௌடா, இந்தர் குமார் குஜ்ரால் ஆகியோரும் மற்றும் 16 அமைச்சர்களும் மேற்கொண்ட தனிப்பட்ட பயணங்களால் விமானப் படைக்கு இந்த இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பணத்தை மீளப் பெறுவதற்கான எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை.

முன்னாள் பிரதமர் தேவகௌடா பதவியில் இருந்த காலத்தில் தனது பேரப் பிள்ளைகளை அடிக்கடி விமானத்தில் அழைத்துச் சென்றார் எனக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

[ஐ]

அபியோலாவின் சொந்த நகரில் ஊரடங்கு

லாகோஸ், ஜூலை 11

நைஜீரிய எதிர்க்கட்சித் தலைவர் மகூட் அபியோலாவின் மறைவை அடுத்து வெடித்துள்ள கலவரங்களைத் தொடர்ந்து அபியோலாவின் சொந்த நகரமான அபிஒகுட்டாவில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக தேசிய வானொலி வியாழனன்று அறிவித்தது.

சுயாதீன பிரேத பரிசோதனைகளின் பின் அபியோலாவின் உடல் அரச மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்படவேண்டும் என்று அவரது புதல்வியான ஒனிற்றி அபியோலா (Onitri Abiola) கோரியுள்ளார்.

[ஐ]

தமிழகத்துக்கு இலங்கை அகதிகள்

இராமநாதபுரம், ஜூலை 11

37 இலங்கைத் தமிழ் அகதிகள் கடந்த செவ்வாய்க் கிழமை தமிழகத்துக்கு வந்துள்ளனர்.

18குடும்பங்களைச் சேர்ந்த இந்த அகதிகளில் 16 ஆண்களும், 13 பெண்களும், 8 சிறுவர்களும் அடங்குவர்.

இலுப்பைக் கடவையில் இருந்து திங்கட்கிழமை படகுமூலம் புறப்பட்ட இவர்கள் இராமேஸ்வரத்தின் கிழக்குப் பகுதிக்கு செவ்வாய்க்கிழமை வந்து சேர்ந்ததாக பொலீஸார் தெரிவித்தனர்.

(ஐ)

யாழ். இலக்கிய வட்டம்

நடத்தும்

கவிஞர் ச. இளம்பூரணன் (பிரபாகர்) எழுதிய

'நெஞ்சே உன்னோடு'

கவிதைத் தொகுதி

நூல் அறிமுக விழா

இடம்: யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்

காலம்: 12-07-98 காலை 9.30 மணி

தலைவர்: கல்வயல் வே. குமாரசாமி (தலைவர், யாழ். இலக்கிய வட்டம்)

நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல்: திருமதி யோ. சிவப்பிரகாசம் (முகாமையாளர், மக்கள் வங்கி கன்னாதிட்டி)

வரவேற்புரை: திரு. ந. சிவபாதம் 'புத்தொளி' செயலாளர், (யாழ். இலக்கிய வட்டம்)

வாழ்த்துரை: திரு. து. வைத்திலிங்கம் (யாழ். மேலதிக அரச அதிபர்)

தலைமையுரை, அறிமுகவுரை: திரு. க. சொக்கலிங்கம் M. A. (சொக்கன்)

ஆய்வுரைகள்:

1. பண்டிதர் ம. ந. கடம்பேஸ்வரன்
2. செல்வி சுந்தரம்பிள்ளை மாதவி எம். பில். (யாழ். பல்கலைக்கழகம்)
3. மதுரகவி காரை எம். பி. அருளானந்தன் (ஆசிரியர், இந்துக்கல்லூரி, காரைநகர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ். இலக்கிய வட்டம்

விளம்பர அனுபலிப்பு:

அர்ச்சனா ஜுவல்லர்ஸ்

இல. 118, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கிளை: 176/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (57489)

இடமாற்றம்

ஜே.எஸ்.பி. தொலைத்தொடர்பு நிலையம்

இல: 272 1ஆம் மாடி ஸ்ரான்லி வீதியில் அமைந்திருந்த எமது தொலைத்தொடர்பு நிலையம் தற்போது அக்கட்டடத்திற்கு எதிரே

இல. 305 ஸ்ரான்லி வீதி,

என்னும் இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

இன்றுமுதல் சர்வதேச நேரடி தொலைபேசிக் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன என்பதனையும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

தொலைபேசி இலக்கங்கள்:- 021-2042, 021-2140 021-2041

ஜே.எஸ்.பி. தொலைத் தொடர்பு நிலையம்
305, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (சி-14241)

அருணாவின் இசைக் கோலங்கள்

பிற்போடப்பட்டுள்ளது

எமது கல்லூரியின் வளர்சசி நிதிக்காக இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் 12 — 07 — 1998 நிகழவிருந்த

"அருணாவின் இசைக் கோலங்கள்"

இசை நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தில்

19 - 07 1998 ஞாயிற்றுக்கிழமை

அன்று நடைபெறும் என்பதை அறிவிக்கின்றோம்.

உயர்தர மாணவர் மன்றம்
யா / இணுவில் இந்துக் கல்லூரி.

(5 500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

இலகு திருமண சேவை

M.B.B.S Doctors (சைவம்), விரிவுரையாளர்கள், Engineers, கணக்காளர், வங்கி உத்தியோகஸ்தர்கள் உள் நாட்டு, வெளிநாட்டு ஆண் மணமக்கள் உண்டு. தொடர்பு: ஞாயிறு காலை துரைவிமலா, 958/8, K.K.S. வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். [57488]

வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி பலாலி வீதி பரமேஸ்வரா ச்சந்தியில் (Campus Junction) தனிக் கிணறு, மூன்று பரப்புக் காணியில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய வீடு உடனடி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 535 A பலாலி வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். [57442]

மணல் தறை கந்தர்மடத்தில் நல்ல சூழலில் நல்ல தண்ணீர், வாகன தரிப்பிட வசதியுடன் சோதிடமுறைப்படி அமைந்த நல்ல வீடும், அதனுடன் வீடுகட்டக்கூடிய காணித்துண்டும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி லிங்காதுரைராஜா, 19 பண்டாரக்குளம் ஒழுங்கை, நல்லூர். [57449]

O/L கணிதம் 98

ஆரம்ப அறிவில்லாதவர்களுக்கும், இதுவரையும் சித்தியடையாதவர்களுக்கும் 33 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. [57398]

பயிற்சி வகுப்புகள்

தமிழ், ஆங்கில, தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்புக்கள் ஆவரங்காலில் ஆரம்பமாகவுள்ளன. விண்ணப்பங்களை சுயமாகத் தயாரித்து செ. சுந்தரமூர்த்தி, சந்தையடி ஒழுங்கை, ஆவரங்கால் எனற முகவரிக்கு அனுப்பவும். ஆரம்பிக்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். [57484]

இறைசிக்கோழி

இறைச்சிக் கோழி புறோயிலர் (Broilers) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் (சின்னக் கடைக்கு அருகில்). [57487]

A/L வகுப்புகள்

1999, 2000 கணக்கீடு, வணிகக் கல்வி பாடங்களுக்கு 15 வருடங்களுக்கு மேற்பட்ட கற்பித்தல் அனுபவமுடைய டிப்ளோமா பட்டதாரி ஆசிரியரால் தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும். பிரத்தியேகமாகவும் அழைக்கலாம். தொடர்புகளுக்கு: ஆ. மோகன், திருமகள், அளவெட்டி மேற்கு, அளவெட்டி. [57455]

தேவை

தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்களும் O/L — ற்கு தமிழ் கற்பிக்கக்கூடிய ஆசிரியையும் தேவை, தொடர்பு: Casio Institute, 3ஆம் கட்டை, கல்வியங்காடு. [57458]

செயலமர்வு

யாழ். இந்துக் கல்லூரியில் இயங்கி வரும் தொலைக் கல்வி நிலையத்தில் தொடர் கல்வி ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. சகல போதனாசிரியர்களையும், ஆசிரியர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு சிரேஷ்ட போதனாசிரியர் கேட்டுள்ளார். (ஐ-6)

கலர் மீன்கள்

கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட புதிய இன கலர்மீன்கள் விற்பனைக்கு உண்டு. A. அருளானந்தம், இல. 588/8, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (ஸ்ராண்வி கல்லூரி முன் ஒழுங்கை), நண்பகல் 12 மணியிலிருந்து பார்வையிடலாம். [57418]

தவறிவிட்டது

சந்திரமதி தவச்செல்வம் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (இல. 507182542V), விசேட அடையாள அட்டையும் தவறிவிட்டன. கண்டெடுப்பவர் தயவு செய்து யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை வீதியில் உள்ள இல. 93/24, கொண்டுள்ள வீட்டில் கையளித்து உதவுக. ஆழ்ந்த நன்றி அறிதலுடன் தகுந்த சன்மானம் வழங்கப்படும். [57486]

மீண்டும்

அறிவுக் களஞ்சியம்

35 ஆவது இதழ் வெளிவந்து விட்டது!

எமது விற்பனையாளர்கள் தொடர்பு கொள்க:

226, காங்கேசன் துறைச்சாலை, யாழ்.

தொலை பேசி: 2820

(சி-4211)

கேள்வி அறிவித்தல்

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்
உரும்பிராய்

வழங்கலும் விநியோகமும் 1998

உரும்பிராயில் உள்ள எமது கொங்கிறீற் நிர்மாணப் பகுதிக்குக் கீழ்க்காணும் பொருள்களைப் பகுதிகளாக வழங்குவதற்கும், விநியோகிப்பதற்கும் கூறுவிலைகள் அடங்கிய முத்திரையிடப்பட்ட கேள்விகள் **03 - 08 - 1998** ஆம் திகதி நண்பகல் **12-00** மணிவரை எமது காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

1)	முறுக்குக்கம்பி	— 10 மி. மீ.	— 40 மெ. தொ.
2)	முறுக்குக்கம்பி	— 12 மி. மீ.	— 25 மெ. தொ.
3)	முறுக்குக்கம்பி	— 16 மி. மீ.	— 50 மெ. தொ.
4)	முறுக்குக்கம்பி	— 20 மி. மீ.	— 20 மெ. தொ.
5)	M. S. கம்பி	— 6 மி. மீ.	— 20 மெ. தொ.
6)	கட்டுக்கம்பி	— 18 gauge	— 02 மெ. தொ.

கேள்வியுடன் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூ. 100 ஐ இல. 65, கன்னாதிட்டி வீதியிலுள்ள கணக்காளரிடம் செலுத்தி உரிய பற்றுச்சீட்டைப் பெற்று அதன் நிழற்பிரதி இணைக்கப்படவேண்டும். நிழற்பிரதி இணைக்கப்படாத கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

பொறியியலாளர்,
கொங்கிறீற் பகுதி,

வேம்பன் ஒழுங்கை,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

(சி/4217)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
04
—
07
—
1982

மறைவு
22
—
06
—
1997

செல்வன்

விஜயராஜன் விஜயசங்கர்

(யாழ். இந்துக்கல்லூரி மாணவன்)

திதி:- 11 — 07 — 98

தந்தையுடன் தம்பி தங்கை
தவித்திருக்க எம்மை விட்டு
அள்ளை தான் வேண்டுமென்று
அருகணைந்த சங்கரா!
ஆண்டொன்று சென்றாலும்
ஆறுமோ எம் மனது?
மாறிடுமோ உம் நினைவு?
ஆத்ம சாந்திக்கு ஐங்கரனை வேண்டுகிறோம்.

அப்பா, தம்பி, தங்கை.
உறவினர்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (57396)

பதினொராம் ஆண்டு அன்பின் நினைவு

அமரர் செ. திருநாவுக்கரசு

(சமாதான நீதிவான், முன்னாள் பருத்தித்துறை சிங்கர் கொம்பனி முகாமையாளர், முன்னாள் உடுப்பிட்டி கிராமசபைத் தலைவர்.)

அன்னை மடியில்
1920 — 07 — 15

ஆண்டவன் அடியில்
1987 — 07 — 12

திதி: 1998 — 07 — 11

தமிழ்த் தாயின் தவப்புதல்வனாய்
பொது மக்களின் தோழனாய்
பொது ஸ்தாபனங்களின் தலைவனாய்
நீதியின் உறைவிடமாய்
தெய்வத்தின் தூதுவனாய்வாழ்கின்ற 'சிங்கர்' எங்கே?
நினைவு கூருகிறது?

பெருவிருட்சமாக இருந்த நீங்கள் சரிந்து பதினொரு வருடங்களாகியும் உங்கள் நினைவால் நித்தமும் வாடுகின்றோம். உங்கள் ஆத்ம சாந்திக்காக வேண்டி நிற்கும்:

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கரணவாய் வடக்கு,
கரவெட்டி.

(57473)

முக்கிய அறிவித்தல்

கூட்டுறவுச் சங்கங்கள் சட்டவிதி — பிரிவு 18 (1)ன் கீழ் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின்

விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

1998 - 07 - 12

சுப்பையா கணேசமூர்த்தி தலைமை அலுவலகக் கூட்டுறவுப் பரிசோதகராகிய எனக்கு யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அவர்களால் 1998 - 06 - 26 திகதியிட்ட யா/கூ/அ/1639 இலக்க கடிதம் மூலம் கூட்டுறவுச்சங்க சட்டவிதி 18 (1)ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் பின் வரும் நிகழ்ச்சி நிரலைக் கொண்ட யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் ஒன்று என்னால் அழைக்கப்படுகிறது. தங்களை இக்கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். கூட்டம் எனது தலைமையில் நடைபெறும்.

இடம்: பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மண்டபம், கலாசாலை வீதி, திருநெல்வேலி.
நாள்: 1998 - 07 - 12 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: முற்பகல் 10 மணி (புதிய நேரம்)

நிகழ்ச்சி நிரல்

1. மௌன இறைவணக்கம்
2. தலைமை உரை
3. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உரை
4. புதிய நெறியாளர் குழு உறுப்பினர் தெரிவு
5. நன்றியுரை

சு. கணேசமூர்த்தி
தலைமை அலுவலகப் பரிசோதகர்

கூட்டுறவு அலுவலகம்,
18/10, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.
1998 - 07 - 09

குறிப்பு:

1) இக்கூட்ட அழைப்புக் கடிதம் தனித்தனி உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
2) 1997 - 07 - 12 ஆம் திகதி வரை சங்கத்தின் உறுப்புரிமம் பெற்று முழுப்பங்கின் பெறுமதியான நூறு ரூபாவை செலுத்தியவர்கள் மட்டும் கூட்டத்திற்குச் சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுடையவர் ஆவர்.

(சி/4223)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை வசதிகள் இன்றி இயங்கும் திறந்த பல்கலை. யாழ். நிலையம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ். பிராந்திய நிலையம் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி ஒரேயொரு அதிகாரியுடன் இயங்கி வருகின்றது.

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரிக் கட்டடத்தில் இயங்கி வந்த இந்தப் பிராந்திய நிலையம் அப் பகுதியில் வெடி பொருள்கள் இருக்கலாம் என அஞ்சப்படுவதால் இயங்க முடியாத நிலையிலுள்ளது.

தற்பொழுது யாழ். மத்திய கல்லூரி, பருத்தித்துறை வேலாயுதம் மகா வி. ஆகியவற்றில் இந் நிலையம் இயங்கி வருகின்றது.

இந் நிலையத்தின் இயக்குநராக ச. ஆ. ஞானேந்திரன் தனி ஒருவராக இருந்து அனைத்து கடமைகளையும் செய்து வருகின்றார்.

இந் நிலையத் திற்கு குறைந்தது பாதுகாப்பு உத்தியோகத்தர்களும், சிற்றூழியர் ஒருவரும், இரு எழுது வினைஞர்களும், தமிழ் — ஆங்கில தட்டெழுத்தாளர்களும், நூலகர் ஒருவரும் நியமனம் செய்யப்பட வேண்டும் என்று இயக்குநர் தெரிவித்தார்.

(ஐ-5-7)

தப்பி ஓடும் மன நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 11

அங்கொடை மனநோய் வைத்தியசாலையில் இருந்து தப்பி ஓடுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டில் முதல் 6 மாத காலத்திலும் 235 மன நோயாளர்கள் தப்பி ஓடி விட்டனர் என்று மூல்லேரியப் பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பி ஓடும் மனநோயாளர்கள் அங்கொடைப்பகுதியில் பலவிதமான சேதங்களை ஏற்படுத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

கடந்த வாரம் கொத்தட்டுவ என்னும் இடத்தில் இரு மனநோயாளர்கள் கடைகளுக்கு கற்களை வீசி சேதம் ஏற்படுத்தினர்.

அதேநேரம் அங்கொடை மன நோய் வைத்தியசாலையில் 600 சிற்றூழியர்களும், 200 தாதியர்களும் பணியாற்றுகின்றனர்.

(இ-10-3)

ஏழாலை சந்தை அருகே பல மிதிவெடிகள்!

வலி. வடக்கு, ஜூலை 11

ஏழாலை சந்தைக்கு அருகில் உள்ள பாதுகாப்பு அரண் பகுதியில் பல மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதனன்று அப் பகுதியூடாக நீரிறைக்கும் இயந்திரத்தை உருட்டிச் சென்றபோது மிதிவெடி வெடித்ததில் ஒருவர் சிறு காயங்களுக்குள்ளானார்.

அவ்விடத்தில் குப்பை கொளுத்திய சமயமும் மிதி வெடி வெடித்து ஒருவர் சிறுகாயமடைந்தார்.

(ஐ-86)

வட்டக்கச்சிப் பகுதியில் வாந்திபேதி நோய்

வட்டக்கச்சிப் பகுதியில் வாந்திபேதி நோயாளி ஒருவர் இனங் காணப்பட்டதை அடுத்து இரணைமடுக்குளத்தில் இருந்து வட்டக்கச்சி ஊடாகச் செல்லும் வாய்க்கால் மக்கள் பாவனைக்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

கடந்த 6 ஆம் திகதி மன்னார் சாவற்காட்டுப் பகுதியில் இருந்து வன்னிக்கு வந்த நபர் ஒருவர் இரணைமடுக் குளத்தில் இருந்து வட்டக்கச்சி ஊடாகச் செல்லும் வாய்க்காலை தமது உடைகளைக் கழுவுவதற்கும், மலங் கழுவுவதற்கும் பயன்படுத்தினார் என்ற செய்தி வெளியாகியதையடுத்தே இது தொடர்பான தடை அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இவ் வாய்க்காலில் இருந்து நீர் விநியோகம் பெறும் இராமநாதபுரம், வட்டக்கச்சி, பெரியகுளம், கண்டாவளை ஆகிய இடங்களிலுள்ள மக்கள் வாய்க்கால நீரைக் குடிக்கவோ, அதில் குளிக்கவோ, சலவை செய்யவோ வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை வன்னிப் பகுதி பூராகவும் வாந்திபேதி சம்பந்தமான விசேட கருத்தரங்குகள் பரவலாக நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-7)

யாழ். இளைஞருக்கும் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 11

இந்திய அரசாங்கத்தின் உதவித் திட்டத்தின் கீழ் கொழும்பில் நடைபெறவுள்ள, பழங்களைப் பதனிட்டு தகரத்தில் அடைத்தல், வெதுப்பக தொழில், ஆகிய துறைகளிலான பயிற்சி நெறிகளுக்கு யாழ்ப்பாணத்திலிருந்தும் இளைஞர்கள் பங்கு பெறுவதற்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஒழுங்கு செய்துள்ளது.

மேற்படி பயிற்சிகளுக்கு யாழ்ப்பாணத்திலிருந்தும் இளைஞர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற நிர்வாக இயக்குநர் இ. எம். எஸ். பீ. எக்காநாயக்க தெரிவித்துள்ளார்.

(ஐ-ரீ)

பிரதேச மட்ட மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம் ஜூலை 11

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் இன்றும்நாளையும் காலை 8.30 மணி முதல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

யாழ். மாவட்டமேலதிக அரசாங்கஅதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும். இப்போட்டிகளில், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

(ஐ-ரீ-51-100)

திருவாசக விழா

குருமபசிட்டி சன்மார்க்க சபை நடத்தும் திருவாசக விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு இணுவில் கிழக்கு அம்மா அச்சகத்திற்கு அருகில் மன்னவன் முருகந்தப்பு தலைமையில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக தமிழ் பிரிவு சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். சிவலிங்கராசா 'நாட்டார் இலக்கியமும் திருவாசகமும்' எனும் தலைப்பிலும் —

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் நா. வி. மு. நவரத்தினம் 'முல்லைப்பாணி யும் திருவாசகமும்' எனும் தலைப்பிலும் சிறப்புரைகள் நிகழ்த்துவர்.

(ஐ-4)

வயாவிளான் சுதந்திரபுர குடியேற்றத் திட்டத்துக்கு புதிய வீதி அமைப்பு

சுன்னாகம், ஜூலை 11

வயாவிளான் சுதந்திரபுரம் குடியேற்றத்திட்டத்திற்கு புதிய வீதியொன்று அமைக்கப்பட்டு வருகிறது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தின் நுங்கருத் திட்டத்தின் கீழ் இவ்வீதி அமைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் ஒற்றையடிப் பாதையாகக் காணப்பட்ட இப் பாதை அகலப்பாதையாக்கப்பட்டு மூன்று கிலோ மீற்றர் நீளத்துக்கு உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் குட்டியப்புலம், செல்வநாயகபுரம் பகுதி மக்கள் பெரிதும் நன்மையடைவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-27)

அம்பனைப் பகுதியில் கைவிடப்பட்ட காவலரணால் பயிர்ச் செய்கை பாதிப்பு

சுன்னாகம், ஜூலை 11

வலிகாமம் வடக்கிலுள்ள அம்பனை வயல் வெளியையும், வினாக்கை வயல் வெளியையும் ஊடறுத்து அமைக்கப்பட்டு, தற்போது கைவிடப்பட்டுள்ள இராணுவக் காவலரண்களால் விவசாயச் செய்கையை மேற்கொள்ள முடியாதிருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

காவலரண் பகுதியில் மிதிவெடிகள் காணப்படுவதாகவும் – இவை அகற்றப்பட்டால் மட்டுமே பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியுமெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

மிதி வெடிகளை அகற்றி, இப்பகுதியில் விவசாய நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்க வழி செய்யுமாறு விவசாயிகள் சம்பந்தப் பட்டோரைக் கேட்டுள்ளனர். (ஐ-27)

நாடகக் களப் பயிற்சி

சுன்னாகம், ஜூலை 11

நாடக அரங்கக் கல்லூரியினர் நடத்திய நாடகக் களப் பயிற்சி கடந்த புதன், வியாழக்கிழமைகளில் பலாலி ஆசிரிய கலாசாலையில் நடைபெற்றது.

குழந்தை. ம. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இரு முழுநாள் களப் பயிற்சியிலும் அறுபது ஆசிரிய, மாணவர்கள் கலந்து கொண்டனர்.

நாடகத் தயாரிப்பை இலக்காகக் கொண்ட இக்களப் பயிற்சியின் முடிவில் ஐந்து குழுக்கள் பிரிக்கப்பட்டு நாடகப் பிரதியாக்கம் செய்து உடனடியாகவே மேடையேற்றமும் இடம் பெற்றது.

மனதை ஒருமுகப்படுத்துவது, உடலைத் தேவைக்கேற்பப் பயன்படுத்துவது மற்றும் குரல் பயிற்சிகளும் வழங்கப்பட்டன. (ஐ-27)

விளையாட்டு விழா

கொழும்புத்துறை ஜூலை 11

ஞானக்குழந்தை இல்ல இலவச பாலர் பாடசாலை-பாலர் கல்விக்கழகத்தின் மூன்றாவது ஆண்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை ஆசிரியை செல்வி தமயந்தி, இலங்கநாதன் தலைமையில் யாழ். இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை விளையாட்டு மைதானத்தில்நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். இந்து ஆரம்பபாடசாலை அதிபர் வெ. ஞானகாந்தனும், சிறப்பு விருந்தினராக யாழ். கந்தர்மடம் வடமேற்கு கிராம சேவையாளர் கா. சந்திரசேகரமும் கலந்து கொள்வர்.

ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 — 07 — 1967

மறைவு 21 — 06 — 1997

கிருஷ்ணபிள்ளை திருநாவுக்கரசு (கிளி)

திதி: 11—07—1998

ஆறுதல் சொல்ல ஆரிருந்தென்ன — உன்
ஆருயிர் அன்புக்கு ஈடாகுமா?
தேறுதல் சொல்லத் தெய்வம் வந்தென்ன — உன்
திருமுகம் பார்த்தால் போதாதோ?
ஆண்டு ஒன்று ஆயிடினும் பாசமது மாறாது—உன்
நினைவுகளும் மறையாது!

மீளாத்துயில் கொண்ட பாசக் குலக் கொழுந்தே உன் ஆத்ம சாந்திக்காக இறைவன் பாதத்தில் எங்கள் கண்ணீர்ப் பூக்களைச் செலுத்தி ஆறுதல் அடைகின்றோம்.

உன் பிரிவால் துயருறும்:
தாய், தந்தை,
சகோதரர்கள், உற்றார்,
உறவினர்கள்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

(C/4229)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மயில்வாகனம் குணமணி

மலர்வு 27 — 09 — 1928

உதிர்வு 11 — 06 — 1998

ஆறாத் துயரில் எம்மை ஆழ்த்தி விட்டு
ஆழ்ந்த துயில் கொள்ளும் - எம்
அன்புத் தெய்வமே! எம் வாழ்வு
வளம் பெற உங்கள்
உடலை மெழுகாய் உருக்கி
வாழ்ந்த அந்நாளை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்!

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கும்பப்பிள்ளை,
வீரபத்திரர் கோவிலடி,
கோப்பாய் தெற்கு.

(57477)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்கள உத்தியோகத்தர்
திரு. நா. சந்திரபோஸ்
அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி

நகுலம்மா நாகமுத்து

அவர்கள் 10 - 07 - 98 இல் சாந்தா தோட்டம், புலோலி கிழக்கில் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்/ விலைமதிப்பீட்டுத் திணைக்கள ஊழியர்களும், நலன்புரிச் சங்கமும்.

148, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (57498)

மரண அறிவித்தல்கள்

திருமதி

சரஸ்வதி இளையதம்பி

அச்சுவேலி உலவிற்குளம் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி இளையதம்பி அவர்கள் 8-7-98 இல் காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற இளையதம்பியின் அன்பு மனைவியும், கந்தசாமி, நாகரத்தினம், பூபதி, ஞானம்பிகை, வாலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசநாயகம், சாந்தநாயகி (ஜேர்மனி), வேதநாயகி (ஜேர்மனி), சபாநாயகம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசேஸ்வரி (நூலகர்யாழ்.மாநகரசபை) காலஞ்சென்ற இராசரத்தினம், பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), தேவநாயகி (ஜேர்மனி), பரம்தில்லைராசா (தபால் ஊழியர், வல்வெட்டி) ஆகியோரின் அன்புமாமியாரும், பாலகோபி, பாலினி, ரமணன், ஜனகன், ஜவகன், சங்கீதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 10 00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றேன்.

தகவல்:
இராசநாயகம்
(மகன்)

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (57499)

திருமதி

தவமணி வேலுப்பிள்ளை

நவீன்டிலைப்பிறப்பிடமாக, கரணவாய்தோளங்கனை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி தவமணி வேலுப் பிள்ளை கொழும்பில் காலமானார். இவர் காலஞ் சென்ற சு. வேலுப்பிள்ளை (இளைப்பாறிய தபால திபர்) அவர்களின் அன்பு மனைவியும், பகீரதி, உதயகுமார் (Germany), யசோகா, மங்களேஸ்வரி (மேனகா), நேமிநாதன், (கோபு – Germany) அவர்களின் அன்புத் தாயும், தில்லைநாதன் (JEILANIM.M.V. பலாங்கொடை), Dr. சுவேந்திரன் (G.H. கண்டி) அவர்களின் மாமியும், தேனுஷாயினி, குருஷாயினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ் சென்ற சட்டத்தரணி V.S. சிவகுருநாதனின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 12-7-98 அன்று காலை 10. 00 மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:

29 1/1, E.S. Fernando Mawatha, Colombo – 6.

திரு.க. தில்லைநாதன்
(மருமகன்)
திருமதி தி. பகீரதி
(மகள்)

(57495)

திருமதி

நாகமுத்து நகுலம்மா

சாந்தாதோட்டம், புலோலி கிழக்கு, புலோலியைச் சேர்ந்த திருமதி நாகமுத்து நகுலம்மா 10. 7. 98 வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் காலமாகி விட்டார். இவர் காலஞ் சென்ற நாகமுத்துவின் அன்பு மனைவியும், யோகம்மா, சந்திரபோஸ் (விலைமதிப்பீட்டு திணைக்களம் —யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புத் தாயாரும், பொன்னுத்துரை, பாலாம்பிகை அவர்களின் அன்பு மாமியாரும், காலஞ் சென்ற செல்லம்மாவினதும் வவுனிக்குளம் க. சின்னத்துரையினதும் அன்புச் சகோதரியும், ஜெயந்தன் (லண்டன்), ஜெயந்தி சிறீதங்கராஜா (ஆசிரியை), ஜெயக்குமார் (கனடா), கிரீடன் (யாழ். பரியோவான் கல்லூரி). பிரணவன் (யாழ். ஆனைப்பந்தி மெ, மி. து. க. பாடசாலை) ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக, புலோலி கிழக்கு, ஆனை விழுந்தான் மயானத்துக்கு 11- 7- 98 சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
நா. சந்திரபோஸ்
(மகன்)
(57497)

மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு புதிய தலைவர்

கொழும்பு, ஜூலை 11

நீதியரசர் அமிர் இஸ்மாயில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் புதிய தலைவராக ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

நீதியரசர் எல். ஜீ. எச். வீரசேகர உயர் நீதிமன்றத்தின் நீதியரசராக நியமிக்கப்பட்டதால் இந்த வெற்றிடம் உருவானது. [ஐ-10]

சேவைநலன் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 11

ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. அருளானந்தத்தின் சேவை நலன் பாராட்டு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10. 30 மணிக்கு நல்லூர்க் கோட்ட அதிபர் சங்கத் தலைவர் வி. மாணிக்கம் தலைமையில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும். (ஐ-6)



யாழ்ப்பாணம் ஜூலை 11

வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீவிஸ்வலிங்க மகாகணபதி (பன்றிக்கோட்டுப்பிள்ளையார்) கோவில் மணவாளக்கோலவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

பகல் சுவோத்தரசதா (108) சங்காபிஷேகமும் மதியம் 12.30 மணியளவில் மகேசுர பூஜையும் இடம்பெறும்.

மாலை விசேட பூஜை ஆராதனைகளுடன் சித்தி தேவியார் ருது சாந்திவிழா, திருக்கல்யாணம், திருஞ்சல் உற்சவம் என்பன இடம் பெற்று விநாயகப்பெருமான் மணவாளக் கோலத்தில் உலாவருவார். (ஐ-ரீ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 11

அராலி மத்தி, அருள்மிகு உலோலசிட்டி விநாயகர் தேவஸ்தானத்தில் நாளை முற்பகல் 10 மணி முதல் மாலை 4 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம் பெறும்.

நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10. 30 மணி முதல் 11. 34மணிவரைஉள்ள கன்னிலக்ன முகூர்த்த வேளையில் விநாயகப் பெருமானுக்கும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும். (ஐ-ரீ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜூலை 11

ஏழாலை களபாவோடை அருள்மிகு ஸ்ரீ வசந்த நாக பூஷணி அம்மன் ஆலயத்தின் இலட்சார்ச்சனைப் பூர்த்தி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு 1008 சங்காபிஷேகம். பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும். (ஐ-ரீ30)

★ ★ ★

உடுவில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வர சுவாமி தேவஸ்தான கும்பாபிஷேக தின மஹா சங்காபிஷேகம் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது. பகல் சகஸ்ர சங்காபிஷேகம் நடைபெற்று, மாலை 3 மணிக்கு அம்பாளுக்கு நவசக்தி அர்ச்சனையும் நடைபெறும். மாலையில் மீனாட்சி அம்பாள் சுந்தரேஸ்வரர் சகிதம் அலங்கரிக்கப்பட்ட புஷ்பத் தேரில் வீதிவலம் வரும் வைபவமும் இடம் பெறும். (ஐ-30-152)

அதிரடி அரங்கு

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்கு 1997ஓகஸ்டில் தோற்றிய யாழ். இந்துக் கல்லூரி மாணவன் ஒருவன் தாவரவியல் பாடத்துக்கு மீளாய்வுக்கு விண்ணப்பித்த சமயம் 25 புள்ளிகள் கூடுதலாக வழங்கப்பட்டதால் அப்பாடத்தில் அவனது 'C' பெறுபேறு 'A' ஆகியது குறித்து செய்திகள் வெளியாகியது தெரிந்ததே.

யாழ். நகரில் மற்றொரு பிரபல பாடசாலையில் மாணவர்கள் மீளாய்வுக்கு விண்ணப்பித்து இன்னும் முடிவுகிடைக்காமல் காத்திருக்கின்றனர். இது பற்றிக் கேட்டால் ''மீளாய்வு விண்ணப்பத்தை நான் அனுப்பி விட்டேன்; முடிவு வராததற்கு நான் என்ன செய்ய?'' என்று பதில் கேள்வி எழுப்புகின்றார் அதிபர் என விசனம் தெரிவிக்கின்றனர் மாணவர்கள்.

இந்தப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையிலேயே பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம். அப்படி விண்ணப்பிப்பதற்கான காலமும் காலாவதியாகி விட்டது. இனி எப்போது பதில் வந்து எப்போது பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிப்பது என்பதுதான் மாணவர்களின் கேள்வி.

சம்பந்தப்பட்ட அதிபர், மாணவர்களின் மீளாய்வு விண்ணப்பப்படிவங்களை பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பாமல் இருந்து விட்டு, இப்போது கதை அளக்கின்றாரோ என்ற சந்தேகமும் மாணவர்கள் மத்தியில் உள்ளது.

★ ★ ★ ★ ★

கூடாநாட்டில் நீதிமன்றச் செயற்பாடுகளில் தமிழ் இயக்கங்கள் தலையிடுவது குறித்து கடந்த வாரம் இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தோம். அது குறித்து விவரமான பதில் அறிக்கை ஒன்றை ரெலோ அமைப்பு அனுப்பியுள்ளது.

''குற்றப் பணம் அறவிடவில்லை. கொள்ளையடித்த பணத்தை திருப்பிப் பெற்றுக் கொடுக்கவே நடவடிக்கை எடுத்தோம்'' என்றும்—

''நீதிமன்ற விவகாரம் எமக்கு மேலதிக சுமை. எமது நாளாந்த வேலைகளுக்கு மத்தியில் நீதிமன்ற செயலிழப்பால் நமது வேலைப்பளு அதிகரித்துள்ளது. எமது மக்கள் தமது பிரச்சினைகளை — தொல்லைகளை — பொலீஸ், நீதிமன்றங்கள் மூலம் தீர்க்க முடியாத பட்சத்தில் நியாயம், நீதி கோரி நம்மீது நம்பிக்கை வைத்து நம்மிடம் வரும் போது நாம் என்ன செய்ய முடியும்? என்ன, ஏது என்று கேட்கத்தானே வேண்டும்? அன்றி நாமும் ஏனென்று இருக்க முடியுமா? மக்களின் தேவைகளில் — அவர்களின் பிரச்சினைகளில் — நாம் தலையிடாமல் வேறு யார் அந்நியரா தலையிடுவது?'' என்றும் —

அந்த அறிக்கையில் ரெலோ அமைப்பின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

பின்வரும் விடயங்களை அவர்களுக்குத் தெளிவு படுத்த விரும்புகின்றோம்:-

நீங்கள் இப்போது ஜனநாயகக்கட்சி; ஆயுதம் ஏந்திப் போராடும் விடுதலை இயக்கமல்ல. கூடாநாட்டில் உங்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டிருப்பது நீங்கள் உங்களைத் தற்காத்துக் கொள்ளவேயன்றி அதைப் பயன்படுத்தி மற்றையோர் மீது உங்கள் தீர்ப்பைத் திணிக்கவல்ல.

ஜனநாயகக்கட்சி என்ற முறையில் மக்கள் பிரச்சினையில் நீங்கள் தலையிடுவது பொருத்தமானதுதான். ஆனால் மக்களுக்குள் உள்ள பிரச்சினையில் தீர்ப்புச் சொல்லி அதனைப் பலவந்தப்படுத்தி நடைமுறைப்படுத்தும் அதிகாரம் உங்களுக்கு இல்லை. தேவையானால் இணக்கமாக இருவர் உங்களிடம் வந்து பிணக்கைத் தீர்த்து வைக்கச் சொன்னால் நீங்கள் தீர்ப்புக் கூறலாம். அதைவிடுத்து பொலீஸ்காரன் வேலையை நீங்கள் செய்தால் — அரசியல் கட்சியாக்க் செயற்படுவதற்காக வழங்கப்பட்ட தற்காப்பு ஆயுதங்களை வைத்திருக்கும் ஒவ்வோர் அரசியல் கட்சியும் நீதிமன்ற வேலையைச் செய்தால்— அது ''தடி எடுத்தவன் தண்டல்காரன்'' என்ற கதையாகவே முடியும்.

நீதிமன்ற அதிகாரத்தைப் பிரயோகிக்கும் உரிமை ரெலோ இயக்கம் உட்பட தமிழ்க் கட்சிகளுக்கு இல்லை என்று நாம் கருதுவதால்—ரெலோவின் முழு விளக்கமும் அதனடிப்படையில் அமைந்த காரணத்தால்—அந்த விளக்கம் முற்றாகப் பிரசுரமாகவில்லை.

சரி; நீதிமன்ற அதிகாரங்களை தமிழ்க் கட்சிகள் எடுப்பது நியாயம் என்று ஒரு பேச்சுக்கு ஏற்பதாக வைத்தாலும் கூட, அரைக்கரைவாசி முறைப்பாடு இந்த இயக்கங்களுக்கு எதிராக உள்ளனவே? அதற்கு, தீர்ப்பு வழங்குவது யார்? பொது மக்களே வழங்க முன் வந்தால் இயக்கங்கள் பொறுக்குமா?

நாட்டில் வேறு பிரச்சினைகள் 'தலைக்கு மேல் வெள்ளம் போல்' வந்துவிட்டன. விபசாரம், கசிப்பு, நீலப்படம் என்று சமூக ரீரோதச் செயல்கள் பெருக்கெடுத்து விட்டன இவற்றை அடக்குவதற்கு தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு சமூக அமைப்புகளைத் தோற்றுவித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் — விவாகரத்து, அடி-பிடி, சொத்துச் சண்டை பிணக்குசளில் தலையிடுவதை விடுத்து.

★ ★ ★ ★ ★

நாளை உலகக் கிண்ண உதைபந்தாட்ட இறுதியாட்டம். நாளை நள்ளிரவு [நாளை மறுதினம் அதிகாலை] ஒரு மணியளவில் ஆட்டம் தொடங்குகின்றது. அதனை தொலைக்காட்சியில் கண்டுகளிக்க கூடாநாட்டு உதைபந்தாட்டப் பிரியர்கள் ஆவலாக உள்ளனர். ஆனால் மின்சாரம் கிடைக்குமா என்பதுதான் கேள்வி.

நள்ளிரவு ஒரு மணி என்பதால் வீடுகளில் வேறு மின்சார பாவனை அதிகமாக இருக்காது. எனவே ஒன்றுவிட்ட ஒரு நாளுக்கு என மாறி மாறி இப்போது வழங்கும் மின்சாரத்தை நாளை மறுதினம் அதிகாலை ஒரு மணிமுதல் அனைத்துப் பாவனையாளர்களுக்கும் வழங்கினால் என்ன? மின் விநியோகம் உள்ள வீடுகளில் வீட்டுக்கொரு தொலைக்காட்சி இயங்கினால் மின் விநியோகப் பளு அதிகரித்து விடாது என நினைக்கிறோம். உதைபந்தாட்டப் பிரியர்களின் ஆவலை இலங்கை மின்சாரசபை பூர்த்தி செய்யுமா?

மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/கொக்குவில்
ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை

பழையமாணவர் சங்கம்
பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் 12 - 07 - 98 ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு (புதியநேரம்) அதிபர் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

குறிப்பு; வைரவிழா, மலர்வெளியீடு சம்பந்தமாக கலந்துரையாடவுள்ளதால் சகல பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தலைவர் (சி/4250) செயலாளர்

யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

(சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்)

பெண்களுக்கு விடுதி வசதியுண்டு.
(10) பத்து பெண்களுக்கு மாத்திரம்
சேரவிரும்புவோர் உடன் விண்ணப்பிக்கவும்.

(57495) — நிர்வாகி

உ
கொக்குவில் தாவடி வேம்படி
முருகமூர்த்தி ஆலய

அலங்கார உற்சவ விஞ்ஞாபனமும் சமய அறிவுப் போட்டி பரிசளிப்பு விழாவும்

1998-07-11 நேரம் மாலை 3 மணி

நிகழ்ச்சி நிரல்

மங்கள இசை
பரிசளிப்பு வைபவம்
ராகம் இசைக் குழுவின்
இன்னிசைக் கானங்கள்

பரிசு பெறுவோர் விவரம்;

கீழ்ப் பிரிவு

முதலாம் பரிசு
சி. கபிலன் — கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்

இரண்டாம் பரிசு
கு. கஜீதா — யூனியன் கல்லூரி தெல்லிப்பழை

மூன்றாம் பரிசு
சி. கஜேந்தினி — கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்

ஆறுதல் பரிசுகள்
க. சரிதா — இந்து மகளிர் கல்லூரி
சி. கயூரி — மகாஜனக் கல்லூரி
கோ. பிரிந்தா — வேம்படி மகளிர் கல்லூரி
ச. விமேஸ் — கொக்குவில் இந்துக்கல்லூரி
து. சந்திரிகா — கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியசாலை
து. பிறேமிலா — சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலை
சி. கோமதி — கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டிதவித்தியாசாலை

மத்திய பிரிவு

முதலாம் பரிசு
ம. சங்கீதா — வயாவிளான் மத்திய வித்தியாலயம்

இரண்டாம் பரிசு
சொ. கயந்தினி — இராமநாதன் கல்லூரி

மூன்றாம் பரிசு
சி. கீத் — யூனியன் கல்லூரி தெல்லிப்பழை

ஆறுதல் பரிசுகள்
சி. நிரஞ்சினி — வயாவிளான் மத்திய வித்தியாலயம்
கு. குணராதிகா — சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்
அ. அகிலா — கொக்குவில் நாமகள் வித்தியாலயம்
சி. சிவப்பிரியா — மகாஜன கல்லூரி தெல்லிப்பழை
லோ. கேஜினி — கொக்குவில் இந்துக்கல்லூரி
த. ஸ்ரீதேவி — வயாவிளான் மத்திய வித்தியாலயம்
இ. அணுசியா — கொக்குவில் இந்துக்கல்லூரி

மேற் பிரிவு

முதலாம் பரிசு
ம. தர்சிகா — கொக்குவில் இந்துக்கல்லூரி

இரண்டாம் பரிசு
சி. கார்த்திகாஜினி — கொக்குவில் இந்துக்கல்லூரி

மூன்றாம் பரிசு
சு. யமுனா — கொக்குவில் இந்துக்கல்லூரி

ஆறுதல் பரிசுகள்
ம. தர்மினி — கொக்குவில் இந்துக்கல்லூரி
க. சோபனா — வைத்தீஸ்வராக் கல்லூரி
இ. கஜேந்திரன் — யூனியன் கல்லூரி
சு. கிருபாதயாபரம் — கொக்குவில் இந்துக்கல்லூரி
செ. தேவகி — கொக்குவில் இந்துக்கல்லூரி
செ. பிரசன்னா — கொக்குவில் இந்துக்கல்லூரி
ச. ஜெகசோதி — யூனியன் கல்லூரி

- விழா அமைப்பாளர்கள்

[55449]

சிவா
திரையில்
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
விஜயகாந், ப்ரிதா
நடித்த
தர்மா
(புதிய வெளியீடு)
தினசரி:- 10-30, 2-30
(சி/4248)

நாகம்ஸ்
சினிமா
சுன்னாகம்.
அகல வெண் திரையில்
11 - 07 - 98 மட்டும்
சிறுவர், பெரியோர் அனைவரும் பார்த்து ரசிக்கக்கூடிய படம்
TITANIC
1917 ஆம் ஆண்டு நடந்த உண்மைச் சம்பவம்.
காட்சிகள்:- 10-30, 2-30
(57504)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
இன்று மட்டும்
நாசர் - மாதவி நடித்த
தாய் உள்ளம்
ஞாயிறு, திங்கள்
விஜய் நடித்த
செல்வா
செவ்வாய், புதன்
சிவாஜி நடித்த
பார் மகளே பார்
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070 - 212223
(57502)

சோபிகா திரை
பருத்தித்துறை வீதி,
ஆவரங்கால்.
(மூன்று நாள்கள் வரை)
விஜயகாந், ப்ரிதா
நடித்த
தர்மா
10 - 30, 2 - 30
(சி/4249)

ராஜா டாக்கீஸ்
யாழ்ப்பாணம்.
மம்முட்டி - அஞ்சு
கோசி, மஞ்சுளா
விஷ்ணுவரதன் நடித்த
சத்ரிய வம்சம்
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/4222)

யாழ்.
றீகல் வெண் திரையில்
தினசரி- 10-30, 2-30
சரத்குமார் (இருவேடம்), சிம்ரான், ஸ்ரீவித்தியா, விஜயகுமார் நடித்த
நட்புக்காக
(புதிய வெளியீடு)
சனி, ஞாயிறு
காலை-8-30 மாலை 5மணி
DEEP RISING
(பாம்புப் படம்)
(57515)

சைவ வித்தியா விருத்திச் சங்க
சிறுவர் நிறைவாழ்வு இல்ல நிதிக்காக
வழங்கும்

கலை விருந்து

'காலம் தந்த கோலமகள்'
(நாட்டிய நாடகம், யாழ். பல்கலைக்கழக வரலாற்றுக் கழகம்)

'நாட்டார் இசைமாலை'
(யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம்)

காலம்: 12-07-1998 ஞாயிறு பி. ப. 2,30 மணி
இடம்: இளங்கலைஞர் மன்றம், சட்டநாதர் வீதி.
நுழைவுச் சீட்டுகள் வாயிலிற் பெறலாம்.
(ரூபா 250/-)

பேராசிரியர்
வீ. சகாதேவசங்கரி — அ. சண்முகதாஸ்
பொருளாளர் (சி/4245) தலைவர்

மரண அறிவித்தல்கள்

பரமானந்தன் அசாந்த்

சங்குவேலி தெற்கைச் சேர்ந்த செல்லத்துரை பரமானந்தன்-செல்வரதி தம்பதிகளின் இளையமகன் அசாந்த் 10- 7- 98 அன்று (வயது $1\frac{1}{2}$) காலமாகிவிட்டார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11-7-98) சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் சங்குவேலி இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ஆனந்தன்
(உரிமையாளர்
(57513) வீடியோ, ஆனந் ஸ்ரூடியோ மானிப்பாய்)

தம்பித்துரை அழகம்மா

கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்ட தம்பித்துரை அழகம்மா நேற்று (10-7-98) காலமாகி விட்டார்.

இவர் தம்பித்துரையின் அருமை மனைவியும், பூபாலசிங்கம், காலஞ்சென்ற வன்னியசிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், சின்னமணி, வசுமதி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, இராசையா, முத்தையா ஆகியோரின் சகோதரியும், சத்தியதேவன், சுசிலா, கமலநாதன், ஜெயமாலா (டென்மார்க்), சசிகலா, சோபனா, சிறிதரன் (பிரான்ஸ்), ஜெயக்குமார் (சுவிஸ்), அஜந்தன், நிசாந்தன்(கனடா), ஜெனார்த்தன், துவாரகா, துவாரகன் ஆகியோரின் பேர்த்தியும், அன்னப்பிள்ளை, பொன்னுப்பிள்ளை, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும், இரத்தினேஸ்வரி, சிவபாக்கியம் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (11-7-98) நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் கோண்டாவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
இராமகிருஷ்ணா வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
த பூபாலசிங்கம்
(மகன்)
(57514)

திருமதி
பூமணி ஜோசப்பிரான்சிஸ்

12/1, புகையிரத வீதி, கந்தர்மடத்தைச் சேர்ந்த திருமதி பூமணி ஜோசப் பிரான்சிஸ் (இளைப்பாறிய உப அதிபர், யா/ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன்) 10-7-98 இல் நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் ஜோசப்பிரான்சிஸின் (முன்னாள் அதிபர், பத்தனை, த. வி.) அன்பு மனைவியும், திருமதி றெஜி இரட்ணம் (ஆசிரியை, கன்னியர்மடம் மகா வித்தியாலயம்), றெக்ஸ் (ஜேர்மனி), திருமதி றஜனி கிளெமென்ற் (ஆசிரியை, பத்தனை, த. வி.), றோய் நேசராஜ் (ஆசிரியர், நல்லூர் ஸ்தான சீ. சீ. த. க. பாடசாலை), றூபி ஜோய் (ஆசிரியை, கன்னியர்மடம், ம. வித்தியாலயம்), றெஜினோல்ட் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், இரட்ணம் (விரிவுரையாளர்), பாமினி, கிளெமென்ற் (கொமர்ஷல் கொம்பனி, ஹற்றன்), சிவகுமாரி (ஆசிரியை சென் பெனடிக்ற்), தீபா (நோர்வே) ஆகியோரின் மாமியாரும், றஜிந், ஹரிந், கிளிங்டன், நிலோஜி, ஷிரோமி, ஜொய்சி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
(57509) கணவர், பிள்ளைகள்

சரவணமுத்து இராசரத்தினம்
(Retired P. H. I., கைதடி)

அமரர் சரவணமுத்து இராசரத்தினம் அவர்களின் இறுதிக்கிரியைகள் நேற்றைய உதயன் பத்திரிகையில் 11-07-1998 சனிக்கிழமை நடைபெறும் என்று பிரசுரமாகியிருந்தது. தவிர்க்கமுடியாத காரணத்தால் அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12-07-98 ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெறும் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
இராசரத்தினம் சரவணமுத்து
கைதடி வடக்கு, கைதடி. (மகன்) (57506)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

பூப்புனித மங்கள நீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் வெகுதானிய வருடம் ஆனி மாதம் 29 ஆம் நாள் (13-07-98)
திங்கட்கிழமை நண்பகல் 12.24 முதல் 1.24 வரையுள்ள
துலா லக்கின சுப முகூர்த்தத்தில்

ஏமது கெ புத்திரி திருநிறைசெல்வி

மாலினி (மாலா) அவர்களுக்கு

பூப்புனித நீராட்டுவிழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- இவ்வழைப்பை அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தங்கள் நல்வரவை விரும்பும்
திரு. செ. மார்க்கண்டுவும்
(ன்னாள் தலைவர், பளை ப.நோ.கூ.ச.)
பாரியார் மா. அன்னலட்சுமியும்.

இத்தாவில்.
பளை.

(57236)

ஜூலை 1998

இன்னிசை நற்செய்திப் பெருவிழா

மீண்டும் உங்களுடன்

தந்தை பெர்க்மான்ஸ்

இயேசுகிறிஸ்துவினால் உங்களுக்கு
சமாதானமும் விடுதலையும் கொண்டுவரும்

"ஆறுதலின் தொனி"

ஆறுதலளிக்கும் தேவ கானங்கள்; விசேட ஜெபங்கள்

இடம்	காலம்	நேரம்
செல்லமுத்து விளையாட்டரங்கு மானிப்பாய்	09 - 11	பி. ப. 3-30
★ துரையப்பா விளையாட்டரங்கு, யாழ்ப்பாணம்.	15 - 17	பி ப. 3.30
★ செங்குந்தா இந்துக்கல்லூரி மைதானம், கல்வியங்காடு/ நல்லூர்.	18 - 19	பி.ப 3 30

உங்களையும் அன்புடன் அழைக்கின்றோம்!
பிரவேசம் இலவசம்.

(சி/4206)

கஜமுகா ரேட் சென்ரர்

இல. 281, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்

- ரேடியோ வகைகள்
- டெக் வகைகள்
- வீடியோ கசற்
- ரெலிபோன் வகைகள்
- போட்டோஸ்ரற் இயந்திரம் (Sharp SF 1016)
- பிளாஸ்டிக் பொருள்கள்
- T.V. வகைகள்
- வீடியோ கமரா
- ஓடியோ கசற்
- பிளாஸ்டிக் வாளிகள்

C. I. C யின் தயாரிப்பான

அல்கத்தீன் பைப் 2", றபர் சிலிப்பர் வகைகள் (Ransers)
விவசாய இரசாயனப் பொருள்கள் ஆகியவற்றை
மொத்தமாகவும் சில்லறையாகவும் நீதானவிலையில் பெற்றுக்கொள்ளவும்
மற்றும்
வெளிநாட்டு/ உள்நாட்டுத் தொலைத் தொடர்புகளை
உடனுக்குடன் பெற்றுக்கொள்ளவும்

கஜமுகா ரேட் சென்ரர்

இல.281, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 021 - 2042

(57464)

கிளிநொச்சியில் மோதல்

யாழ்ப்பாணம், ஜூலை 11

கிளிநொச்சி முன்னணிக் காவலரண் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் மோதல் ஒன்று இடம்பெற்றதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மோதலில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருவர் உயிரிழந்ததாகவும் —

சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது. (உ-3)

மாணவர் ஒன்று கூடல்

சாவகச்சேரி, ஜூலை 11

மட்டுவில் சந்திரபுரம் ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய உயர்தர மாணவர்களின் ஒன்று கூடல் இன்று காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் க.பொ.த உயர்தர மாணவர் மன்றத் தலைவெ. மயூரன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக புவியியற் துறை விரிவுரையாளர் கா.குகபாலனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. கைலைநாதனும் கலந்து கொள்வர். (உ-31)

சாரணர் ஒன்று கூடல்

சாவகச்சேரி, ஜூலை 11

கிளிநொச்சி மாவட்ட சாரணர் கிளைச் சங்கம் - தென்மராட்சி - பளைப் பிரிவுகளின் ஒன்றுகூடல் இன்று காலை 11.30 மணிக்கு கைதடி நவீன்ட் பாடசாலையில் தென்மராட்சிப் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளர் நா. சுந்தரலிங்கம் கலந்து கொள்வார். (இ-31)

1061 பட்டதாரி ..

(முதலாம் பக்கத் தொடர்)

கோணமலை — 46, கல்முனை — 124, மன்னார் — 29, முல்லைத்தீவு — 28, வவுனியா — 28, கிளிநொச்சி — 23.

மொத்தம் 814 பேருக்கு நியமனம் வழங்கப்படுகிறது. அத்துடன் பிரதேச செயலகங்களில் பணிபுரிகின்ற 124 பட்டதாரிகளுக்கும் ஆகிரிய நியமனம் வழங்கப்படுகிறது. 124 சிங்கள பட்டதாரி ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்குவதில் காட்டப்பட்ட கால தாமதம் குறித்து செய்தியாளர்கள்டிவகலாலா விடம் கேட்டபோது—

"யாழ்ப்பாணத்திலிருந்து நேர்முகப்பரீட்சை விவரங்கள் தாமதமாகக் கிடைத்தன. தபால் போக்குவரத்து சீராகாத நிலை மற்றும் எமது அமைச்சு கணனிகளில் தாமதமான டணி ஆகியன காரணமாகவும், எமது சக்திக்கு அப்பாற்பட்ட காரணங்களாலும்நியமனம் வழங்குதலில் தாமதம் ஏற்பட்டது" என்று விளக்கினார்.

வேலையற்ற பட்டதாரிகள் நடத்திய போராட்டம், பாடசாலை மாணவர்கள் தாக்கப்பட்ட விவகாரம் குறித்தும் —

பதவி துறப்புப் பற்றி மாகாணசபையில் பரவிய செய்தி குறித்தும் —

டிவகலாலா எதுவும் குறிப்பிடவில்லை என்று எமது செய்தியாளர் அறிவிக்கின்றார். (உ-3)

ச. ச. நிலைய பொன்விழா

மேலைப் புலோலி சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலைய பொன்விழாவும், 91 ஆவது ஆண்டு நினைவு விழாவும், மலர் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் காலை நிகழ்வுக்கு நிலையத் தலைவர் அ. துரைசிங்கம் தலைமை வகிப்பார். பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் கலாநிதி க. குணராசாவும், விசேட விருந்தினராக யாழ். மேலதிக நீதிவான் மு. திருநாவுக்கரசுவும், விசேட விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வ. கிருஷ்ணசாமியும் கலந்து கொள்வர்.

மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வுக்கு சட்டத்தரணி ந. தங்கராசா தலைமை வகிப்பார். விழாவில், யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறைத் தலைவர் கலாநிதி நா. ஞானகுமாரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வர். மலர் வெளியீட்டைத் தொடர்ந்து 'மனித வாழ்வை மேம்படுத்துவதில் பெரும் பங்கு வகிப்பது அறிவா? ஒழுக்கமா?' என்னும் தலைப்பிலான பட்டிமன்றமும் 'சக்தியின் சபதம்', 'பலதும் பத்தும்', 'அரிச்சந்திர மயான காண்டம்' போன்ற நாடகங்களும் இடம் பெறவுள்ளன. (ஐ-190)

லங்கா சிமெந்து ஊழியர் சம்பளம்

லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களின் ஏப்ரல் முதல் மூன்று மாதச் சம்பளக் கொடுப்பனவு நாளை மறுதினம் திங்கட்கிழமையும், பின் செவ்வாய்க்கிழமையும் காலை 9 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை வர்த்தகவங்கியின் யாழ். கிளையில் வைத்து வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பாலர் விளையாட்டு விழா

கைதடி தெற்கு அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் இல்ல விளையாட்டுப் போட்டி பொ. செல்வராசா தலைமையில் இன்று பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ளது.

அறவழிப் போராட்டக் குழுவின் கல்வி ஆலோசகர் கே. கோபாலகிருஷ்ணன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

பயிற்சியை...

(முதலாம் பக்கத் தொடர்)

கப்படும் எனவும் உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வவுனியா கல்விக் கல்லூரியில் முதலாவது அணியில் சுற்றை நெறியை முடித்துக் கொண்ட 97 மாணவர்களுக்கு ஏற்கனவே நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்பொழுது இரண்டாவது அணியில் சுற்றை நெறியை முடித்துக் கொண்ட மாணவர்களுக்கே இந்த நியமனங்கள் வழங்கப்பட உள்ளன. [ஐ-9]

ஓகஸ்ட்...

(முதலாம் பக்கத் தொடர்)

தும் விஸ்தரிக்கப்படலாம்.

அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலை நடத்துவதென்ற உறுதிமொழியை ஐ.தே.கவுக்கு வழங்கி அதனடிப்படையில் தற்போதைய மாகாணசபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கும் அரசு முயன்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-10-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 551 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பதிப்பகத்தில் 11-07-1998 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
Public Library

தினசரி சுதந்திரன்

11 — 07 — 1998 சஞ்சீவி

றெனி மூக்குக் கண்ணாடி அகம்



உங்கள் கண்களைச் சரியாக பரிசோதித்து கண்ணாடி களை உடன் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

றெனி மூக்குக் கண்ணாடி அகம்
இல. 288 நாவலர் வீதி, (பிரதேச செயலகம் முன்பாக)
ஆனைப்பந்தி, சாவகச்சேரி.
யாழ்ப்பாணம்.
(சி/4197)

தங்கக் கிண்ணத்துக்காக நாளை நடக்கும் 'உதை' வீரா!

நாளை — ஜூலை 12— உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் இறுதி யாட்டம் பிரான்ஸின் சென். டெனிஸ் நகரில் நடைபெறுகிறது. கிண்ணத்தைத் தட்டிச் செல்வ இருப்பவர்கள் யாரோ? மீண்டும் பிரேஸிலா? அல்லது சுற்றுப் போட்டியை நடத்தும் பிரான்ஸா?

முடிவு நாளை நள்ளிரவுக்குப் பின் தெரிந்து விடும்.

கடந்த 30 நாள்களுக்கும் மேலாக பிரான்ஸில் நடை பெறும் இத் தொடரினால் உலகம் முழுவதும் ஒரே உதை பந்து அலை; எங்கும் இதே பேச்சு. கிரிக்கெட் போன்ற நாள் கணக்கில் ரசிக்காமல் இரண்டு மணித்தியாலங்களில் விறுவிறுப்பாக ஓடிவிடும்; முடிவும் வெளிப்பட்டு விடும்.

இறுதியாட்டம் முடிந்ததும் வெற்றி பெற்ற அணிக்கான உலகக் கிண்ணம் பல்லாயிரம் ரசிகர்களின் கரவொலிக்கு மத்தியில் வழங்கப்படும். அதுவும் உலக கிண்ண ஆட்டங்களை பொறுத்த வரையில்

காணாமல் போன முன்னைய கிண்ணம் இதுதான்

போது ஆட்ட முடிவில் பலரும் வெற்றிக் களிப்பில் மிதக்க வேளையில் பந்து காணாமற்போன சேதி வெளி வந்திருந்தது.

இருக்கக் கூடாது என்பது சட்டதிட்டம். அந்த விளையாட்டை பணம் சம்பாதிக்கும் தொழிலாகக் கொள்பவர்கள் ஒலிம்பிக் போட்டி

உலகக் கிண்ண உதைபந்தாட்டச் சரித்திரத்தில் முதலாவது கோலை — 1930 இல் உருகுவேயில் நடைபெற்ற முதலாவது போட்டித் தொடரில் — அடித்த பிரான்ஸ் நாட்டு வீரர் லூலியன் லோறன்ட். அப்போதைய உலகக் கிண்ண மாதிரி உருவுடன் 1950 இல் எடுத்த படம் இது

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் (Fedaration of International Football Associations) உலகக் கிண்ணச் சுற்றுப்போட்டிக்கு என வழங்கப்பட்ட உலகக் கிண்ணம் கூட களவு போகத் தவறவில்லை.

உலகக் கிண்ணத்தின் சரித்திரம்

இந்த சரித்திரம் 1928ஆம் ஆண்டிலேயே தொடங்கி விட்டது

உலகக் கிண்ணப் போட்டிகளுக்கும் ஒலிம்பிக் போட்டிகளுக்கும் இடையில் முக்கிய மான அடிப்படை அம்சத்தில் வேறுபாடு உண்டு.

ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றுபவர்கள் சம்பந்தப் பட்ட விளையாட்டுக்களை, தொழிலாகக் கொண்டு பணம் சம்பாதிப்பவர்களாக

யில் பங்குபற்ற அனுமதிக்கப் படமாட்டார்கள்.

ஒலிம்பிக் போட்டியில் ஒரு நிகழ்ச்சியில் வெற்றியீட்டி பதக்கம் பெற்றவர், அதற்கு முன்னர் விளையாட்டு ஒன்றைத் தொழிலாகக் கொண்டு அதற்காக வேதனம் பெற்றவர் என்று நிரூபிக்கப்பட்டால் அவரது வெற்றி பின்னர் தள்ளுபடி செய்யப் பட்டு வழங்கப்பட்ட பதக்கம் பறிமுதலாகும்.

மு. சிவநேசன்

இக்காரணத்தினால் உதை பந்தாட்டம் முதல் டெனிஸ் வரை விளையாட்டுக் களால் பெரும் பணம் சம் பாதிக்கும் முன்னணிப் பிரமுகர்கள், ஒலிம்பிக் போட்டி களில் பங்குபற்றும் வாய்ப்



பிரான்ஸின் சென் டெனிஸில் நாளை இறுதி யாட்டம் நடைபெறும் புதிய தேசிய ஸ்டேடியம் இதுதான் என்பதையும் பேர் ஆட்டத்தை நேரில் கண்டுகளிக்க இருக்கைகள் வசதி இந்த மைதானத் தில் உண்டு.

பைபும் பெருமையையும் இழந்து வந்தனர்.

இந்தப் பணம் காய்க்கும் மரங்களாகவே ஒலிம்பிக் போட்டிகளுக்கு வெளியே, "உலகக் கிண்ணம்" என்ற பெயரில் தனியாக ஆட்டங் களை சர்வதேச உதைபந் தாட்ட சம்மேளனம் தோற்றுவிக்க வேண்டிய தாயிற்று.

சர்வதேச ஒலிம்பிக் குழு வின் சட்டதிட்டங்களுக்கு ஒத்துப் போகமுடியாததால் 1928 இல் அம்ஸ்டடாமில் கூடியசர்வதேசஉதைபந்தாட் டச் சம்மேளனம், இரண்டு ஆண்டுகள் கழித்து சர்வதேச உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றைத் தனியாக நடத்துவது என்ற முடிவுக்கு வந்தது. அந்த வரிசையில் முதல் பிரசவம்தான் உருகு வேயில் நடந்த முதலாவது உலகக்கிண்ண உதைபந்தாட் டமாகும்.

உலகக் கிண்ண உதைபந் தாட்டச் சுற்றுப் போட்டி

இந்தக் கிண்ணத்துக்கான நாளைய மோதல்

களில் முன்னணியில் திகழும் நாடுகளில் உள்ள பிரபல வீரர்கள் பலரும் உதைபந் தாட்டத்தை ஒரு தொழிலாகக் கொண்டு அதன் மூலம் பெரும் பணம் சம்பாதிக்கும் கோடீஸ்வரர்கள். இவர்கள் ஒலிம்பிக்போட்டிகளில் விளை யாட அனுமதிக்கப்படமாட் டார்கள்.

இந்தக் காரணத்தினால் உலகக் கிண்ண உதைபந் தாட்டப் போட்டிகளில் முன் னணியில் திகழும் அணிகள் ஒலிம்பிக் போட்டிகளில் சோபிக்கமுடியாமல் போகின் றன.

(XI ஆம் பக்கம் பார்க்க)

கருத்துக் கலசம்

கோபமுறாதீர்!

ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம்— என்பதுமுதுமொழி.

கோபம் ஒருவனை அவனது சுயநிலையிலிருந்து மாற்றி— சுயநினைவை குன்றச் செய்து —தீமைகளை, கெடுதல்கள் செய் யத் தூண்டுகின்றது.

கோபக்காரன் — அடிக்கடி கோபம் கொள்ளும் இயல்புள்ள வன். அதனால் மற்றவர்களுக் குத் தீங்கிழைப்பவன். மற்றவர் களின் நல்லாலோசனையை, புத்திமதியை அவன் கேட்கவும் மாட்டான்.

மன அலைவின்மை இல்லாத — மனஅமைதி உள்ள — மனச் சாந்தம் — உள்ள ஒருவனா லேயே நல்லதையும் பொல்லா தையும் பிரித்து உணர முடி யும். மனச்சாந்தம் உடைய வனாலேயே உகந்த கருத்துக் களையும் கோட்பாடுகளையும் உய்த்துணர இயலும் மன அலை வுள்ள, மன அமைதியற்ற வனால் எந்த விடயத்தின் மீதும் ஒருமுகப்படுத்தி சிந்தனையைச் செலுத்தி செயற்பட முடியாது.

நாளாந்த வாழ்க்கையில் கோபக்காரர்கள் பல கஷ்டங் களையும் பின்னடைவுகளையும் சந்திக்க நேரிடும். கோபம் பொறாமையாக மாறி மற்றவர் களுக்குத் தீங்கிழைக்க ஏது வாகிறது.

கோபத்தை அடக்கிக்கொள் ளப் பழகுவது வாழ்க்கையில் வரக்கூடிய பல கஷ்டங்களை நீக்கும். கோபம் கொள்ளும் இயல்புடையோர் அதன்கெடுதல் களை உணர்ந்து தாமே திருந் திக் கொள்ள வேண்டும். மற்ற வர்களால் அவர்களைத்திருத்து வது மிகவும் கடினம்.

கோபம் கொள்ளும் பழக்கத் திலிருந்து நீங்குவதற்கு மன தில் அமைதியை வளர்ப்பதற் கான பயிற்சி அவசியம். மனம் அங்கும் இங்கும் அலையாது ஒரு முகப்படுத்திச் செயலாற்றும் பயிற்சியும் தேவை. தனது கோபத்தின் விளைவினால் மற் றவர்களுக்கும், ஏன் தனக்கும் ஏற்படக் கூடிய பாதகங்களை, பாதிப்புகளை ஆற அமர இருந்து சிந்திக்கவேண்டும். அவ்வாறு சிந்திக்கச் சிந்திக்க அதிலிருந்து விடுபட வேண்டும் என்ற உணர்வு, மனமாற்றம் உண்டாகும்.

மற்றவனது பிழைகளைப் பொறுத்துக்கொள்ளப் பழகி னால், அதற்கான மனப்பக்கு வத்தைவளர்த்துக்கொண்டால், வளர்க்க முயற்சித்தால் கோபக் காரன் என்ற பெயரை மாற்றிக் கொள்ள முடியும்.

கோபக்காரன் எப்போதும் ஆபத்தானவன். அவன்பாதகம் செய்யாமல் தடுப்பதற்கு அவ னிடமிருந்து தூர விலகிக் கொள்வதே சிறப்பு.

இத்தகையவர்களால் ஆன்ம ஈடேற்றத்துக்கான எதையும் இயற்ற முடியாது என்று ஞானி கள் கூறியுள்ளனர் ஆன் மாவைப் புனிதப்படுத்துவதற்கு ஒரு முகப்படுத்திய சிந்தனை தேவை. அது அறவே இல் லாத கோபக்காரன் அதனைக் கிட்டவும் நெருங்க முடியாது.

கோபம் கொள்ளாதே; நாசம் செய்யாதே — என்ற மனக் கருத்து எல்லோர் மனங்களி லும் விதைக்கப்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மணிப் புதை குழிகளைத் தேடுவதில் அரசின் உடனடிச் செயற்பாடு தேவை

யாழ்ப்பாணத்து மக்கள் என்றுமே கஷ்டங்களையும் துன்பங்களையும் அதன் வாயிலாக கவலையையும் அனுபவிக்க வேண்டிய துர்ப்பாக்கியம் நீங்குவதாக இல்லை.

தனிப்பட்ட ரீதியில் குடும்பங்களுக்கு வரும் இடர்கள், அதன்வழியான சோகம்ஆகியவற்றைமட்டும்நாம் குறிப்பிடவில்லை, குடாநாட்டு மக்கள் அனைவருக்குமே பொதுவாக வரும் கஷ்டங்களையும், கவலைகளையும், அச்சங்களையுமே கருதுகிறோம் வாராந்தம், நாளாந்தம் என்று புதிய புதிய கஷ்டங்களும் கவலைகளும் சேர்ந்து கொள்கின்றன.

அந்த வகையில் யாழ். குடாநாட்டு மக்களின் இன்றைய கவலை, செம்மணிப் புதைகுழிகள் பற்றியதே. கிருஷாந்தி, அவரது தாயார் சகோதரன், அயலவர் படுகொலை செய்து புதைக்கப்பட்ட செம்மணிப் பிரதேசத்தில் மேலும் 400 பேர் கொலை செய்து புதைக்கப் பட்டார்கள்; அந்த புதைகுழிகளைத் தன்னால் காண்பிக்க முடியும் என்று கிருஷாந்தி வழக்கின் முதலாவது எதிரியான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச நீதிமன்றத்தில் தெரிவித்த தகவல் குடாநாட்டு மக்களை மிகவும் கலங்கவும் கவலை கொள்ளவும் வைத்துள்ளது.

அரசாங்கப் படையினரால் கைது செய்யப்பட்டும், விசாரணைக்குக் கூட்டிச் செல்லப் பட்டும் காணாமற் போன நூற்றுக் கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு என்ன நடந்திருக்குமோ என்ற அச்சத்தால் இதுவரை வாடிய மக்கள், புதிய தகவல் கேட்டு இடிந்து போயுள்ளார்கள். மிகக்குறிப்பாகக்கடந்தஇரண்டு வருடங்களாக தமது பிள்ளைகள், உறவினர்கள் உயிரோடு இருக்கிறார்கள் என்ற ஒரு வகை நம்பிக்கையுடன் நாள்களை நகர்த்தி வந்த பெற்றோர்கள் மக்கள் இப்போது அலைவிடைப்பட்ட புழுக்கள போல விநாடிக்கு விநாடி துடித்துக் கொண்டிருக்கிறார்கள். காணாமற் போன இளைஞர், யுவதிகள் குறித்து கடந்த 24 மாதங்களாக ஓர் எழுத்துத் தகவல் தானும் அரசாங்கம் தெரிவிக்கவிலலை என்பதனையும், கிருஷாந்தி வழக்கு எதிரி—குற்றவாளி தெரிவித்த தகவலையும் பொருத்திப் பார்க்கும் ஏனைய மக்கள் படையினரின் கொடுமையை நினைத்து தமக்குள் அழுது கொண்டிருக்கிறார்கள்; தமிழர்கள்—தமிழ் இளைஞர்கள்—சிங்கள அரசுகளால் அழிக்கப்படுவதற்கென்றே பிறந்தவர்களா என்று கேட்டு மனம் வெதும்புகிறார்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் 1996 ஆம் ஆண்டு ஜூலை, ஒகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் காணாமற் போனவர்கள் குறித்து இத்தனை மாதங்களாக தகவல் கொடுக்க முடியாத நிலையில் அரசு தடுமாறுகிறது என்றால்—

அது ஒரு சோகமான முடிவாகவே இருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றிய போதிலும்—

அப்பனே, கடவுளே! எங்கள் பிள்ளைகளுக்கு அப்படி நேர்ந்திருக்கக் கூடாது, நேர்ந்திருக்காது என்ற நம்பிக்கையை வளர்த்துத்துக் கொண்டவர்கள் குடாநாட்டு மக்கள்.

1996 பிற்பகுதியில் காணாமற் போனவர்களின் அனேகர் கொல்லப்பட்டு விட்டார்கள்; அவர்களின் சடலங்கள் பாழடைந்த கிணறுகளிலும், மலசலகூடக் குழிகளிலும், போடப்பட்டுள்ளன; இராணுவ முகாம்களைச் சுற்றிப் புதைக்கப்பட்டுள்ளன— என்று சர்வதேச மன்னிப்புச் சபை கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் அறிக்கை வெளியிட்டிருந்த போதிலும் குடாநாட்டு மக்கள் அதனை நம்பவிரும்பவில்லை. அத்தகைய துரதிர்ஷ்டம் இப்பகுதி இளைஞர், யுவதிகளுக்கு நேராதிருந்திருக்க வேண்டும் என்று மக்கள் மனங்கள் பிரார்த்தித்தனவே அன்றி முடிந்த முடிவாகக் கொள்ள மறுத்தன.

ஆனால் இப்போது...?...!

கிருஷாந்தியை படுகொலை செய்த குற்றவாளியான இராணுவத்தினர் ஒருவரே செம்மணியில் உள்ள புதைகுழிகளை தம்மால் காட்ட முடியும் என்று கூறியிருக்கும் இவ்வேளையில், அது குறித்துக் கருத்தில் கொள்ளாது, கவலை கொள்ளாது இருக்க முடியுமா?

கனடாவில் இலங்கைப் பொருள்கள் பகிஷ்கரிப்பு

காணாமற் போனவர்கள் எங்கே இருக்கிறார்கள், என்ன ஆனார்கள் என்ற விவரங்களை அவர்களின் பெற்றோர்களும் உறவினர்களும் கடந்த 24 மாதங்களாக அரசிடம் கேட்டு வருகிறார்கள். பல தடவைகள் உண்ணாவிரதமிருந்தார்கள்; ஜனாதிபதிக்கும் ஏனையோருக்கும் மகஜர்கள் அனுப்பினார்கள்.

எதுவுமே பயன்தராமை கண்டு ஜனாதிபதியை நேரில் கண்டு பேசினார்கள். சந்திரிகா தாமும் ஒரு தாயே என்றும் பெற்றோர்களின் சோகத்தை தம்மால் புரிந்து கொள்ள முடியும் என்றும் மனித நேயம் தம்மிடம் நிறையவே குடி கொண்டிருப்பதாகக் காட்டிப் பரிவுடன் பேசினார். காணாமற்போனவர்களின் கதி குறித்துக் கண்டறிய விசாரணைக்குழு ஒன்றை நியமிப்பதாகக் கூறி சாந்தப்படுத்தி அனுப்பினார்

மூன்று மாதங்களுக்குள் தமக்கு முடிவு தெரிய வேண்டும் என்று பெற்றோர்கள் கேட்டனர். ஜனாதிபதி ஆறு மாத அவகாசம் கேட்டார். ஆறு மாதங்கள் பத்து நாள்களும் கடந்து விட்டன. பெற்றோர் தரப்பில் விசாரணைக் குழுவில் அங்கம் வகிக்கக் கூடியவர்களின் பெயர்கள் சிபார்சு செய்யப்பட்டு அனுப்பப்பட்டும் மாதங்கள் கடந்து விட்டன. ஆனால் விசாரணைக் குழு நியமிக்கப்படவில்லை.

தென்னிலங்கையில், ஐ.தே.க பதவிக் காலத்தில், படையினர் படுகொலை நடத்திய சூரியகந்த விவகாரத்தைப் பெரிதாக்கி, பதவிக்கு வந்ததும் ஆணைக்குழு அமைத்து, புதைகுழிகளைத் தோண்டுவதற்கு வகை செய்த ஜனாதிபதி —

குடா நாட்டில் காணாமற் போனோர் குறித்து விசாரிப்பதற்கு தாமதம் காட்டியதும் அக்கறை இல்லாமல் இருப்பதும், சோமரத்ன ராஜபக்ச இப்போது வெளியிட்ட தகவல் ஜனாதிபதிக்கு முன்னரே தெரிந்தமையின் விளைவோ என்று குடா நாட்டு மக்கள் சந்தேகிக்கின்றார்கள்.

அந்தச் சந்தேகம், காணாமற்போன பிள்ளைகளுக்கு அபசகுனமாக நடந்திருக்குமோ என்ற அச்சத்தை உண்டாக்கியுள்ளது. அவ்வாறு துக்ககரமான சம்பவம் நிகழ்ந்திருக்காது என்று கடந்த இரண்டு வருடங்களாக நம்பிய மக்கள், உறுதியுடன் இருந்த அவர்களின் மனம் இப்போது தளம்பத் தொடங்கியுள்ளது. அதனால் குடாநாடு முழுவதிலும் செம்மணி விவகாரமே பேச்சாக உள்ளது.

மரண தண்டனை பெற்ற சோமபால ராஜபக்ஷ தெரிவித்த தகவல் உண்மையா இல்லையா என்பது உடனடியாகக் கண்டறியப்பட வேண்டும். அதன் பொருட்டு செம்மணி இராணுவக் காவலரணை அண்டிய பகுதிகளில் புதை குழிகள் உண்டா என்று தேடுதல் நடத்தவேண்டும். அவை இருந்தால் தோண்ட வேண்டும் என்ற கருத்தலையே இன்று குடா நாட்டில் வீசுகிறது.

விசாரணைக் குழுக்கள், விசாரணைகள் மீது நம்பிக்கை வைத்து காலத்தை இனியும் கடத்தக்கூடாது என்பதே யாழ்.மக்களின் ஒன்று பட்ட கருத்தாகும்.

★ ★ ★

யாழ்ப்பாணத்து மக்களின் கவலையையும், தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்ததோ என்ற ஏக்க அதிர்ச்சியும் அரசுத் தலைவர்களுக்கு ஏனைய தென்னிலங்கை அரசியல் வாதிகளுக்கு பெரிதாக மனித நேய விவகாரமாகத் தெரியவில்லை!

உள்ளும் புறமும்

குறுமுனி

செம்மணியில் புதை குழிகள் இருப்பதாக நீதிமன்றத்தில் தகவல் தெரிவிக்கப் பட்டு, இப்பத்தி எழுதப் படும் வரை, சரியாக ஒரு வாரமாகிவிட்டது. ஆனால் இது குறித்து இன்னும் அரசாங்கம் மூச்சுத்தானும் காட்டவில்லை; வெகு மௌனமாக இருக்கிறது; பேசாமடந்தையாக உள்ளது.

செம்மணிப் புதை குழிகள் குற்றச்சாட்டில்—தகவலில்— சந்தேக நபர்கள் இராணுவத்தினர். இராணுவத்தினரின் நிர்வாகம், அவர்களின் நடத்தைகள்,நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவர் பாதுகாப்பு அமைச்சர். ஜனாதிபதியே பாதுகாப்புஅமைச்சரும், முப்படைகளின் பிரதம தளகர்த்தரும் ஆவார்.

குடாநாட்டு மக்களின் மன ஆறுதலுக்காகவேனும், ஒரு வார்த்தை தானும் கக்காமல் அவர் பிள்ளைகளுடன் வெளி நாட்டுக்கு உல்லாசப்பயணம் சென்று விட்டார். தாமும் ஒரு தாய் என்று பரிவுபேசியவர் தமிழ்த்தாய்மாரின் ஏக்கத்தையும் கவலையையும் கண்டு கொள்ளாமல் கண் காணாத நாட்டுக்குத் தமது பாதுகாப்புக் கருதி ஓடிவிட்டார். சனிமாற்றம் அவரின் பாதுகாப்புக்கு குந்தகமானது என்று சோதிடர் யாராவது சொல்லித் தொலைத்தாரோ என்னவோ தெரியாது......!

பாதுகாப்பு அமைச்சர் இல்லாவிடில் அவருக்குப் பதிலாக பணியாற்றுபவர் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர். தமது பொறுப்பின்கீழ் உள்ள படையினர் மீது மீண்டும் மாசு படிய வேண்டாமே என்று நினைத்து அவர் எதுவுமே சொல்லத் துணியவில்லையோ.

தமக்குத் தண்டனை கிடைத்தது என்ற ஆத்திரத்துடன் சோமபால ராஜபக்ச அரசாங்கத்தை இக்கட்டுகளில் மாட்டுவதற்காக செம்மணியில் புதைகுழிகள் இருப்பதாகக் கூறியிருக்கலாம் என்றே பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், வேண்டுமானால் தற்காத்துக் கொள்வார்.

எதற்கும் நியாயம், நீதி வழங்கும் தோரணையில் விரிவுரைகள் நடத்தும் பேராசிரியரான நீதி அமைச்சரும் இது விடயத்தில் நிட்டையில் இருக்கிறார். அமைச்சரவையே எதனையும் செய்யட்டும் என்று கருதியிருக்கிறாரோ என்னவோ!

தமிழர்களின் கவலை தானே...! அவர்களுக்கு என்ன அக்கறை!!

பிள்ளையார் பிடிக்கப் போய் பெருங்குரங்கு ஆன கதை போலாகிவிட்ட நிலையில் உள்ளது அரசாங்கம் என்பது உண்மைதான். அதற்காக தனது உத்தியோகத்தர்கள் செய்த அக்கிரமத்தை, இனப் படுகொலையை மறைக்க முயலக் கூடாது.

மனித உரிமைகளைப் பேணும் நடவடிக்கைகளில் அரசாங்கம் அக்கறையாகவே உள்ளது. படையினர் மக்களின் மனித உரிமைகளைப் பறித்தால்; அல்லது மீறினால் அவர்கள் மீதும் வழக்குத் தொடரப்பட்டுத் தண்டனை வழங்கப்படும். மனித உரிமைகள் விடயத்தில் அவர்களுக்குத் தண்டனை விதிவிலக்கு அளிக்கப்பட மாட்டாது என்று காட்டும் நோக்குடனேயே கிருஷாந்தி மற்றும் மூவர் கொலைச் சம்பவத்தை அரசாங்கம் நீதிமன்றத்துக்கு எடுத்துச்சென்றது.

அந்த வகையில், கிருஷாந்தி வழக்கின் தீர்ப்பு அரசின் நோக்கத்தை எய்த உதவியது. சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற மனித உரிமை இயக்கங்கள் இலங்கை அரசைப் புகழும், பாராட்டும் அளவுக்கு குற்றவாளிகளான இராணுவத்தினருக்கு மரண தண்டனைத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

மனித உரிமை மீறல்களைக் கண்டு கொள்ளாமல் இருந்த நிலை — இப்போது இலங்கையில் முற்று முழுதாக மாறிவிட்டது. குற்றவாளிகள் அவர்கள் இராணுவத்தினராக இருப்பினும் குற்றவாளிகளாகவே கருதப்பட வேண்டும்; நாட்டைப் பாதுகாக்கும் வீரர்களாகக் கருதப் படக்கூடாது என்ற திருப்பு முனையை கிருஷாந்தி வழக்குத் தீர்ப்பு உருவாக்கி உள்ளது.

முன்னர், படையினர் மனித உரிமைகளை மீறினாலும் எதிரிக்கு எதிராகப் போராடுபவர்கள் என்று கூறி தண்டனை வழங்கப்படுவதில்லை அது ஒரு எழுதாச்சட்டமாகவே இருந்து வந்தது. அதனால் அவர்கள் தாம் நினைத்தமாதிரி மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வந்தனர். இராணுவ நீதி மன்றங்களில் குற்றவாளிகளாகக் காணப்பட்டாலும் சிறிய தண்டனைகளே வழங்கப்பட்டு வந்தன.

1991 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச் சோலையில் 50 க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டபோது இராணுவ விசாரணை மன்றமேவிசாரித்ததுகொலையில் ஈடுபட்ட சிப்பாய்க்கள், ஏனைய தரத்தினரை எல்லாம் சுற்றவாளிகளாகக் கண்டு இராணுவ முகாமின் பொறுப்பதிகாரியை மட்டுமே குற்றவாளிகளாகக் கண்டது. அவருக்கு அற்ப தண்டனையே வழங்கப்பட்டது.

ஆனால் கிருஷாந்தி வழக்கின் தீர்ப்பு, பாதுகாப்புப் படையினர் என்பதற்காக தண்டனை வழங்குவதில் அவர்களுக்கு வேறு அடிமட்டம் வைத்திருக்க முடியாது என்று எடுத்துக் காட்டியுள்ளது.

அத்தோடு கிருஷாந்தி மற்றும் மூவர் கொலைக்கு இராணுவமே பொறுப்பேற்க வேண்டும் என்றும் உயர் அதிகாரிகளே அதற்குப் பதில் சொல்லியாக வேண்டும் என்றும் கொழும்பில் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

கிருஷாந்தி வழக்கில் ஒரு கோப்ரல், ஏழு சிப்பாய்கள், ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் மீதே குற்றம் சுமத்தப் பட்டது. அவ்வாறாயின் அவர்களின் நடத்தைக்கும் பொறுப்பான, பிளாட்டூனுக்குப் பொறுப்பான லெப்டினன்ட், யூனிட்டுக்குப் பொறுப்பான மேஜர், பிரிகேட்டுக்குப் பொறுப்பான பிரிகேடியர் ஆகியோர் எங்கே போனார்கள்? அவர்கள் கற்பழிப்பிலும், கொலையிலும் சம்பந்தப்படாமல் இருந்திருக்கலாம். ஆனால் அச்சம்பவங்கள் நடந்திருக்கின்றன என்பது தெரியாமல் இருக்க நியாயமில்லை சரி சம்பவம்பற்றித் தெரிந்திருக்கவில்லை என்று வைத்துக் கொண்டாலும், தமக்கு கீழ் பணிபுரிந்தவர்களின் குறறத்தில் இவர்களும் பொறுப்பேற்க வேண்டாமா? —என்றும் விமர்சகர் ஒருவர் கேட்டிருக்கிறார்.

அந்த விமர்சகரின் அடியொற்றி விவாதித்தால் கிருஷாந்தி வழக்குத் தீர்ப்பைத் தொடர்ந்து பாதுகாப்புப் படைக்குப் பொறுப்பான அமைச்சரான ஜனாதிபதியும் பிரதி அமைச்சர் ரத்வத்தையும் தமது பதவிகளை ராஜினாமாச் செய்ய வேண்டும் அல்லவா?

எப்படியோ, கிருஷாந்தி வழக்குத்தீர்ப்பு, மனித உரிமை மீறல்கள்—படையினர் நடத்தை — அவர்களின் பொறுப்பு—குறித்துபுதிய பரிமாணம் ஒன்றை ஏற்படுத்தி இருக்கிறது.

ஆனால் செம்மணிப் புதைகுழி விவகாரம், கிருஷாந்தி வழக்குத் தீர்ப்பினால் அரசு தேடிக்கொண்ட நற்பெயரைக் கெடுத்துள்ளது. செம்மணி விடயத்தில் அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு உண்மை நிலையை வெளிக் கொணரப் பின்னடிக்குமானால் அது குற்றவாளியாகவே கருதப்படும்.

அதன் மூலம் —

தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பளிப்பதாகக் கூறிக்கொண்டு அரசாங்கம் அவர்களைப் படுகொலை செய்வதிலேயே ஈடுபட்டுள்ளது: யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவது இனப் படுகொலையை இவ்வாறு நடத்துவதற்காகவே என்ற அர்த்தம் பிறக்கும்.

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்சிலம்பம்

புதிர்ப் போட்டி இல. 58



சொற்சிலம்பம் இல. 58
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: .....

விலாசம்: .....

..... இங்கே வெட்டுக .....

முடிவு திகதி; 17— 07 — 1998

இடமிருந்து வலம்

1. நிலத்திலிருந்து அகழ்ந்து எடுக்கப்படும் எரி பொருள்மூலம். 4. உழைத்துப் பெறு. 7. விளக்குமாறு. 9. செல்வம். 10. ஜன்னல். 11. குடும்பஸ்தன். 12. கோணத்தை அளவிடும் அலகு. 13. கொடு. 14. பலவல்ல. 16. காலில் அணியும் அணிகலன். 18. செம்பு 20. இனசரி மாறுவது. 21. தலைவன்.

மேலிருந்து கீழ்

1. மீனாட்சியின் ஊர். 2. கூந்தல். 3. சேரி, 4. அழி. 5. அரசவாசி 6. ஒருவகை மீன். 8. பலம் மிக்கவன். 11. மூக்கு இருக்கும்வரை இது இருக்கும். 12. பள்ளத்துக்கு மேலாகக் கட்டுவது. 13. ஒரு பாட்டின் இறுதியும் அடுத்தபாட்டின் முதலடியும் ஒன்றாக வரும் ஒரு தொடை. 14. எட்டுக்கால் உடையது. 15. செலுத்துபவன். 17. மண் துகள். 19. அதிக.

சொற்சிலம்பம் 56 — விடைகள்

இடமிருந்து வலம்

1. பாதகம். 4. கசிவு. 6. கண்டி. 7. வயிறு. 8. தகராறு. 11. தும்மல். 12. வடை. 13. தினை. 14. கொலை. 15. அம்பாள். 18. மகம். 20. வளைதல். 22. திரிபுரம். 23. காலி.

மேலிருந்து கீழ்

1. பாகம். 2. தண். 3. கடிதம். 4. கயிறு. 5. சிறு. 7. வரால். 9. கமலம். 10. படை. 11. துணை. 12. வலை. 13. திருமதி. 14. கொள்ளை. 15. அம்பு. 16. பாவம். 17. அலி. 19. கரி. 21. தகா.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப் போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ **முதற்பரிசு:** சகிரேகா சிங்கராசா,
'பிரசாந்தி',
சந்நிதி- வீதி, அச்சுவேலி.

★ **இரண்டாம் பரிசு:** திருஞானம் ஆனந்தி,
வரணி இயற்றாலை,
வரணி.

★ **மூன்றாம் பரிசு:** ஆ. மாணிக்கவாசகர்,
உரும்பராய் வடக்கு,
உரும்பராய்.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

முதற் பரிசு- ரூபா. 150. 00
இரண்டாம் பரிசு- ரூபா. 100. 00
மூன்றாம் பரிசு- ரூபா. 50. 00

★ புதிர்ப்போட்டி இலக்கம் 57 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

தீராத விளையாட்டுப் பிள்ளை ஓயாத தொல்லை தரும் கிள்ளை

முந்திய இதழ்களிலே ''கருவுற்ற நாள் முதலாய்'' என்ற கட்டுரையும் ''பிள்ளைக் கனியமுதம்'' என்ற கட்டுரையையும் பார்த்தோம். கற்போது பிள்ளைப்பருவம் பற்றிச் சிந்திப்போம்

உயிரும் உணர்வும் உள்ள எல்லா உயிர்களைப்போல மனிசனும் பிறந்தது முதல் இறக்கும்வரை பல பருவ மாற்றங்களை அடைகிறான். மனிதனின் ஏழு படிநிலைகள் தோன்றுகின்றன. குழந்தை பிறந்தது முதல் அதன் வளர்ச்சி நல்லமுறையில் அமைவதற்கு நாம் உதவி செய்தல் வேண்டும். இதற்கு கல்வி அறிவைப் புகட்டுவது அவசியமாகின்றது. கல்வி இன்றியும் வளர்ச்சி தோன்றுமாயின் அது நல்ல முறையில் அமையாது. மனித வளர்ச்சியில் உருவமாற்றங்களோடு பதுப்புதுப் பண்பு மாற்றங்களும் தோன்றும். அறிவு, ஆற்றல், மனப்பாங்கு என்பவற்றில் இம்மாற்றங்கள் தெரிபடும்.

வளர்ச்சி என்பது தொடர்ந்து நடைபெறுவது. இந்த வளர்ச்சிப்போக்கில் மரபு நிலைகளும் சூழ்நிலைக்காரணிகளும் முக்கிய பங்கேற்கின்றன. மனித வளர்ச்சி நிலையில் குறிப்பிட்ட நிலைகள் ஒவ்வொன்றும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. சில வளர்ச்சிநிலைகளில்கில பண்புகள் மேலோங்கி நிற்கும். இந்த நிலைகள் பற்றி நாம் அறிந்திருக்க வேண்டியது மிகமுக்கியமானதாகும்.

மனிதனின் ஏழு பருவங்கள்

குழவிப்பருவம், பிள்ளைப்பருவம், கும ரப்பருவம், முதிர்பருவம், நடுநிலைப்பரு வம், தளர்பருவம், கிழப்பருவம் என்பன மனிதனின் ஏழு பருவங்களாகும்.

ஆண்களில் இவற்றைக் குழந்தை, சிறு வன், பையன், காளை, தலைவன், முதி யோன், கிழவன் என்றும்—

பெண்களில் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரி ளம் பெண் மூதாட்டி, கிழவி என்றும் தமிழ் நூல்கள் எடுத்தியம்பும்.

இந்தப் பருவங்கள் ஒன்டோடொன்று முற்றிலும் மாறுபட்டவையல்ல; இவற்றைப் பிரித்து அறிவதும் சில சமயங்களில் கடினமாகவும் இருக்கும்.

முதல் ஐந்து வயதுவரை உள்ள பருவம் குழவிப் பருவமாகும். மூன்று வயதுவரையிலான பருவத்தின் உருவமாற்றம், உள மாற்றங்களை முந்திய கட்டுரையில் கண்டோம். பிள்ளைப் பருவம் 5 வயது முதல் 12 வயது வரையிலான பருவத்தைக் குறிக்கு மெனினும், 3 முதல் 6 வயதுவரையிலான பருவத்தை முன்பிள்ளைப் பருவம் என்றும் 6 முதல் 12 வயது வரையிலான பருவத்தைப் பின் பிள்ளைப்பருவம் என்றும் பிரித்துப் பார்க்கலாம்.

3 ஆவது வயதிலேயே பிள்ளைகளுக்கு ஏடு தொடக்குதல் நடைபெறும். ''துள்ளித் திரிகின்ற காலத்தில் எந்தன் துடுக்கு அடக்கிப் பள்ளிக்கு வைத்தலே தந்தை யாகிய பாதனே'' என்றுபிற்காலத்தில்வரும் தாமதிருப்பதற்கு பிள்ளைகளைப் பள்ளிக்கு வைத்தல் பெற்றோர் ஒவ்வொருவருடைய பொறுப்புமாகும். ''சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே'' என்றும் ''தந்தை யொடு கல்விபோம்'' என்றும் சொல்லப் பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

தனது செல்லப்பிள்ளையொன்று பள்ளிக்குச் செல்ல அழுதது. அதற்குத் தாய்மையின் பண்போடு தந்தையார் ஆறுதல் கூறுவது போலப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பின்வருமாறு பாட்டிசைத்தார்.

''தலைவாரிப் பூச்சூடி உன்னைப் — பாட
சாலைக்குப் போவென்று சொன்னாள் உன்
அன்னை
சிலைபோல ஏனங்கு நின்றாய்? — நீ
சிந்தாத கண்ணீரை ஏன்சிந்துகின்றாய்?
விலைபோட்டு வாங்கவா முடியும்? — கல்வி
வேனைதோ றுங்கற்று வருவதால் படியும்!
மலைவாழை அல்லவோ கல்வி? — நீ
வாயார உண்ணுவாய் போஎன் புதல்வி!''

மலைவாழை போன்று வாழையடி வாழையாகக் கல்விச் செல்வம் பெருக வாய்ப்புத் தருதல் வேண்டும். எழுமையும் ஏமாப்புத்தரும் கல்வியின் அருமையை உணராதவர் உணராதவரே. ''கண்ணுடைய வாழ்வு'' தரும் கல்வியைப் புறந்தள்ளிச் சிறுவர் சிறுமியரைக் குழந்தைத் தொழிலாளிகளாக்கும் கொடுமை மாண்டு போவதாகுக!

வளைய வேண்டுமென்பதற்காக நெருப்பில் வாட்டினும், பொறுத்து வளைகின்ற மூங்கில், வேந்தன் அமரும் பல்லக்கில் அவனது முடிக்கு மேலே நின்று பெருமை கொள்ளும்! நீண்டுபர்ந்து வளரும் மூங்கிலோ கழைக் கூத்தாடிகள் கைப்பட்டு, ஊர் ஊராய்த் திரிந்து அவர்தம் காலடியில் மிதிபடும். இளமையில் வருந்திக் கற்பவர் வளையும் மூங்கிலைப் பெருமையடைவர். வருந்திக் கல்லாதவர் மிதிபடும் மூங்கிலாய்ச் சிறுமை யடைவர்.

ஐந்தில் வளையாது ஐம்பதில் வளையாது'', ''இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'' மேற்படி கருத்தைப் பின்வரும் ''நீதிவெண்பா'' பாடல் வலியுறுத்தும்.

''வருத்த வளை வேய் அரசர் மாமுடியின் மேலாம்
வருத்த வளையாத மூங்கில் — தரித்திரமாய்
வேழம்பர் கைப்புகுந்து மேதினியெல்லாம் திரிந்து
தாழுமவர் தம்மடிக்கிழித் தான்.''

எல்லா வகையாலும் இடரின்றிச் சிந்தித்தால் ''கல்வியைப்போல் ஒரு செல்வமில்லை'' என்றும் ''கல்வியே கருந்தனம்'' என்றும் சொல்லலாம். 3 முதல் 5 வயதுவரை பிள்ளைகளுக்கு முன்பள்ளிக்கல்வியை எல்லோரும் முன்னின்று நடத்துகின்றனர். ''சிறுவர் பூங்கா'' என்னும் இந்த முன்பள்ளிகள் அல்லது ''குழவிப்பள்ளி''கள் சிறுவர் உலகமாகத் திகழ வேண்டும். குழந்தைகளின் நல்வளர்ச்சியை இவை ஊக்குவிக்க வேண்டும். அவர்தம் மகிழ்ச்சியே இப்பள்ளிகளின் உயிர்மூச்சாக இருக்க வேண்டும். பாட்டும் கூத்தும், அசையும் இசையும், ஆட்டும் உற்சாகம், பிற்காலச் சமூக ஆடாட்டத்திற்கு நற்சான்றாக அமைதல் வேண்டும். தாய்மை உணர்வு மேலோங்கிய ஆளுமை உள்ள நல்லாசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டு இப் பாலர் பாடசாலைகளிலே கல்விப் பணிக்கு அமர்த்தப்படல் வேண்டும்.

நா. க. சண்முகநாதபிள்ளை

இனி 5 முதல் 12 வயது வரையிலான பிள்ளைப் பருவத்தினரைப் பற்றிக் காண்போம். இப்பருவத்தினர் முதன்முறையாகப் பெருமளவில் வெளியுலகத்துடன் தொடர்பு கொள்ள முற்படுவர். தாமே சிந்தித்துத் தீர்க்க வேண்டிய சில சிக்கல்கள் இப்பருவத்தில் தோன்றும்; உலகத்திற்கேற்ப ஒட்ட ஒழுகவேண்டுமென்ற எண்ணம் ஏற்படும்; குழவிப்பருவத்தில் ஏற்பட்ட வளர்ச்சிகள் தவறியும் முயன்றும் உறுதி செய்யப்படும்; வேலை செய்யும் துடிப்பும், முனைப்பும், ஆராய்வுக்கமும், கட்டுக்கமும் மிகுந்து காணப்படும்; ஆராய்வுக்கமும், கருவிகளைக் கொண்டு வேலை செய்யும் ஆர்வமும் இருக்கும். இதனால் பொருள்களைத் தேடிச் சேகரிக்கும் திரட்டுக்கமும் மிகுந்து காணப்படும். விளையாட்டு, நடிப்பு என்பவற்றில் ஆர்வம் ஏற்படும். குதித்தல், ஆடுதல், ஓடுதல், தூரத்துதல் என்பவற்றில் இன்பமடைவர். சுறுசுறுப்பு மிகுதியால் துடினம் மிகுந்து காணப்படும். காட்சிப் பொருள்களை நன்றாக விரும்புவர். இதுதான் சும்மாயிராது துள்ளித்திரிகின்ற காலம். 6 முதல் 8 வயது வரை உடல்வளர்ச்சி வேகமடையும். பெற்றோரும் மற்றோரும் இவர்களின் குறும்புகளைக் கண்டு சினம் கொள்ளாது வேகம் கொடுத்து ஆளவேண்டும். ''தீராத விளையாட்டுப் பிள்ளை...'' என்ற பாரதியாரின் கண்ணன் பாட்டை ஒருதரம் நினைவுபடுத்திப் பார்த்தால் இப்பருவக் குறும்புகள் தெளிவாகும்.

பொதுவாகப் பிள்ளைப் பருவத்தினருக்குப் படிப்பில் ஆர்வம் தோன்றும். பிள்ளைப்பருவத்தினர் சூழலோடு தம்மைப் பொருத்தவும், சூழ்நிலைக்கேற்பத் தம்மை இசைவுபடுத்தவும் தமது ஆற்றலை ஒழுங்குபடுத்த முயற்சிப்பர். எனவே பெற்றோரை அதிகம் சாராமல் பிறரைச் சார்ந்து செயற்பட முனைவர். எனினும் சூது, வாது அற்றுப் பழகும் இப்பருவத்தினர் நல்லாரோடு இணங்கிப் பழகுவதைப் பெற்றார் உறுதி செய்வது நன்மைதரும்.

இப்பருவத்தினரைக் ''கூட்டாளிக் குழுப் பருவத்தினர்'' என்றழைப்பர். சிறுகுழுக்களாகப் பிரிந்து விளையாடித் தலைமைப் பண்பு, ஒத்துழைப்பு, பிறர் நன்மையிற் கரிசனை, கட்டுப்பாடு என்பன போன்றவற்றை இப்பருவத்தினர் வளர்க்க முயற்சிப்பர். வீட்டிலும், பாடசாலையிலும் முன்னுதாரணமாக உள்ளவர்களைப் பின்பற்ற முயற்சிப்பர். ''வளரும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும்'' என்பதை நாம் எண்ணிப்பார்த்து அவர்கள் பின்பற்றும் மாதிரிகளாக நாம் இருக்கவேண்டும்.

எட்டாவது வயது முக்கியமானது. எட்டாதவற்றையும் எட்ட முயலுவர். இந்த வயதுச் சிறுவர் சிறுமியரிடம் சிந்தனை, நினைவாற்றல், பேராவல் என்பன உண்டாகும். இவர்களின் இத்தகு செயல்களைத் தட்டிக் கழிக்காது இவ்வளர்ச்சிகளுக்கு உந்து சக்தியாக இவர்களோடு தொடர்புடைய அனைவரும் ஊக்கமும் ஆக்கமும் தரவேண்டும். அவற்றைத் தட்டிக் கழிப்பதும், விட்டு வைப்பதும், எட்டப் போடுவதும், அவர்களின் அறிவு வளர்ச்சிக்கு குந்தகமாகுமென்பதை மனம் கொள்ளுதல் வேண்டும்.

ஒன்பது வயதின் பின்னர் உடல்வளர்ச்சி வேகம் குறையும். தமது உடற் தேவைகளில் தாமே கவனம் செலுத்துவர். ஒய்வும், தூக்கமும் மிகவும் விருப்பமாக இருக்கும். இது கவலையற்ற பருவம். பிறரைக் கவரும் செயல்கள் புரிந்து தன் மதிப்பை உயர்த்த முயல்வர். ஒழுக்கவளர்ச்சி உயரும். சமூகப்

(× ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்களால் மிரட்டும் முள்ளம் பன்றி!

மிக விந்தையான ஒரு காட்டு விலங்கு முள்ளம்பன்றி. இதன் உடலெங்கும் கூர்மையான, நீண்ட முட்கள் வளர்ந்திருக்கும். உடல் பன்றி போல இருக்கும். அதனால் இதற்கு முள்ளம் பன்றி என்று பெயர்.

முள்ளம் பன்றியின் உடல் கறுப்பும் பழுப்பும் கலந்த நிறமுள்ளது. தலையிலிருந்து வால் வரை, இதன் உரோமங்களே நீண்ட முட்களாக உள்ளன. நடுமுதுகிலும் இடுப்பிலும் உள்ள முட்கள் மிக நீளமானவை. முள், அடியில் கறுப்பாகவும் நுனியில் வெண்மையாகவும் இருக்கும். நுனி மிகக் கூர்மையானது.

பிராணிகள் உலகம்

முள்ளம்பன்றி மற்ற விலங்குகளுக்குத் தீங்கு செய்யாது. ஆனால் நாய், நரி போன்ற விலங்குகள் துரத்தினால் இது ஓடாமல் நின்று, தன் உடல் முட்களைச் சிலிர்த்து நிமிர்த்திக்கொள்ளும். அப்போது அவற்றிலிருந்து கரகரவென்ற ஓசை எழும்பும். துரத்திய பிராணி இதைக் கண்டும் பயந்து அகலவில்லையென்றால், முள்ளம் பன்றி பின்னோக்கிச் சென்று அதன் மீது மோதும். அப்போது இதன் முட்கள் பகை விலங்கின் உடலில் தைத்து விடுகின்றன. முட்கள் உண்டாக்கும் காயங்கள், புண்ணாகிவிடுமாதலால் பிற விலங்குகள் இதனைத் தாக்கமுற்படுவதில்லை. பாம்பு தாக்க முயன்றால், இது பாம்பின் மீது விழுந்து, புரண்டு சுற்றிக்கொண்டு முட்களால் காயப்படுத்திவிடும்!

முள்ளம்பன்றி வளை தோண்டி அதில் வாழும். பகல் முழுவதும் வளையில் பதுங்கியிருந்து இரவில் தான் இரை தேடும். இது கொறிக்கும் பிராணி இனத்தைச் சேர்ந்தது. இளம் மரங்களின் வேர், பட்டை, கிழங்கு முதலியன இதன் உணவு. உருளைக் கிழங்கு, சர்க்கரைவள்ளிக் கிழங்கு என்றால் இதற்கு மிகவும் விருப்பம். அவற்றை உண்பதால் உழவர்களுக்கு இது நட்டம் விளைவிப்பதுண்டு.

வட அமெரிக்காவில் வாழும் ஒருவகை முள்ளம் பன்றி மரத்தில் ஏறக் கூடியது. இலை, தளிர், காய் முதலியவற்றை இது பறித்துத் தின்னும். இதன் வால் நீளமானது. வாலினால் இது எதிரிகளைத் தாக்கும். முள்ளின் நுனிப் பகுதியில் உள் நோக்கி வளைந்த கொக்கி இருப்பதால், எதிரியின் உடலினுள் பாய்ந்த முட்களை எளிதில் எடுக்க முடியாது.

சிறுவனும் முயலும்

சிறுவன்:- துள்ளித் துள்ளி விளையாடித்
துன்பம் இன்றி வாழ்ந்திடவே
புள்ளி முயலே வந்திடுவாய்
புல்லும் தழையும் தந்திடுவேன்!

முயல்:- கூட்டில் அடைத்தே நீயூட்டும்
குழையும் தழையும் மேலாமோ?
காட்டில் திரியும் சுதந்திரத்தில்
காணும் இன்பம் வந்திடுமோ?

சிறுவன்:- காட்டில் வாழும் வேடருனைக்
கண்டால் கொன்று தின்பாரே?
வீட்டில் வந்தே நம்மோடு
விருந்தாய் நாளும் வாழ்ந்திடுவாய்!

முயல்:- அன்புப் போர்வை அது மூடி
அணைத்துக் கொல்லும் மனிதரிலும்
துன்பஞ் செய்ய நேர் நின்று
துரத்தும் வேடர் உயர்ந்தோரே.

— ம. துர்யா —
(ஆண்டு 5, ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி)

இயலுமா?

1. ஒன்று என்ற இலக்கத்தை எட்டுத் தடவைகள் பயன்படுத்திக் கூட்ட மொத்தம் 125 வரவேண்டும். இயலுமா பாருங்கள்.

2. எனக்கு ஒரு தேசிக்காய் தேவை. அருகில் ஒரு தோட்டம் உண்டு. தோட்டத்துக்கு உள்ளே செல்வதற்கு ஐந்து வாசல்களைத் தாண்ட வேண்டும். ஒவ்வொரு வ சலிலும் ஒவ்வொரு காவலர்கள் உள்ளனர். தோட்டத்துக்குள்ளே சென்று தேசிக்காய் பிடுங்கி வருவதற்கு அவர்கள் நிபந்தனை விதிக்கின்றார்கள். "உள்ளே போய் எத்தனை தேசிக்காயையும் பிடுங்கலாம். ஆனால் எங்களைத் தாண்டும் போது, தோட்டத்தில் பிடுங்கிய தேசிக்காயில் எத்தனை வைத்திருக்கின்றாயோ அதில் அரைவாசியையும் மேலதிகமாக ஒன்றும் எங்களுக்குத் தர வேண்டும்" — என்று அவர்கள் ஒவ்வொருவரும் நிபந்தனை கூறி, என்னைத் தோட்டத்துக்குள் அனுப்பி வைக்கின்றனர். நான் தோட்டத்துக்கு வெளியே வரும் போது என்னிடம் ஒரு தேசிக்காய் இருந்தால் போதுமானது. அப்படியானால் நான் தோட்டத்தில் எத்தனை தேசிக்காயைப் பிடுங்க வேண்டும்?

3. இலக்கம் ஒன்றிலிருந்து ஐந்நூறுக்குள் எத்தனை தடவைகள் ஒன்று என்ற இலக்கம் வரும்?

— நாகமணி
மகேந்திரலிங்கம் —
(விடை XI ஆம் பக்கத்தில்)

உங்களுக்கு தெரியுமா?

1. காய்க்காத பனை என்ன பனை?

2. ஆங்கிலத்தில்போ; தமிழில் வா — இரண்டும் சேர்ந்தால் மரக்கறி. அது என்ன?

3. பறவை கட்டாத கூடு என்ன கூடு?

4. பறவையின் பெயரும் மரத்தின் பெயரும் சேர்ந்து வரும் இடத்தின் பெயர். அங்கு இப்போது அடிக்கடி சண்டையும் நடக்கிறது. அந்த இடம் யாது?

5. ஆங்கிலத்தில் ஓர் எழுத்தும் ஒரு புண்ணிய ஸ்தலம் ஒன்றின் பெயரும் சேர்ந்தால் தமிழில் ஒரு மாதம். அந்த மாதம் யாது?

(விடை XI ஆம் பக்கத்தில்)

சில தகவல்கள்

1. மீன்களில் மிக வேகமாக நீந்தக் கூடிய மீன் எது?

2. அதிக எழுத்துக்களைக் கொண்ட மொழி எது?

3. உலகில் முதல் முதலாக வானொலி நிலையம் எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?

4. மிதி வண்டி எத்தனையாம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது?

5. ஆகாய விமானம் எத்தனையாம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது?

— அ. கஜீபன் —
(ஆண்டு 8,
புலோலி மெ. மி. த. க. பா.)

விடைகள்

1. கரா. 2. [illegible] 3. [illegible] 4. [illegible] 5. 1903 ஆம் ஆண்டு.

கண்டுபிடியுங்கள்!

இந்த மரத்துக்குப் பின்னால் மறைந்திருப்பவர் யார்? கண்டுபிடிக்க ஒன்று முதல் இருபத்தியொன்பது வரையுள்ள இலக்கங்களுக்கான புள்ளிகளை இணைத்துப் பாருங்கள்!

பட்டம்

பட்டம் பட்டம் பட்டமாம்
பல வர்ணப் பட்டமாம்
பாலர் நாங்கள் இட்டம் போல
ஏற்றி மகிழும் பட்டமாம்!

காற்று வீசும் திசைக்கு
நூலை இழுத்து விட்டால்
உயர உயரப் போகுமாம்
காட்சி எம்மைக் கவருமாம்

காற்றில் வாலும் ஆடுமாம்
நூலும் இழுவை இழுக்குமாம்
மாலை நேரத் தென்றலாம்
எமக்கோ மகிழ்ச்சிப் பெருக்கமாம்!

நா. மகேந்திரலிங்கம்

சிறுவர் சுடர்

கோள்களைப் பற்றி.....

★ மிகவும் பெரியது — வியாழன்
★ மிகவும் சிறியது — புளூட்டோ
★ மிகவும் குளிரானது — புளூட்டோ
★ மிகவும் சூடானது — புதன்
★ சூரியனுக்கு மிக அருகில் உள்ளது — புதன்
★ பூமிக்கு மிக அண்மையில் உள்ளது — வெள்ளி
★ சூரியனுக்கு மிக தொலைவில்உள்ளது — புளூட்டோ
★ ஒளி வளையம் உடையது — சனி
★ செங்கோள் எனப் படுவது — செவ்வாய்
★ மலட்டுக்கோள் எனப்படுவது — புதன்

— கு. சோபனா —
(ஆண்டு 8,
வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)

நொடிப் பொழுது

1. வாலுள்ளவன் வானத்தில் பறக்கிறான். அவன் யார்?
2. தட்டாமல் கொட்டாமல் கேட்கும் மேளச்சத்தம் அது என்ன?
3. அங்கு மிங்கும் பறப்பான்; ஆனந்தம் தருவான். அவன் யார்?
4. சுமையும் சுமப்பான்; உதையும் கொடுப்பான். அவன் யார்?
5. கூடவே வரும். உதவிசெய்யாது. அது என்ன?

— த. இ. உதயகுமார் —
(நாவாந்துறை றோ. க. த. க. வித்தியாலயம்)

விடைகள்

1. பட்டம். 2. இழுத்துக்கம். 3. ஊஞ்சல். 4. கழுதை. 5. நிழல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எயிறிழந்த ஏமலி

தன் நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு வசதியாய் அமர்ந்து கொண்டார் நாகையா. அவரின் பார்வை ஒருகணம் சுற்றிச் சுழன்று வந்து தன் முன்னே மேசையில் குவிந்து கிடந்த பைல்கள் மீது நிலைத்து நின்றது. ஒருவித சலிப்புடனே மெதுவாய் ஒரு பைலை எடுத்தார். பைலின் ஒவ்வொரு பக்கமாய்ப் புரட்டிக்கொண்டு சென்றவர் 'சட்' டென அதை மேசையில் போட்டுவிட்டு, ''சுரேஷ், ரங்கநாதனை ஒருக்கால் வரச்சொல்லு'' என்றார் ஒருவித கடுகடுப்புடன். அவ்வளவுதான், சுரேஷ் செய்தியைக் கொண்டு காற்றாய்ப் பறந்தான். மறு நிமிடமே ரங்கநாதன் தன் தடங்கித் தயங்கி நாகையாவின் அறைக்குள் வந்துகொண்டிருந்தான்.

''ரங்கநாதன், இஞ்சை பாரும், இது என்ன ஒப்பீசோ, உம்முடைய வீடோ? நீர் நினைச்ச நினைச்ச மாதிரி வரவும் போகவும், தாறுமாறாய் வேலையள் செய்யவும்...''

''இஞ்சை பாரும் இதென்ன செய்து வைச்சிருக்கிறீர்?'' என்றவாறு அந்தப் பைலைத் தூக்கி முகத்தில் எறியாத குறையாய் ரங்கநாதனின் முன்னால் 'தொப்' பென்று போட்டார் நாகையா. அந்தப் பைலை எடுத்து மெதுவாய்ப் புரட்டியவாறு பௌவியமாய் நின்றுகொண்டிருந்தார் ரங்கநாதன். நாகையா ஒரு தரம் தன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு நிமிர்ந்து பார்த்தார்.

''சேர், ஒரு கிழமையாய் என்ரை வைஃப் கொஸ்பிட்டலை இருக்கிறா. வீட்டிலை சரியான கேலை. அதுதான் ஏதோ யோசினையிலை...'' என்ற ரங்கநாதனைப் பணமாய் இடைமறித்தார் நாகையா.

''இஞ்சை பாரும் ரங்கநாதன். உம்முடைய வீட்டுக் கதைகளையெல்லாம் வேறை எங்கையெண்டாலும் வைச் சுக்கொள்ளும். என்னைப் பொறுத்தவரையிலை வேலை செய்தல்—செய்யித்தல்—அதுதான் முக்கியம். இஞ்சை வாற ஒவ்வொருத்தனும் வேலைசெய்யவேணும். அல்லது செய்யிக்கவேணும். இல்லையெண்டால் வெளியிலை போய் வேறை ஏதாவது வேலையைப் பார்க்க வேண்டியதுதான்'' என்று கூறி நிறுத்தினார் நாகையா.

நாகையாவின் இந்த வார்த்தைகள் ரங்கநாதனை நித்தமும் கேட்டுக் கேட்டுப் புளித்துப் போனவைதான். இருந்தாலும் என்ன செய்வது? தன் தலையெழுத்தை நொந்தபடியே பௌவியமாய் நின்றுகொண்டிருந்தார். ஆனாலும், நாகையாவின் சீற்றம் தணிந்தபாடாயில்லை.

''அதுசரி, உங்களுக்கு நான் எத்தினைதரம்சொல்லியிருக்கிறன் லீவெடுக்கிறதெண்டால் முன்னறிவித்தலோடைதான் எடுக்கவேணுமெண்டு. நீர் நேற்றும் உம்முடைய எண்ணத்துக்கு லீ வெடுத்திருக்கிறீர். இதாலை எத்தினை வேலையள் தேங்கிப்போச்சுது? கொஞ்சமெண்டாலும் உமக்குப் பொறுப்பிருக்குதோ?'' என்று பெரிதாய் ஒரு கேள்விக் குறியுடன் நிறுத்தியவர் மீண்டும் தொடர்ந்தார்—

''உமக்கு ஒருநாள் 'நோப்பே' போடிற்றதைத் தவிர எனக்கு வேறை வழியில்லை. இனியெண்டாலும் ஒழுங்காய் நடந்து கொள்ளும்'' என்றார்.

'நோப்பே' என்ற அந்த வார்த்தைகளைக் கேட்டு ரங்கநாதன் அதிர்ந்துபோனார்.

''சேர், நான்வேணுமெண்டு அப்பிடிச் செய்யேல்லை. நேற்று நான் இருந்த நிலைமையிலை என்னாலை ஒண்டைப்பற்றியும் சிந்திக்க முடியேல்லை. முழுநாளும் நான் கொஸ்பிட்டலிலை தான் இருந்தனான்.'' என்ற ரங்கநாதனை இடைமறித்தார் நாகையா. ''எனக்கு உந்தக் கதையளொண்டும் தேவையில்லை. சட்டத்துக்கு மாறாய் நான் ஒண்டும் செய்யமாட்டன். நான் சொன்னால் சொன்னதுதான். சும்மா இதிலை நிண்டு அதையும் இதையும் சொல்லி என்ரை நேரத்தை வீணாக்காமல் போய் வேலையைப் பாரும்'' என்று கழுதைதைப் பிடிக்குத் தள்ளாத குறையாய் விரட்டினார்,

நாகையாவின் அறையை விட்டு வெளியேறிய ரங்கநாதனின் மனதில் ஆத்திரமும் துயரமும் மாறி மாறித் தோன்றிக் கொண்டிருந்தன.

''இருபது வருஷமாய் இஞ்சை வேலைசெய்யிற ஒரு ஊழியனைப் பற்றிப் புரிஞ்சு கொள்ளத் தெரியாத இவனும் ஒரு அதிகாரியே? என்னைப் போலை ஒருத்தனுக்கு ஒருநாள் சம்பளம் எண்டால் என்ன சும்மாவே? என்ரை குடும்பத்தின்ரை ஒருநாள் சோத்திலை மண்போட்டிட்டானே பாவி. இன்னும் பத்து நாளிலை வீட்டை போகப்போற இவனுக்கு ஏன் இந்தக் கடைசி நேரத்திலையெண்டாலும் ஒரு மனிசனாய் நடந்துகொள்ளத் தெரியேல்லை?'' ரங்கநாதனின் மனம் பலவாறாய்ப் புலம்பியது.

தான் எத்தனையோ தடவைகள் இரவு பகல் பாராமல், பிரதிபலன் பாராமல் உழைத்த உழைப்பெல்லாம் காட்டில் எறித்த நிலவாய், கடலில் பெய்த மழையாய்ப் போய்விட்டது போல ஒரு உணர்வு அவரைப் பிடித்து உலுக்கிக்கொண்டிருந்தது.

நாகையா தன் முன்னே கிடந்த பைல்களை ஒதுக்கி ஒருபுறமாய் வைக்கவும் கொலைபேசி கிணுகிணுக்கவும் சரியாயிருந்தது. ரிசிவரை எடுத்துக் கொண்டு மிகவும் வசதியாய் அமர்ந்துகொண்டார்.

-ஆர். ரவீந்திரன்-

''ஹலோ, நாகையா ஸ்பீக்கிங். அட, நீயா? வணக்கம் மச்சான். ஓமோம். நான் பின்னேரந்தானே எதிர்பார்த்தனான். ஓமோம். நான்முடிச் சுத்தாறன். அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்..... ஓமோம். இன்னும் பத்து நாள்தான் இருக்குது. வாற பத்தாந் திகதி நான்றிட்டையர் பண்ணிறன். சீச்சீ, எனக்குக் கவலையில்லை.....இருக்கும் மட்டும் இந்தக் கதிரையை நல்லாய் அனுபவிக்கவேணும். அதுதான் என்ரை பொலிசி'' என்றவர் தனக்குள்ளேயே மெதுவாய் சிரித்துக் கொண்டார். ''சரி மச்சான் நாளை பிறைநேரம் உன்னோடை கதைக்கிறன்.. ஒக்கே'' என்றவாறு தொலைபேசியை வைத்துவிட்டு நிமிர்ந்தவரின் கண்கள் எதையோ தேடின.

''சுரேஷ் லோஜினியை ஒருக்கால் வரச்சொல்லு'' என்றவாறு அன்றைய தினசரியை எடுத்துப் பிரித்தார். மறு நிமிடமே லோஜினி மெதுவாய் வந்துகொண்டிருந்தாள். நாகையாவின் கண்கள் பத்திரிகையைப் புறந்தள்ளிவிட்டு லோஜினியை மேய ஆரம்பித்தன. அந்தப் பார்வையின் தீட்சண்யத்தை லோஜினியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இருந்தாலும் என்ன செய்வது? ''எஸ்யூஸ் மீ சேர்'' என்றவாறு மெதுவாய் அந்த அறைக்குள் பிரவேசித்தாள். ''வா லோஜி'' என்றவாறு கதிரையைக் காட்டினார் நாகையா. லோஜினி தன் மனதில் கொப்பளித்த வெறுப்பை அடக்கிக்கொண்டு முள்மேல் அமர்வது போல அந்தக் கதிரையில் அமர்ந்தாள். வெல்லத்தை மொய்க்கின்ற எறும்பைப்போல நாகையாவின் கண்கள் மீண்டும் மீண்டும் லோஜினியை மொய்த்துக் கொண்டிருந்தன.

''சீ, இதுவும் ஒரு மனிசனா? இப்பிடி ஒரு வக்கிரப் பிறவிக்குக் கீழை வேலை செய்ய நான் என்ன பாவம் செய்தேனோ?'' என்று தனக்குள்ளேயே எண்ணிக் கொண்டாள்.

''என்ன லோஜி, கனக்க யோசிக்கிறீர் நேற்று ஏன் ஒப்பீசுக்குவரேல்லை?'' என்றார் நாகையா.

லோஜினி சிரமப்பட்டு ஒரு

(X ஆம் பக்கம் பார்க்க)

சஞ்சீவி

சிறுகதைகள்

சின்னதாய் இடிந்துபோன பாழடைந்த கோயிலொன்று. இடப்புறம் ஒருவாசிகசாலை. நடுவில் சின்ன முற்றம்போல ஒரு மணற்பரப்பு. முன்னால் ஒரு தேநீர்க் கடை — கோயிலைப் பார்த்தபடி. பக்கத்திலேயே ஒரு சைக்கிள் திருத்தும் கடை. அப்பால் தள்ளித் தள்ளிசின்னதும்பெரியதுமாய் வீடுகள், குடிசைகள்...வசிப்பதற்கு உகந்த எவையாயினும் ...அக்கம்பக்கத்தில் வேறு தேநீர்க் கடையிலிலாவிட்டாலும் கூட சிலவேளைகளிற் பார்த்தால் யாரையுமே காணமுடியாது. முதலாளி ஈயோட்டிக் கொண்டிருப்பார். சிப்பந்திகள் கடைக்குப் பின்னால் ரகசியமாய் நடக்கும் தொழிலில் தம்மை ஆட்படுத்திக் கொள்வார்கள். ஆனால் இன்னும்சில வேளை ஊர்முழுதும் கடையிலேயே குவிந்தமாதிரி சனங்கள் திரண்டிருப்பார்கள். அது ஒரு ராசி அந்தக் கடைக்கு. சைக்கிள் கடைக்காரனிடம் எப்போதும் ஏதாவது சைக்கிள் ரிப்பேருக்கு வந்துகொண்டேயிருக்கும். கிறீஸும் எண்ணெயும் படிந்து சைக்கிள் காரனுக்கே உரித்தான மகத்தான அழுக்கு ஒட்டியிருக்கும் சேட்டும், ட்ரவுசரும் அணிந்து சுறுசுறுப்பாய் இயங்கிக்கொண்டிருப்பான். கோவிலுக்கு முன்னால் ஒரு ஆல மரம் நின்றிருந்தது. அது எத்தனை காலத்துக்குப் பழைய மரமோ தெரியாது. மரமரவென்று வளர்ந்து விழுதுகளைப்பரப்பினாலும்இப்பவும் இளசு மாதிரி சிவப்புப்பழங்களை பழுத்துக் கொட்டும். அந்தப் பழுத்தல்களுக்காக குயில்களும், புலுனிகளும் போட்டி போட்டுக் கத்தும். கீழே விழுந்திருக்கிற பழுத்தல்கள் கால்களுக்கடியில் நசியுண்டு சிதம்பும். அவ்விடத்தில் வருகிற வாண்டுப் பயல்கள் நசித்து, நசித்து அந்த மண்ணே ஒருவித சிவப்பும் மஞ்சளும் கலந்து செங்கட்டித்தூள் நிறத்தில் ஈரலிப்புற்றுக் கிடக்கும்.

கோயில் வெறுமே சுற்றுச் சுவரோ, வெளிகேற்றோ இல்லாதது. ஐயர் வருவார். ரெண்டு தரம மணியைக் கிலுக்கி விட்டு அந்த நேரம் வீதியால் போய்க் கொண்டிருந்துவிட்டு அந்த மணியொலிக்காக ஒரு நிமிஷம் கண்ணை மூடித் தியானிக்கும் பக்தர்களுக்காகவும், காலையும், மாலையும் தவறாமல் வந்து காணாமற் போன தன் மகனைப் பற்றி சுருங்கிப் போன கண்களுக் களில் கண்ணீர் உதிர முறையிடும் பொண்ணம்மாக்காவுக் காகவும், தானும் வலிந்து வருவிக்கப்படும் பக்தியுடன் இயந்திரமாய்ப் பூவையள் ளிப் போட்டு விட்டுப் புறப் பட்டு விடுவார். மற்றவேளைகளில் கோயில் பூட்டியிருக்கும். முன்னுக்கு மண்டபத்தில் குந்தியிருந்து காகம் போட்ட எச்சங்களும், சருகுகளுமாய்க் கிடக்கும் கோயில். மாலைமப்பெடுக்க ஆங்கே கூத்துக்கள் அரங்கேறும்; போத்தல்கள் உருளும்; மயக்க வெறியில் மனித மனங்களால் தணிக்கை செய்யப்பட்ட சொற்கள் உச்சத் துடிப்போடு அரங்கேறும்.

அடுத்தது வாசிகசாலை. நெடுங்காலத்திற்கு முன்பு பத்திரிகை வராமலிருந்தது. பிறகு கிராமசேவகரின் முயற்சியோ என்னவோ உதயனிலிருந்து—தினமுரசு வரைக்கும் சகல பத்திரிகைளும் அங்கே காணப்படும். ''திருமலையில் ஜவர் பலி''. ''கொழும்பு லொட்ஜ்களில் தேடுதல்வேட்டை..'போன்ற செய்திகளைத் தாங்கி வரும் வெளிப் பேப்பர்கள் அன்று முழுக்க அங்கேயே தின்றுவாரற்றுக் கிடக்கும். ''பெண்களின் வலைவீச்சில் அப்பாஸ்..'' ''சிம்ராணின் சிரிப்பைப்பற்றி...'' என்று வரும் நடுப்பக்கங்களெல்லாம் பத்திரிகை வந்த ஒரு மணித்தியாலத்துக்குள் எங்கென்றே தெரியாமற் காணாமற் போகும்...இதற்குப் பத்திரிகை வராமலே இருந்திருக்கலாம் என்பது பல இளசுகளின் அங்கலாய்ப்பு.

ரகுராஜ் தற்செயலாய்த் தான் அந்தப்பக்கம் வந்தான். கொழும்பிலிருந்து கொண்டுவந்த பார்சலை ஒருவரிடம் சேர்ப்பிக்க வேண்டியிருந்தது. சைக்கிங் பொயிருகளிலெல்லாம் நின்று, இறங்கி நடந்து வந்ததால் அவனுக்கே களைப்பாயிருந்தது.காஞ்சம் தேநீர் குடித்தால் நல்லது போல இருந்தது. அந்தத் தேநீர்க் கடையில் வேறு எதுவும் இல்லை. சைக்கிளை வேலியோரமாக நிறுத்திவிட்டு வந்து உட்கார்ந்தான். ஏற்கனவே இரண்டு பேர் உட்கார்ந்திருந்தார்கள். வேர்த்து விறுவிறுத்திருந்தார்கள். பக்கத்தில் புதிதாய்க் கட்டும் கட்டடத்திற்காகச் சீமெந்து மூட்டை காவி விட்டு வந்த வர்கள். இன்னும் நான்கு பேர் லொறியிலிருந்து மூட்டைகளைக் காவிக் கொண்டு போயினர்.

''ஐயாவுக்கு என்ன தாறது...?'' கடைப்பையன் உபசரித்தபடி கேட்டான்.

''சூடா ஒரு பிளேன் ரீ...'' கெடுத்தோம் என யோசித்துக் கொண்டான்.

பக்கத்தில் சைக்கிள் கடை வாசலில் ஸ்டூலை இழுத்து விட்டு ஒரு பெரியவர் இருந்து கொண்டிருந்தார். இளம் பெண்ணொருத்தி சைக்கிளை வைத்துக் கொண்டு காற்றடிப்பதற்குக் காத்திருந்தாள். அனேகமாய் அவள் ரியூசனுக்குப் போய்விட்டுத் திரும்பிக் கொண்டிருக்கலாம். ஆனால் அவள் தனியாய் புறப்பட்டதற்கான காரணத்தை ஊகிக்க முடியவில்லை.

மூட்டை சுமந்தவர்கள் ஒரு விதமாய் 'ரியூன்' போட்டார்கள். கொச்சையான பாட்டுக்களின் 'மெட்டை' அவளுக்குக் கேட்கும்படியா

-தூட்சாயணி-

திசைமாறும் தர்மங்கள்...

கப் பாடினார்கள். அவள் அந்தரித்துக்கொண்டு நின்றாள். அங்குமிங்கும் யாராவது பெண்துணை கிடைக்குமா? என்று பார்க்கிற பார்வை. சைக்கிள் கடைக்காரன் இதெல்லாம் கண்டு புளித்துப் போனவன். ''பொறுங்கக்கா வாறன்'' என்று சாவதானமாய் வந்து காற்றடித்து விட்டான். அவள் போய்விட்டாள்.

மூட்டைக்காரர்கள் உள்ளே வந்தார்கள். ஏதோ கேட்டார்கள். அவன் முன்னே சிப்பந்தி தேநீர் டம்ளரைக் கொண்டுவந்து வைத்தான். விளிம்புகளில் இலையான்கள் மொய்க்கப் பார்த்தன. இவன் தட்டிவிட்டு மளமளவென்று குடித்து விடுகிற மாதிரி வாய்க்குள் டம்ளரைக் கவிழ்த்தான். சிப்பந்தி இரண்டு போத்தல்களை அவர்களிடம் நீட்டினான். அவர்கள் மளமளவென்று அதை விழுங்கித் தள்ளினார்கள். அவன் தாங்க

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியும் 'குடி'யும்

சந்தியிலே ஆரப்பா! சத்த மிடுகிறது
கந்தையா அண்ணை?
குடிச்சிட்டோ வந்தனியள்
எத்தனை நாளாக இப்பழக்கம்! ஒயவில்லை?
பைத்தியத்தைப் போலே பகிமுழுக்கப் பாடுபட்டு
உற்ற பணத்தினைப் பெற்றவுடன்
பற்றுள்ள பெண்டாட்டி பிள்ளை களைமறந்து
கோப்புறேசன் கொண்டோடிக் காசைக் கொடுத்துவிட்டு
கும்பி வெடிக்கக் குடித்துவிட்டு வீட்டிலே
பட்டினியால் வாடும் மனைவிமக்கள் எல்லோரும்
தேடும் படியாய்ப் பொருள்களைச் சென்றுவிற்றுக்
கூடிக் குடியருடன் கும்மாளம் போட்டுக்
குடிக்கப் பணம் பெற்று மேலும் குடித்து
குடியாலே மூழ்கும் குடி.

— ஜெ. நிவேதன் —

சமாதானம் எப்போது?

த்ரக்கம் கண்மலர்ந்து கலிநீக்கி களிசேர்த்து
மனக்காயங்கள் ஆற்றவேண்டும்!
புரிந்துணர்வு முசமலர்ந்து நியாயங்கள் தெளிவாகி
நாமெல்லாம் சேரவேண்டும்!—கண்ணக்கும்
திப்பொறியில் நிலைமாற்றி உறவென்றும் பலமாகி
ஒற்றுமையுள் ஒங்கவேண்டும்!
சிலமுடன் நாமென்றும் சிராக வாழ்ந்திடவே நற்
பண்புகள் தங்கவேண்டும்!
கதைகட்டும் ஊர்வாயில் தன்மானம் காத்திடவே
தயங்காமல் துணியவேண்டும்!
ஊர்க்கதை கேட்டுச் சந்தியிலே மறிக்கும்
விபரீதம் இனியும் வேண்டாம்!
அலமோதும் எம்வாழ்வில் அநியாயம் தோன்றாமல்
அமைதியோடு நாம் வாழவேண்டும்!
இத்தனை நாள் பட்டதுயர்—நாம்
இனிமேலும் படவேண்டாம்!
இதயங்கள் மகிழும் வண்ணம்—சத்தியங்கள்
கண்திறந்து சமாதானம் நிலவிடவே
தத்துவங்கள் நிறைந்த உன் உள்ளத்தில்
பதவியின்முன் புரிந்துணர்வு வேண்டும்!

— கு. நிலாந்திரி —

தூக்கத் துறவு

சித்திரம் போன்றவள்; விசித்திரம் ஆனாள்.
எத்தனை காலங்கள் ஏங்கியே தவித்து,
நித்தமும் அவளின் நினைவினில் வாழ்ந்தேன்;
சொத்தான அவளை என் சொந்தத்தில் கொண்டு
பத்தினி என்றெண்ணி பார்த்திருந்த வேளை
அத்தனை ஆவலையும் அற்பமாய் எண்ணி
சத்தியநாயகி சடுதியாய் மாறினாள்!
குத்தி என் இதயத்தை குழப்பியே வைத்தாள்.
பித்தரைப்போல எனை புரளவைத்து
வித்தகி அவள் தான் விளையாடிப் போனாள்.
சித்தம் கலங்கி தலை சிதறிவெடித்தது;
சுத்தஅன்பு என்பது சுடலைபோல் ஆனது.
இத்தரைதனிலே இனிப்பெண் வேண்டாமென
முந்திய உறக்கத்தில் முழுக் 'கனா' கண்டேன்.
நித்திரைவிழிக்க நின்றனள் என்முன்
முத்தான என்னவள் முழுமையாய் என்னுள்
சித்தம்தெளிந்து சிந்தித்த வேளை
புத்தன் நானில்லையென புன்னகை செய்தேன்.

— மானியூர் ரட்ணேஸ் —

சைக்கிளே! வாழ்க்கைத் துணை!

ஏற்றிக்கொண்டு திரிபவனே, ஏந்தினையே உன்பெருமை
சுற்றிடத் தான்மனது தவிக்கிறது, வாட்டமின்றிக்
கூற்றெதிர்த்து ஓடும் காரிகையே காலமிதிக்க
ஊற்றெடுத்த உன்வேக உதவியினை மறப்பதில்லை

இடுப்பங்கே உழுந்தரைக்க இருகாலும் உதைகொடுக்க
கடுப்பின்றி என்பாரம் காவுபவள் நீதானே!
நொடிப்பொழுது வேகத்தில் நோக்கங்கள் நிறைவேற்ற
அடிப்படையாய் நின்றவளே ஆருதவி தந்தவளே!

பலஊர்கள் சுற்றிவர, பாரங்கள் ஏற்றிவிட
இளசான பெண்களிடம் எதிர்நின்று 'ஸ்டண்ட்' அடிக்க
வளமாக வந்தவளே வரமாக நின்றவளே
குலமாதே உன்கதையைக் கூறிவிட இன்பமடி!

அடியேய், நீயன்று அகாரத்தில் 'பிரேக்' மறுத்த
படியாலே தானெந்தன் பல்லுடைந்து போனதடி!—புவி
மடியில் நான்விழுந்து மண்ணில் தலைபுரண்டு
மூடியைக் குழப்பிட்ட முன்கோபக் ஏனடியோ?!

இருட்டில் பலதடவை இசகாக அடிபட்டு
உருட்டும் உன்வர்ணம் உருக்குலைந்து போனதுதான்,
ஊருத்தம் ஏதின்றி வழங்குமுன் உதவிகளைத்
'தரித்திரம்' எனச்சொல்லித் தள்ளிடவும் மனம்வருமோ?

வயது ஏறியதால்—உன் வடிவழகு மாறியதால்
பழசு எனச்சொல்லிப் பாவிப்பு மாற்றவிடேன்,
சுழன்றும் உலகின்று சொருகும் 'ஏர் பின்னது' தான்!
கழல்கின்ற சில்லிரண்டும் சுகமாக வாழியவே!!

— கி. குருபரன் —

எழும்படா தோழா!

விழிகளை இனியும்
மூடாதே!
குழியில் விழுந்ததால்
வாடாதே!
விடுதலை நாளை
மலரட்டும்!
கொடுமைகள் எல்லாம்
ஒழியட்டும்!
விழுந்தது தெரியும்
எழுந்திடு!
விரைந்தே பயணம்
சென்றிடு!
இன்றே கரையை
அடைந்தால் தான்
நாளை உன் மகன்
மகிழ்ந்திடுவான்.

— அலன். ரா. றொஹான் —

ஓடியல் கூழின் ஓங்கும் சிறப்பு

ஓங்கிவளர்பனைமரத்தின்
ஓடியல் கிழங்கு எடுத்து
ஓடித்து இடித்து மாவாக்கி
ஓடியல் கூழ் சமைத்தால்
ஓடிடும் நோய்கள் யாவும்.

மரவள்ளிக் கிழங்கு எடுத்து
மட்டாகத் தோலை நீக்கி வெட்டி
மரக்கறி பயிற்றங்காயுடன்
மஞ்சள் தூள் உப்புமிட்டு
மதியத்தில் கூழ்குடித்தால்
மாறிவிடும் நோய்கள் யாவும்.

மீனுடன் றாலும் போட்டு
மிளகாய் உள்ளி சீரகம் அரைத்து
மிளகு தூள் புளியும் சேர்த்து
மிதமாக கூழ் சமைத்து
மிகையாக கூழ் குடித்தால்
மின்னலை போல் நோய்கள் தீரும்.

நண்டுடன் கணவாய் சேர்த்து
நல்லதோர் பலாக்காய் போட்டு
நண்பர்கள் பலரும் ஒன்றாய்
நண்பகல் வேளை தன்னில்
நல்லதோர் கூழ்குடித்தால்
நலமுடன் நாங்கள் வாழ்வோம்.

பனையை வளர்ப்போம்.
பனைவளம் காப்போம்.
பனையால் உயர்வோம்.
பாரினில் சிறப்போம்.

— அல்வையூரான் —

வன்னியிலிருந்து ஓர் மடல்

அன்புடன் நண்பனுக்கு!
ஆவலாய் வரைகிறேன் ஒருமடல்.
நான் நலமாயில்லை.
நீ எப்படியோ? விவரமாய் எழுதுக.

முதலுக்கு நட்டமின்றி
புலம் பெயர்ந்தோர் வீட்டின்
கதவு, நிலை, ஓடெல்லாம்
விற்பதாய் ஒரு செய்தி.
என் வீட்டின் நிலை என்ன?
விவரமாய் எழுதுக.
செவ்விளநீர்த் தென்னைமரம்
செவ்வரத்தை கள்ளிமரம்
புழுக்கொடியல் ஒடியல் தந்த
வளவிற்பனை மரங்கள்
இவற்றின் நிலை என்ன?
விவரமாய் எழுதுக.

இரவிரவாய் கதையளந்த
தெருவோரச் சுமைதாங்கி
விழுதுகள் தாங்கி நின்ற
காளி கோவில் ஆலமரம்
தென்றலின் சுகம் தந்த
அரசமரம்
இவற்றின் நிலை என்ன?
விவரமாய் எழுதுக.

இறுதியாய்,
இருபாலை, கோப்பாய்
நீர்வேலி, புத்தூரின்
பள்ளிகளில்
மாணவர் வரவு நிலை என்ன?
மூலைக்கொரு மினிசினிமா
இருப்பதாய் கேள்வி.
விவரமாய் எழுதுக.
பதிலுக்காய் பார்த்திருப்பேன்.

— ச. இராகவன் —

இன்னுமேன் தாள் பணிகிறாய்?

(27 - 06 - 98 சஞ்சீவியில் பிரசுரமான "தக்கன் மகளா உலகின்தாய்?" என்ற கவிதைக்கு மீண்டும் பதில் கவிதையில் இங்கு வருகின்றது.)

தக்கன் மகளெனும் வன்மையால் வந்ததுன்
எள்ளலோ...? சிறு துள்ளலோ...
எக்கருத்தையும் ஏற்பவன் நீயெனின்
நின்று கேள்; பின் சென்று தேர்!...

அகிலம் யாவும் என்னு ளடங்கிடும்!
அனைத்துமே என் படைப்புதான்!
அதிகம் சொல்வதேன்? இன்பதுன்பமாம்
இரண்டுமே என்னுள் திரண்டதே!

நின்று கொல்லுமாம் தெய்வமென்பதை
அறிவியா...? அதில் தெளிவியா...?
அன்று நடந்ததில் அவலம் யாவுமே,
பதில் பெறும்; ஒரு நாள் வரும்!

தட்டிக் கேட்டிடத் தவறுவாள் என
எண்ணியோ, மனங் கன்றியோ...!
வெட்டுக் கொத்திட விரைவு வந்ததோ...!
அருவியாய்.. நுரைத் ததும்பலாய்...

கோழையென்றொரு பேரும் சூட்டினை
கோபமாய்... பரி.. தாபமாய்!
தாள் பணிந்ததேன்? கோழை மீது நீ...
பக்தியோ? என்(ன) சக்தியோ...?

அண்டங்கோடியும் இயங்க வைத்ததில்
ஆழ்வதும் — தழல் — சூழ்வதும்,
இன்று நேற்றுடன் முடிந்ததில்லையே..
யுகங்களாய்.. பல ஜகங்களாய்...

ஊழிக் கூத்திலே உயிர்கள் அழுவதை
ரசிக்கவோ? நான் ர(ட்)சிக்கவோ?
ஆழி சூழலும்வ் வேளை வந்திடில்
தெரிந்திடும் என்னைப் புரிந்திடும்!

மெலியன மீதொரு வலியகை படர்வை
பொறுப்பனோ? இல்லை வெறுப்பன!
கலியுகம் இதுவெனில் கலிவிரல் உன்மேற்
படருமோ...? பதில் தொடருமோ?

கடமையை நீ செய் பலன் உனக்கெதகு?
கீதை சொல்லிய பாதை!
உடலுடன் தருக தண்டனை என்பது
உன் வழியோ? என்னிற் பழியோ?

தோற்றுவிப்பதும், தோற்றம் காப்பதும்
நானென்றால் புவித் தாயென்றால்
கூற்றங் கொள்வதும் என்வினை அறை
சொல்லவா டீகை வெல்ல வா!

வாள்கள் கொண்டுமே வதைக்க வந்தவ
குறிப்பிலே நடுக் கழுத்திலே...
நீள் கதறலு மோங்கி ஒலித்திட
வெட்டினார் உயிர்தட்டினார்!

இத்தனைக்குமாய்ப் பெரும் பதில் என்னம்
உண்டுகாண் அதைக் கண்டுகேள்!
சத்தமின்றி நான் இருப்பதால் என்னி
ஐயமே நீயும் கொண்டியோ?

பலிக்கு வெட்டிய பாவச்சீவன்கள்
போலவாய்.. அவை கேவலாய்...
வலிக்கப் போகிற முடிவு தந்திடும்
வண்ணமே நான் எண்ணுவேன்!

பின்னும் இங்கொரு பலி நினைப்பது
டெங்குமோ? இல்லை மங்குமே!
இன்னுமுன் விசனம் தீர்ந்திடவில்லையே?
பிணக்கிலே தான் விருப்பமோ?...

— தாட்சாயிணி —

கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எல் - நினோ' தணிந்தது!

வருகிறது 'லா - நினா'

உலகின் பலபகுதிகளிலும் மாறுபட்ட அசாதாரண கால நிலையாக் அனர்த்தங்களைத் தோற்றுவித்த 'எல்—நினோ' வெப்பக்கால நிலை மெல்லத் தணிந்து வருவதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இந்த ஆண்டின் இறுதிக்குள் 'எல்—நினோ'வின் தாக்கம் முற்றாகத் தணிந்து விடும் என்று அவர்கள் நம்புகின்றனர். ஆனால் எல் — நினோவைத் தொடர்ந்து 'லா — நினா' (LA – NINA) என்ற அசாதாரண குளிர் காலநிலை இந்த ஆண்டின் இறுதியில் பூமியைத் தாக்கும் என்ற எச்சரிக்கையும் அவர்கள் விடுத்துள்ளனர்.

'எல் — நினோ'

மத்திய கோட்டை அண்டிய பசுபிக் பிராந்தியத்தில் சமுத்திர நீரிலும் வளிமண்டலத்திலும் ஏற்படும் ஒருவகை அசாதாரண வெப்பக் கால நிலையே 'எல் — நினோ' ஆகும்.

தென் அமெரிக்காவைப் பொறுத்தவரை பெரு நாட்டை கடும் மழை, வெள்ளப் பெருக்கினாலும், பிறேசிலை கொடிய வரட்சியினாலும் பழிவாங்கியது எல் — நினோ. தென் அமெரிக்காவின் வட பாதியை மழை வெள்ளமும், தென் பகுதியை வரட்சியும் ஆட்சி செய்தன.

லத்தீன் அமெரிக்காவில் மெக்சிக்கோ முதல் சிலி வரையான நாடுகளில் லட்சக் கணக்கான மக்களின் வாழ்வுடனும், ஜீவனோபாயத்துடனும் விளையாடிய எல்—நினோ ஆயிரத்துக்கும் மேற்பட்டோரின் உயிர்களைப் பலி கொண்டது. லட்சக் கணக்கான கால் நடைகள், வன விலங்குகள், பட்சிகளையும் அது அழித்தொழித்தது.

உலகின் மிகப் பெரிய இயற்கை வனமான அமேசன் காடுகளில் பரவிய காட்டுத் தீ இன்னமும் எரிந்து கொண்டிருக்கிறது பல நாடுகளில் ஆழமான நதிகள் வற்றின.

...'எல் — நினோ' என்ற அசாதாரண வெப்பக் காலநிலையில் இருந்து உலகம் மெல்ல விடுபட்டு வரும்வேளை அதற்கு நேர் எதிரான 'லா — நினா' குளிர் காலநிலை தலைகாட்டுகிறது இதன் விளைவாக மத்திய கோட்டை அண்டிய பசுபிக் சமுத்திரப் பிராந்திய நாடுகள் கடுங் குளிரில் சிக்கலாம். தென்னாசியாவிலும் அதன் தாக்கம் உணரப் படலாம்....

உலகில் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் எல்—நினோக்களில் கடைசியாக கடந்த ஆண்டின் இறுதியிலும் இவ் வாண்டின் தொடக்கத்திலும் தலைகாட்டிய எல்—நினோவே படு மோசமான இயற்கை அனர்த்தங்களைத் தோற்றுவித்தது. கடைசியாக 1982—83 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஏற்பட்ட எல் — நினோ மோசமான சேதங்களை ஏற்படுத்தியிருந்தது.

மத்திய கோட்டை அண்டிய பசுபிக் சமுத்திரப் பிராந்தியத்தில் ஒரு பகுதியில் கடும் மழை வெள்ளப் பெருக்கையும், இன்னொரு பகுதியில் கடும் வரட்சியால் காட்டுத் தீயையும் ஏற்படுத்திய போது எல் — நினோவின் கோர முகங்கள் வெளிப்பட்டன.

பெரு உட்பட சில நாடுகளில் மழையால் ஆறுகள் பெருக்கெடுத்து கிராமங்களை அடித்துச் சென்றன.

பனாமா கால்வாயில் நீர் மட்டம் குறைந்ததால் பெரிய கப்பல்கள் அவ்வழியே பயணிப்பது தடைப்பட்டது. கரிபியன் தீவுகளையும் 'எல்—நினோ' பதம் பார்க்கத் தவறவில்லை. கியூபாவில் ஆங்காங்கே காட்டுத் தீ பரவியது. ஏனைய தீவுகளை வரட்சி தாக்கியது.

கொலம்பியாவின் பெரும் பகுதி, வெனிசுவலா, கயானா, மற்றும் சூரினாம் ஆகிய நாடுகளும் வரட்சியில் சிக்கின. ஆர்ஜென்ரீனா, உருகுவே, பரகுவே, சிலி மற்றும் பெரு எனபன காலம் தவறிய மழையால் வெள்ளப் பெருக்கைச் சந்தித்தன.

நல்லூர் தாஸ்

பெரு சந்தித்த பேரழிவு

பெரு அரசாங்க அறிக்கைகளின் படி அந்நாட்டில் 88 பாலங்கள், 57 கிலோமீற்றர் நீளமான ரயில் பாதை, ஆயிரத்து 300 கிலோ மீற்றர் நீளமான தெருக்கள், ஆயிரத்து 200 க்கும் மேற்பட்ட பாடசாலைகள், 5 மின் வழங்கும் நிலையங்கள் என்பன வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டன. பெருவின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் கடற் றொழிலும் பாதிக்கப்பட்டது. 'எல்—நினோ' அனல் காற்று மீன்களை வடக்கில் இருந்து தெற்கிற்கு விரட்டியது. நீண்ட கடற் கரையை அண்டி வாழ்ந்த அரிய கடற் பறவைகள், பென்குயின் மற்றும் கடற்சிங்கங்களை 'எல்—நினோ' அச்சுறுத்தியது; அழிவை ஏற்படுத்தியது. 30 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வீடு வாசல்களை இழந்தனர். அதிபர் அல்பார்ட்டோ பிஜிமோறி உள் நாட்டில் அரசியல் அழுத்தங்களை எதிர் கொண்டார்.

பெரு நாடு தொடர்ச்சியாக எல் — நினோவால் தாக்கப்பட்டு வருகிறது. இவ் வாண்டு மட்டும் வெள்ள அழிவுகளால் நாட்டின் மொத்த ஏற்றுமதி 6 தொடக்கம் 7 வீதத்தில் இருந்து 4 முதல் 5 சதவீதமாக வீழ்ச்சி கண்டுள்ளது ஆனால் பெருநாட்டு மக்களுக்கு சில சாதகமான நன்மைகளையும் 'எல் — நினோ' ஏற்படுத்தியுள்ளது. தலைநகர் லீமா (Lima) மழை பெறாத வலயத்தில் அமைந்துள்ளதால் அந்த நகருக்கான நீர் விநியோகம் பெரும் பிரச்சினைக்குரியதாக இருந்து வருகிறது. ஒரு கோடி 80 லட்சம் கன சதுர மீற்றர் நீர் அந்நகருக்கு விநியோகிக்கப்படுகிறது. ஆனால் எல் — நினோவால் ஏற்பட்ட அசாதாரண மழைப் பொழிவு லீமா நகரின் தண்ணீர்ப் பற்றாக்குறையை அடுத்த ஒரு சில வருடங்களுக்கு தவிர்த்து விட்டது.

பெருவுக்கு அடுத்த படியாக வெள்ளப் பெருக்கின் சிற்றம் ஆர்ஜென்ரீனாவைத் தாக்கியது. கடந்த மே முற் பகுதியில் அந்நாட்டில் 80 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் நிலப்பிரதேசம் நீரில் மூழ்கியது.

பிறேசிலை வாட்டிய வரட்சி

ஆண்டு தோறும் வரட்சியால் பாதிக்கப்படும் பிறேசிலின் வட பகுதியை 'எல் — நினோ' மேலும் வாட்டியது. அந்நாட்டின் ஏழ்மைப் பொருளாதாரத்தை கடும் வரட்சி மேலும் மோசமாக்கியது. பயிர் அழிவு, காட்டுத் தீ என்பன கட்டுக்கடங்காமல் போனபோது ஜனிபர் பெர்னான்டோ கார்டோசோ (FERNANDO GARDOSO) உள்நாட்டில் அரசியல் நெருக்கடிகளை எதிர் கொண்டார். அவரது சமஷ்டி அரசு பாதிக்கப்பட்ட பிராந்தியங்களுக்கு உதவவில்லை என்று எதிர்க்கட்சி குற்றஞ்சாட்டியது.

எல் — நினோவின் தாக்கம் ஆரம்பிப்பதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஏற்பட்டு வந்த வரட்சியால் பிறேசிலில் 80 லட்சத்துக்கு மேற்பட்ட வறிய மக்கள் பாதிக்கப்பட்டனர். நாட்டின் வடகிழக்குப் பிராந்தியத்தின் விவசாய உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

பிறேசிலின் வரலாற்றில் 1877 — 79 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட கொடிய வரட்சியால் அந்த நாட்டின் மொத்த சனத் தொகையில் கால் பங்கினர் பலியாகியமை குறிப்பிடத்தக்கது.



பெரு நாட்டின் வடபகுதி நகரான றுஜில்லோவில் (Truglilio) ஆறுகள்உடைப்பெடுத்ததால்பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. நகரின் ஒதுக்குப் புறமாக உள்ள ஓர் இடுகாட்டின் ஒரு பகுதியை வெள்ளம் வாரி அடித்துச் சென்றது. அதனால் ஏற்பட்ட பெரிய பள்ளத்தினூடாக நிலத்தில் ஆழத்தில் புதைக்கப்பட்டிருந்த பிரேதப் பெட்டிகள் வெளித் தெரிகின்றன.

'லா—நினா'

'எல்—நினோவின்' சகோதரி (SISTER) என வர்ணிக்கப்படும் 'லா—நினா' (LA—NINA) எல்—நினோவை விட மோசமானதாக இருக்கக்கூடும் என்று வானிலை ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

அமெரிக்காவைப்பொறுத்தவரை இம்முறை 'லா—நினா' காலத்தில் தென்கிழக்குப் பிராந்தியத்தில் குளிர்கால வெப்பநிலை வழமையை விட அதிகரித்துக் காணப்படும். வடமேற்குப் பிராந்தியத்தில் குளிர்கால வெப்ப நிலை வழமையைவிட மிக 'சிறிய பெண்' (LITTLE-GIRL) 'குளிர் நாக்கு (COLD-TONGUE) 'எல்—விஜோ' (OLD MAN) என்று பலபெயர் கொண்டு அழைக்கப்படுகிறது. ''Anti—El – Nino'' என்றும் இதனை அழைக்கின்றனர்.

பசுபிக் சமுத்திரப் பிராந்தியத்தில் வழமைக்கு மாறான குளிரை இது ஏற்படுத்துகிறது. மத்திய கோட்டை அண்டிய பசுபிக் பிராந்திய நாடுகளில் இந்த குளிர்ந்த காலநிலையின் தாக்கம் உணரப்படுகிறது. கடைசியாக 1995 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் 'லா—நினா' தலைகாட்டியது. அதற்கு முன்னர் 1904, 1908, 1910, 1916, 1924, 1928, 1938, 1950, 1955, 1964, 1970, 1973, 1975, 1988 ஆகிய ஆண்டுகளில் இதன் தாக்கம் உலகில் உணரப்பட்டது. கடைசியாக 1987, 88 ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே இது தீவிரமடைந்து காணப்பட்டது.

எதிர்வரும் நவம்பர், டிசம்பர், ஜனவரி, பெப்ரவரி மாத காலப் பகுதியில் 'லா—நினா' வின் விளைவுகளை எதிர்பார்க்கலாம் என விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். அடுத்த மாதம் முதல் குளிர் காலநிலையை உணர முடியும் என்றும் சில அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

எல்—நினோவின் தாக்கம் அதிகமாக இருந்ததால் இம் முறை லா-நினாவின்பாதிப்பு அதிகரிக்கும் சாத்தியங்கள் உள்ளன.

பசுபிக் பிராந்தியத்தில் ஏற்படும் வழமைக்கு மாறான காலநிலைகள் இலங்கை, இந்தியா போன்ற தென்னாசிய நாடுகளில் பெரிதாகத் தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. ஆனால் எல்—நினோவின் பாதிப்பு இந்த ஆண்டின் தொடக்கத்தில் இலங்கை, இந்தியா போன்ற தென்னாசிய நாடுகளிலும் உணரப்பட்டது.

இந்தோனேசியத் தீவுகளில் பல்லாயிரக்கணக்கான ஹெக்ரேயர் காடுகளை வரட்சியால் பொசுக்கிய எல்—நினோ இலங்கையின் மத்திய மலைநாட்டு தேயிலைப் பயிர்களையும் அச்சுறுத்தியது. ஹட்டன், நுவரெலியா போன்ற நகரங்களில் வழமைக்கு மாறாக வெப்ப நிலை அதிகரித்துக்காணப்பட்டது. 'எல்—நினோ' காலப்பகுதியில் குடாநாட்டிலும் வெப்பம் அதிகரித்தே காணப்பட்டது; வெயில் கொழுத்தியது. மக்கள்

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மந்திரக்காளி

பகுதி 9

இரகசியத் தகவல்

எழுதப்பட்டிருந்த நான்கு வரிகளில் எதுவித விசேடமும் தெரியவில்லை:

அசோகன்
துர்க்கா
ஆதித்தன்
நிலா

அவர்களது குடும்ப அங்கத்தினரின் பெயர்கள் எழுதப்பட்டுக் கட்டமிடப்பட்டு இருந்தது. அது அசோகனின் எழுத்துஎன்பதில் பிள்ளைகளுக்குச் சந்தேகமில்லை. ஆனால் ஏன் இப்படி அவர் எழுதியிருக்க வேண்டும்? அப்பாவிற்கு மிகப் பெறுமதியானது தனது குடும்பமாகத் தானே இருக்கும்? அப்படியானால் இந்த இடம் தான் பெறுமதியானதா என்ன?

அமைதியான அந்த இடத்தை உற்று நோக்கினான். பெற்றவர்கள் நினைப்பில் கண்கள் கலங்கின. தங்கை அறியாது துடைத்துக்கொண்டான். கட்டமிட்ட பிரதேசம் மட்டும் பிரகாசமாக இருந்தது. அதைப் பெயர்த்து எடுத்தான். உள்ளே ஒரு நாலாக மடிக்கப்பட்ட காகிதம் இருந்தது. நிலா மகிழ்ச்சி மிகுதியால் றெக்ஸியை முத்தமிட்டாள். ஆதித்தன் அதை எடுத்தான்.

அவ்வேளையில், வெளியே... 'அம்மா...ஆ', என்ற வேதனையான அலறல் கேட்டது. காகிதத்தைப் பத்திரப்படுத்திக்கொண்டு வெளியே ஓடிச் சென்று பார்த்த போது யன்னலோரமாகக் கத்தியால் குத்தப்பட்ட ஒரு மனிதன் விழுந்து கிடந்தான். உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தான். அவனது கையில் 'வயர்லெஸ்' கிடந்தது, அருகில் ஒரு குறுவாள் கிடந்தது. அதிலும் விஷம் பூசப்பட்டிருந்தது. அடுத்த நிமிடமே அவன் உயிர்த் துடிப்பு அடங்கிப் போயிற்று. அவனது வலது காலில் 'சூலக்குறி' காணப்பட்டது. ஆகவே அவன் காளித்தாயின் பணியாளனாக இருந்திருக்கிறான் என்றார் தாத்தா.



அதே வேளையில், றெக்சி மண்டிக் கிடக்கும் புதரை நோக்கிக் குரைத்துக் கொண்டேயிருந்தது. திரும்பிய ஆதித்தன் அதிர்ந்தான். அங்கே முக்காடிட்ட ஒற்றைக் கண் மனிதன் புதர்களினூடாக மறைந்து ஓடிக்கொண்டிருந்தான். இவனை அவன் ஏன் கொல்ல வேண்டும்? ஆதித்தனுக்குப் புரியவில்லை. எவன் நல்லவன்? அதுவும் புரியவில்லை.

சிறுவர்களுக்கான மர்மத் தொடர்கதை

ஆனால் ஒன்று மட்டும் புரிந்தது. இங்கு நிற்கும் ஒவ்வொரு நிமிடமும் ஆபத்துக்குரியது என்பதே அது. உடனடியாகத் தாத்தாவுடன் நிலா, றெக்சியை அழைத்துக் கொண்டு தாத்தா வீட்டுக்குச் சென்று விட்டான். 'கெட்டிக்காரப் பிள்ளைகள்' என்று தாத்தா வாய் நிறையப் பாராட்டினார்.

ஆதித்தனும் நிலாவும் துப்பறிகிறார்கள்

அவசர அவசரமாக எடுத்திருந்த சிறு காகிதத்தை விரித்தான் ஆதித்தன். தாத்தா தன் கண்

ச. சாரங்கா

ணாடியைச் சரிப்படுத்திக் கொண்டார். அதில் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டிருந்தது.

ஒ ர் ர து த் ம ளி
வ தி வே ன் ரி சை ட
மு வி ட றி ய ல் டி

எதுவும் புரிந்து கொள்ள முடியவில்லை. தலையைப் பிய்த்துக் கொண்டார்கள்; பிடிபடவில்லை.

மூன்று நாள்கள் சாதாரணமாகக் கழிந்தன. நான்காம் நாள் தற்செயலாக நிலா சொன்ன வார்த்தையில் புதிர் துலங்கியது (தொடரும்)

இந்த வார இராசி பலன்

[11 - 07 - 1998 முதல் 17 - 07 - 1998 வரை]

வி	சனி		செ *சூ வெ
கே	இராகிச் சக்கரம்		புத
சந்			ரா

மாற்றம்:

சந்திரன் — மகர இராசியில் திருவோண நட்ஷத்திரத்தில் நிற்கும். 15-7-1998 இல் மிதுன இராசியில் வெள்ளி மாறும்.

அரசியலில் கொஞ்சம் இறுக்கம் கொடுக்கும் காலமாகும். தலைவர்களுக்கு நல்லதல்ல. எதிர்பாராத தாக்கங்கள் சில இடங்களில் ஏற்படலாம். சமயத்தலைவர்கள் அபிப்பிராய பேதப்படுவர். வெளிநாட்டுத் தலையீடுகள் ஏற்படஇடம் உண்டு. இந்தியாவில் மதமும் அரசியலுடன் கைகோர்த்து நின்று செயற்படும். அயல் நாடுகளுடன் ஓர் இறுக்கமான கொள்கையைக் கடைப்பிடிக்கும். அரசியல்வாதிகள் வடக்கிலும்– தெற்கிலும் தங்கள் அவசியத் தேவைகளை வைத்து அடிக்கடி செய்திகளைப் பரிமாறி — மக்களை ஏமாற்றுவார்கள்.

எதிரிக்கு— எதிரி நண்பன் என்றபடி உலகில் மேற்கு நாடுகள்—கிழக்கு நாடுகளுக்கு உதவிகள் செய்து மறைமுகதாக்கங்களை ஏற்படுத்தும். மத்தியகிழக்கில் பழையபடி யுத்த மேகம் கருக்கூடும். மக்கள் தெய்வ வழிபாடுகளைச் செய்யவேண்டிய பலன்கள் காணப்படுகின்றன.

மேடம்:– தேடிவரும்வேலைகளைத் தட்டி உதைக்காமல் ஊக்கமாக இருந்தால் காசு வரும். தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்புக்கள் ஏற்படும். வீணான வாக்குவாதம் வேதனையைத் தரும். எதிர்ப்பாலாராலும் பெற்றோர் வழியினராலும் மனக்கஷ்டங்கள் ஏற்படும். திடீர் நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். தடக்கிவிழுதல், வாய்வுத் தொல்லை, விஷபீடைகள், உஷ்ணவியாதிகள், தோல் வியாதிகள் என்பனவற்றுடன் வயிற்று நோக்கள் இருக்கும். ஏழரைச் சனீஸ்வரனின் தாக்கத்தால் எதிலும் ஒரு மந்த நிலை, விழுந்து, விழுந்து எழும்பியபடி இருக்கும். அடிக்கடி உணர்ச்சிவசப்படாது காரியச் செயற்பாடுகளில் அவதானமாக இருக்கவும்.

★ அதிர்ஷ்ட நாள்:– திங்கள், புதன்.

இடபம்:– உங்களின் நிதானமான செயற்பாடும், பொறுமையும்தான் உங்களுக்கு வெற்றிதரும். உங்களின் பேச்சு, செயற்பாடுகளை தொழில் ஸ்தானத்திலும், அயலிலும் கவனித்தபடி இருப்பார்கள். ஊக்கத்தைப் பொறுத்து நன்மைகள் ஏற்படும். எந்த இடத்திலும் நீங்கள் கொதித்து எழாமல் இருக்கவும். அல்லது உங்கள் பலவீனம் உங்களைக்காட்டிக் கொடுத்து விடும். கைகால் உளைவு, நரம்புத் தளர்ச்சி, மறதி, மனப் போராட்டம், சலவருத்தம், நெஞ்சு நோ என்பன இருக்கலாம். சாப்பாட்டை நிதானமாக வைத்துக் கொள்ளவும்.

★ அதிர்ஷ்ட நாள்:– புதன் வியாழன்.

சோதிட சஞ்சீவி

மிதுனம்:– என்ன சட்டுப்புட்டென்று அலுவல்கள் பார்க்கிறீர்கள்? கொஞ்சம் நிதானமாகப் போங்கள். பக்கத்தில் ஆட்கள் பார்த்தபடி இருக்கிறார்கள். விகடப் பேச்சு காரிய அனுகூலங்களைச் சாதகமாக்கும். தொழில் ஸ்தானத்தில் அங்கும், இங்குமாக ஓடித்திரிவீர்கள். புதிய திட்டம், மாற்றம் என அடிக்கடி சத்தம் போடுவீர்கள். எதையும் ஒரு நிமிஷத்தில் நிதானித்து அதற்கேற்றவாறு சமாளித்து விடும் கெட்டிக்காரர் நீங்கள் என்பது எனக்குத் தெரியும் தானே. கைகால் தாக்கம் தலையில் நோ, மனக் குழப்பம், அதிக களைப்பு வாய்வுத் தொல்லை என்பன வருத்த இடம் உண்டு.

★ அதிர்ஷ்ட நாள்:– வியாழன், புதன்.

கடகம்:– நீங்கள் உள்ளதெல்லாம் உரைத்தபடி இருப்பீர்கள். ஆனால் உங்களை நாலு பேர் நாலு விதமாக கதைத்தபடி இருப்பார்கள். தொழில் ஸ்தானத்தில் வாக்குக்கலகம் ஏற்படும். கறுப்புப் பொருள் ஒன்று தொலையவோ, இழக்கவோ நேரிடும். அடிக்கடி அலைச்சலும், மதிப்புக் குறைவான பேச்சுக்களால் மன வேதனையும் ஏற்படும். திடீர் திடீரென உணர்ச்சிகள் பலவித மனப்போராட்டங்களைத் தந்தபடி இருக்கும். தேடியது கிடைக்கும். ஆனால் தேன் சுவையற்றிருக்கும் நிலை ஏற்படலாம். நெஞ்சு நோ, கைகால் உளைவு, சலவருத்தம், தோல் வருத்தம் என்பவற்றால் வருந்த வேண்டி வரும்.

★ அதிர்ஷ்ட நாள்:– புதன் வியாழன்.

சிங்கம்:– உங்களுக்கு எதிர்காலத்தில் பல மாற்றங்கள் ஏற்படும். காணி பூமி சம்பந்தமாகவோ, ஆலயப் பொருள் சம்பந்தமானதாகவோ பிரச்சினையொன்றில் வாக்குவாதப்பட நேரிடும். தொழில் ஸ்தானத்தில் புத்தி சாதுரியமாக நடக்கவும். நல்ல வரவேற்பு இருக்கும். பொறாமையால் மறைமுக எதிர்ப்புக்களும் தலை தூக்க இடம் உண்டு. நெஞ்சு நோ, உடல் வலி, உள் உறுப்புக்களில் வேதனை, உஷ்ண பீடைகள், வேதனை தரலாம். உறுதியாகவும், ஒழுங்காகவும் எதையும் செயற்படுத்துங்கள். நன்மைகள் ஏற்பட்டபடி இருக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்:– சனி, புதன்.

கன்னி:– உங்களுக்கு அட்டமத்துச்சனி எனக் கலங்கி விடாதீர்கள். ஆனால் அரசியலில் ஈடுபடவோ அல்லது அதிகம் கதைக்கவோகூடாது. அதனால் விளையாட்டு வினையாகும். விதிவசப்பட்ட பலன்கள் நடக்க இடம் உண்டு. தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் கண்டிப்பு இருக்கும். அதிக லீவு எடுக்காது பார்த்துக் கொள்ளவும். குறிப்பிடத்தக்க மாற்றங்கள் தொழில் ஸ்தானத்தில் ஏற்பட இடம் உண்டு. உஷ்ணபீடைகள், காய்ச்சல், வயிற்றுநோ, வாய்வுத் தொல்லைகள் என அடிக்கடி வருந்தியபடி இருப்பீர்கள். குலதெய்வ வழிபாடு முக்கியமாகும்.

★ அதிர்ஷ்ட நாள்:– திங்கள், புதன்.

துலாம்:– வேலையற்றவர்கள், தேவையற்ற போதனைகளைப் போதித்தபடிதான் இருப்பார்கள். அதற்காக உங்களை மாற்றிவிட முடியுமா? எல்லாம் பொருளாதார அடிப்படையிலேதான் இயங்குகின்றன. பொருள் இல்லை என்றால் எல்லோரும் போய்விடுவார்கள். தொழில் ஸ்தானத்தில் பல புதிய திட்டங்கள் உருவாகி செயற்படும். எதிர்ப்பாலாரால் அலைச்சல் ஏற்படும். வயிற்றில் வருத்தம், கைகாலில் நோ, தோல் உபாதைகள் கொடுக்கத்தான் செய்யும். எந்த விஷயமானாலும் கதைத்துச் சமாளிக்கப் பாருங்கள். அல்லது மாறி மாறிப் பிரச்சினைக்கு முகம் கொடுக்க நேரிடும்.

★ அதிர்ஷ்ட நாள்:– திங்கள், புதன்.

மகாதேவா ஜோதிடம்

விருச்சிகம்:– உங்களை எதிர்ப்பாலார் பேசித் தீர்ப்பார்கள். எனவே கொஞ்சம் அனுசரித்துப் போங்கள். மிகவும் கட்டுப்பாட்டுடன் உங்களைப் பிறர் அறியாத வண்ணம் பிறரின் செல்வாக்கு கோராதபடி செயற்பட்டு காரியங்களைச் செய்துவருவதில் நீங்கள் கெட்டிக் காரர்கள். தொழில் ஸ்தானத்தில் நீங்கள் வைத்ததே சட்டம் எனச் செயற்பட்டு பிறரின் பேச்சுக்கு ஆளாகுவீர்கள். சிலசமயம் கட்டுப்பாடுகளால் சிறைப்பட்ட நிலை தோன்றும். கிருமித் தாக்கம், இருதய நோ, படபடப்பு, உடல் களைப்பு, உஷ்ண கிரந்திப் பீடைகள், காயங்கள் என்பன ஏற்பட இடம் உண்டு.

★ அதிர்ஷ்ட நாள்:– சனி, திங்கள்.

தனுசு:– அதிகம் உங்களைப் பற்றி பிரசங்கம் செய்கிறீர்கள் போல இருக்கின்றது. எதிர்ப்பாலாரை அனுசரித்

(X ஆம் பக்கம் பார்க்க)

குறள் வெள்ளம்

விஞ்ஞான வளர்ச்சி— அறிவியல் அபிவிருத்தி—வேகமாக சூடுபிடித்திருக்கிறது. இந்த வருடப் படிப்பு அடுத்தவருடம் பொய்க்கிறது.

பெற்றவர் தான்கற்ற கல்வியைக்கொண்டு பிள்ளைக்குப் பாடம்புகட்டும் காலம் மலையேறி விட்டது. பிள்ளையிடம் விடயங்களைக் கேட்டு விளங்கும் காலம் இது.

இப்படிப் பிள்ளைகள் அறிவில் தம்மை மிஞ்சுவதைக் கண்டு பெருமைப்படும் பெற்றார்களே அதிகம். இதில் பொறாமைப்பட பாமரர்கள் கூட தயாரில்லை.

''என் மகன்—என்னோடு அங்கே வந்து—இங்கிலீஷ் எல்லாம்கதைச்சு—எல்லாம் வடிவா செய்விச்சுத்தந்தவன்'' என பெருமை பிடிபடாமல் பாராட்டும்— ஏதுமறியாப் பெற்றவர்களை தினம் தினம் காண்கிறோம்.

''அவனுக்கு ஒன்றுமே விளங்காது; சின்னப் பிள்ளை''—எனப்பெட்டிப் பாம்பாக மூடி மூடி வளர்ப்பவர்கள் தோல்வியையே தழுவுகின்றார்கள்.

தற்பெருமை பேசிப் பேசி காலம்கழிப்பவர்கள்— உயர்ந்த ஸ்தானங்களில் இருப்பவர்கள்—தங்கள் பிள்ளைகள் முன்னேற்ற முயற்சியில் சறுக்கிவிடும் போது கூனிக் குறுகி விடுகிறார்கள்.

பெற்றவர்களின் பெருமை—பிள்ளைகள் அவர்களையும் மிஞ்சுகிறார்களா என்பதில் தான் தங்கியிருக்கிறது. தகப்பனைவிட ஆழமான முத்திரையை மகன் உலகினில் பதிக்கிறான் என்றால் தந்தையின் மனம் இனிக்காமலா போகும்?

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை
மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.
(மக்கட்பேறு)

—0068

— அம்பிகைபாகன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரியார் கூறிய பூசாரிக் கதை!

ஒரு காளி கோயிலில் பூசாரி ஒருவன் பூசை செய்து கொண்டிருந்தான். மார்கழி மாதம் விடியற்காலையில் குளிர்ந்த நீரில் முழுகிக் காளி தேவிக்குத் தயிரன்னம் நிவேதனம் செய்வான். ஒவ்வொரு நாள் ஒவ்வொருவருடைய உபயம். தட்டில் பணம் போடும் பெரியவர்களுக்குத் தயிரன்னத்தை விளாம்பழம் அளவு உருட்டித் தருவான். பிள்ளைகள் கையில் தயிரன்னத்தைத் தடவியனுப்புவான் அப் பிள்ளைகள் வெளியே வந்து பூதக்கண்ணாடி போட்டுப் பார்த்தால்தான் கையில் பிரசாதம் இருப்பது தெரியும்!

பூசாரிக்கு ஆகார மாறுபாட்டால் காய்ச்சல் வந்தது. அதற்குத் தகுந்த மருந்து உண்பதுதான் முறை. அவன் அறிவில்லாதவன். ''காளியாயீ! இந்தக் காய்ச்சலில் இருந்து என்னைக் காப்பாற்று. உனக்கு இரு ஆடுகள் பலி தருவேன்.'' என்று பிரார்த்தனை செய்து கொண்டான். அவன் மனைவிமிளகு, திப்பிலி கஷாயம் செய்திருந்தான்... காய்ச்சல் நின்றுவிட்டது.

ஆடி மாதம் அம்மனுக்கு அபிஷேகம் செய்து, இரு ஆடுகளை வெட்டி விட்டான். ஆட்டை வெட்டும் போது ஆட்டின் உடல்லி மஞ்சள் நீர் தெளித்தால் அது உதறுமாம். 'வெட்டு' என்று அது உத்தரவு தந்தது என்று அதற்கு அடையாளமாம். தண்ணீர் பட்டால் உதறுவது இயற்கை.

அந்த நகரை ஆட்சி புரிகின்ற மன்னவனுக்கு ஒரு மகனும், மந்திரிக்கு ஒரு மகனும் பிறந்தார்கள் மன்னவன் மகனும் மந்திரி மகனும் கலைகளில் வல்லவர்களாக ஆனார்கள். மன்னன் மகனுக்கு முடிசூட்டு விழா நடை பெற்றது.

மன்னன் மகனுக்கு மகுடாபிஷேகம் செய்த பன்னிரண்டு ஆண்டுகளாக மழையில்லை. மக்கள் உண்ணீரும் தண்ணீரும் இன்றித் தவித்தார்கள்.

ஒருநாள் மன்னவன் மகனும், மந்திரி மகனும் இரவு பத்து மணிக்குக் காளி கோவிலுக்குச் சென்றார்கள். நம்மைத் தண்டிக்க வருகிறார்களோ என்று அஞ்சிய பூசாரி காளிதேவிக்குப் பின் புறம் ஒளிந்து கொண்டான்.

மன்னவன் மகன் அம்பிகையை அஞ்சலி செய்து ''தேவீ, கருணாம்பிகை! அகிலாண்ட நாயகி! எனக்கு முடிசூட்டிய பின் பன்னிரண்டு ஆண்டுகளாக மழையில்லை. நீரின்றி, சீரின்றி மக்கள் தவிக்கிறார்களே... அம்பிகையே! அருள் புரிந்து மழை பொழியச் செய்வாய்'' என்று உள்ளம் உருகி வேண்டினான்.

காளி தேவி, ''மன்னன் மகனே! என் சந்நிதியில் ஒரு நரபலி தந்தால் மழை பெய்யும்'' என்று அசரீரியாகக் கூறினாள்.

மன்னன் மந்திரியைப் பார்த்து, ''தோழனே, மக்களுக்கு நான் தந்தை, மக்கள் பொருட்டு என் உயிரைத் தியாகம் புரிய வேண்டும். என்னைப் பலியிடு; நீ பதவியேற்று அரசு செய்!'' என்றான்.

மந்திரி அரசே ''தங்களின் நண்பனாகிய நான் தங்களைப் பலியிடுவதா? வேண்டாம். என்னைப் பலியிடுங்கள். மந்திரிப் பதவிக்குப் பலர் ஆலாய்ப் பறக்கின்றார்கள். யாரையாவது அமைச்சராக அமைத்து அரசு புரியுங்கள்'' — என்றான்.

இவ்வாறு, ''என்னைப் பலியிடு... என்னைப் பலியிடு'' என்று இருவரும் வாதிட்டனர்.

அரசன், ''அன்பனே! உனக்கும் எனக்கும் வாக்கு வாதம் வேண்டாம். அம்பிகையைக் கேட்போம். அம்பிகை யாரைக் கேட்கின்றாளோ, அவ்வாறே செய்யலாம்'' என்று கூறினான்.

''தேவி! உன் சந்நிதியில் அடியேன் பலியாக வேண்டுமா? அல்லது என் அமைச்சன் பலியாக வேண்டுமா?'' என்று வினாவினான் அரசன்.

தேவி, ''மன்னவனே! நீயும் பலியாக வேண்டாம். மந்திரியும் பலியாக வேண்டாம். என் பின்னே ஒளிந்திருக்கின்ற பூசாரிதான் பலியாக வேண்டும்!'' என்றாள்.

பூசாரி இதைக்கேட்டு நடுநடுங்கினான்; வெளியே வந்தான். அவனுடைய கண்கள் சிவந்தன. மீசை படபடத்தது. புருவம் நெளிந்தது. ''காளியாயீ! நீ ஒரு தெய்வமா? உன்க்கு ஐம்பத்து ஐந்து ஆண்டுகளாகப் பூஜை செய்தேனே... என்னையா பலியிடச் சொல்கின்றாய்? உனக்குக் கருணையில்லையா? எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்கட்கும் நீ தாயல்லவா? நான் உனக்குச் சேயல்லவா? கொடியவளே, உனக்கு இரக்கம் இல்லையா? பல காலம் தொண்டு செய்த என்னையே பழிவாங்க முற்பட்டனையே! உன் மனம் இரும்பா? கல்லா? இரக்கமில்லாத அரக்கியே! நீ ஒரு தெய்வமா?'' என்று கூறி வசைமாரி பொழிந்தான்.

காளி தேவி, ''பூசாரி! பதற்றம் அடையாதே. தானத்தில் நிதானம் பெரிது. தயிரன்னம் உண்டு உனக்கு காய்ச்சல் வந்தால் கோனாரின் வீட்டில் வாழும் ஆடுகள் என்ன பாவம் செய்தன? எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்கட்கும் நான் தாயென்று இன்றுதான் உணர்ந்தனையா? நீ வெட்டிய ஆடுகட்கும் நான் தாயல்லவா? வாயில்லாத அந்தக் குற்றமற்ற ஆடுகளைக் கதறக் கதற அன்று பலியிட்டனையே...? நீ பலியிட்ட அந்த இரு ஆடுகளும் உன்னைப் பழிவாங்க மன்னவன் மகனாகவும், மந்திரி மகனாகவும் பிறந்து வந்திருக்கின்றன!

'பிறர்க்கின்னா முற்பகல்
செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்''

என்பது பொதுமறை. அவ்வினைக்கு இவ்வினை'' என்றாள்.

பூசாரி குனிந்து நின்றான். மன்னவன் வாளினால் பூசாரியின் தலையைச் சேதித்தான். அம்பிகை அரசன் முன் காட்சி தந்தாள்.

(XI ஆம் பக்கம் பார்க்க)

அரசரின் விசித்திரச் செயல்!

ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தார்.

அவர் ஒரு நாள் மாறுவேடம் அணிந்து நகர்வலம் வந்துகொண்டிருந்தார்.

இரவு நேரத்தில் ஒரு குதிரை மீது அமர்ந்து தன்னுடைய நாடு நகரமெல்லாம் எப்படி இருக்கிறது என்று சுற்றிப் பார்த்தபடியே வந்தார்.

நகரத்திற்கு வெளிப்பக்கமாக ஒரு புளியமரத்தடியில் ஓர் ஆள் பரிதாபமாக உட்கார்ந்திருந்தான்.

அந்தப் பக்கமாக வந்த ராஜா அவனைப் பார்த்தார்.

''ஏனப்பா இந்த நேரத்தில் இப்படி இங்கே உட்கார்ந்திருக்கிறாய்?'' என்று அவனை விசாரித்தார்.

''ஐயா, நான் ஊருக்குள் போகவேண்டும். என்னைக் கொஞ்சம் உங்கள் குதிரை மீது ஏற்றிக்கொண்டு ஊருக்குள் கொண்டுபோய் விட்டீர்களானால், மிகவும் உதவியாக இருக்கும்'' என்று அவன் தெரிவித்தான்.

''சரி, ஏறிக்கொள்'' என்றார் அரசர்.

''என்னால் ஏற முடியாது ...நீங்கள்தான் என்னைத் தூக்கிக் குதிரைமீது உட்கார வைக்க வேண்டும். ஏனென்றால் நான் கை—கால் வளங்காதவன். என்னுடைய இரண்டு கால்களும் உணர்ச்சியே இல்லாத மரக்கட்டைபோல் ஆகிவிட்டன. அதனால்தான் நடக்க முடியாமல் இங்கேயே கிடக்கிறேன்'' என்றான் அவன்.

''ஐயோ பாவம்'' என்று பரிதாபப்பட்டு ராஜா குதிரையிலிருந்து கீழே இறங்கினார். அவனைத் தூக்கிக் குதிரை மீது உட்காரவைத்தார்.

அவ்வளவுதான்...! அந்த ஆள் குதிரையை அடித்து விரட்டி, ஓட்டிக்கொண்டு போய்விட்டான்!

ஆமாம்! அவன் உண்மையில் கை, கால் வளங்காதவன் இல்லை! அவன் ஒரு திருடன்! குதிரையைக் கடத்திக்கொண்டு போவதற்காகத்தான் இப்படி நாடகமாடியிருக்கிறான்.

ராஜா ஏமாந்து கீழேயே நின்றுவிட்டார். அவருக்கு மிகவும் அவமானமாக இருந்தது. இருந்தாலும் யாருக்கும் தெரியாமல் பேசாமல் அரண்மனைக்குத் திரும்பி வந்தார்.

இந்த விஷயத்தை அவர் யாரிடமும் சொல்லவே இல்லை.

சில நாள்களுக்குப் பிறகு ஒரு நாள் அரண்மனையில் வழக்கு விசாரணைகள் நடந்துகொண்டிருந்தன.

ராஜா ஒவ்வொரு வழக்காக விசாரித்துத் தீர்ப்பு வழங்கிக் கொண்டிருந்தார்.

சேவகர்கள் திடீரென்று அரசரின் முன்பு ஓர் ஆளைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

''மன்னா, இவன் பல இடங்களில் திருடியிருக்கிறான்; கொள்ளையடித்திருக்கிறான். நேற்று இரவு இவன் ஒரு வீட்டில் நுழைந்து திருட முயற்சி செய்தபோது, நமது காவலாளிகள் பார்த்து விட்டார்கள். ஆகவே இவனைப் பிடித்து இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள்'' என்று அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

ராஜா நிமிர்ந்து பார்த்தார். அன்றைக்குத் தன்னை ஏமாற்றிய அதே ஆள் தான் இவன் என்பதைப் புரிந்து கொண்டார். ஆனால் அவனால் இவரைப் புரிந்து கொள்ள முடியவில்லை... ஏனென்றால் அன்றைக்கு ராஜா மாறுவேடத்தில் அல்லவா இருந்தார்?

ராஜா பார்த்தார்.

''தீர்ப்பு நாளைக்கு வழங்கப்படும்'' என்று சொல்லி சபையைக் கலைத்தார்.

அந்த ஆளைக் கொண்டு போய் சிறையில் அடைத்தார்கள்.

அன்றைய தினம் இரவு எல்லோரும் தூங்கிய பிறகு, ராஜா நடுஇரவில் ரகசியமாகச் சிறைக்கூடத்துக்குச் சென்று அந்த ஆளைப்

(XI ஆம் பக்கம் பார்க்க)

குட்டிக் கதைகள் கூறும் தத்துவங்கள்

குருநானக் புகட்டிய படிப்பினை!

ஓர் ஊரில் ஒரு பெரிய பணக்காரர் இருந்தார். பணத்திற்கு அவரிடம் பஞ்சமே இல்லை.

ஆதலால் அவர், இந்த உலகில் நம்மால் எதையும் சாதிக்க முடியும் என்று நினைத்தார். இவைபோன்ற எண்ணங்கள் பொதுவாகப் பணம் அதிகம் வைத்திருக்கும் பலருக்கும் தாமாகவே வந்துவிடுகின்றன.

ஒரு சமயம் அந்த ஊருக்கு குரு நானக் வந்திருந்தார்.

அவருக்கு இந்தப் பணக்காரர் ஊர் எல்லையிலேயே மிகவும் பெரிய வரவேற்புக் கொடுத்து ஊருக்குள் அழைத்துச் சென்றார்.

குரு நானக்கிடம், ''தாங்கள் என் வீட்டிற்கு வந்து விருந்து சாப்பிடவேண்டும்'' என்று பணக்காரர் கேட்டுக் கொண்டார்.

''சரி'' என்றார் குரு நானக்.

உடனே தனது மாளிகையில் பெரிய ஒரு விருந்துக்குப் பணக்காரர் ஏற்பாடு செய்தார். குரு நானக்கை அங்கே அழைத்து சென்றார்; அமரும்படி செய்தார்.

''ஐயா! நான்தான் இந்த ஊரிலேயே மிகவும் பெரிய வசதியுள்ள பணக்காரன். என்னால் எதுவும் செய்யமுடியும். உங்களுக்காக நான் என்ன செய்யவேண்டும் என்று சொல்லுங்கள். எதுவாக இருந்தாலும் பரவாயில்லை! எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை! என்னால் செய்ய முடியும்! என்ன செய்யவேண்டும்என்று சொல்லுங்கள்'' என்று பணிவோடு தெரிவித்துக்கொண்டார்.

இதைக் கேட்டதும் குரு நானக் சிறிது நேரம் சிந்தித்தார்.

அதன்பிறகு அவர் தமது சட்டைப்பை க்குள்கைவிட்டு ஒரு பழைய ஊசியை எடுத்தார். அதை அந்தச் செல்வந்தரிடம் கொடுத்து, ''இதோ பாருங்கள், இவ்வளவு தூரம் நீங்கள் கேட்பதால் சொல்கிறேன். எனக்கு நீங்கள் செய்யவேண்டிய உதவி இதுதான்'' என்றார்.

ஊசியைக் கையில் வாங்கிக்கொண்டு, ''இதை என்ன

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வார இராசி...

(VIIIஆம் பக்கத் தொடர்ச்சி)
துப் போங்கள். காரிய அனுகூலம் ஏற்படும். வீடுமனைச் சிறப்பு, தொழில் பீடத்தில் நன்மைகளும் பெரியவர்களின் உதவிகளும் கிடைக்கும். நீங்கள் எதை எப்படிப் பேசினாலும்உங்களை எவரும் வெறுப்பது இல்லை. கை கால் உளைவு, நரம்பு, உள் உறுப்புக்களால் வேதனை, வாய்வு, பித்தரோகம் என்பன கொடுக்கும். தகுந்த வைத்தியம் செய்து சுகம் அடையலாம்.

★ அதிர்ஷ்ட நாள்:– திங்கள், புதன்.

மகரம்: எந்த விஷயத்திலும் இடைவிடாத முயற்சியே வெற்றிக்கு வழிவகுக்கும். உங்கள் ஆலோசனைகளை எல்லோரும் ஏற்பார்கள். தொழில்ஸ்தானத்தில் அவசர புத்தியால் சில சந்தர்ப்பங்களைத் தவற விட்டு விடுவீர்கள். வீடுமனையில் மந்தநிலை, களவுகள் போகலாம். மறைமுகச் சத்துராதிகளால் வேதனைகள் கொடுக்கும். வயிற்றுக் கோளாறு, நரம்புத்தளர்ச்சி, கைகால் தாக்கம், உடல்வலி, சிரசு வருத்தம் என அடிக்கடி வருந்த இடம் உண்டு. இனஜனங்கள் அல்லது நண்பர்களுக்காக இக்காலத்தில் பல உதவிகளைச் செய்தபடி இருப்பீர்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, திங்கள்.

கும்பம்: வீட்டிற்கு வீடு, நாட்டிற்கு நாடு பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும். அரசியல் பேச்சுக்களில் ஆனந்தம் காணுவீர்கள். கதைத்துக் கதைத்து கருத்துக்களை ஸ்திரமாக்கியபடி இருப்பீர்கள். தொழில்ஸ்தானத்தில் பலரின் உதவிகள் கிடைத்தபடி இருக்கும். மேலதிகாரிகளால் பல உதவிகளும், நண்பர்களால் ஆறுதல் வார்த்தைகளும் கிடைக்கும். எந்த அலுவல்களையும் அந்த அந்தக் காலத்தில் முடிக்க விரும்புவீர்கள். நரம்புச் சோர்வு, கைகால் நோக்கள், இருதயவியாதி, நெஞ்சுநோ, சளிவருத்தம், பித்த ரோகங்கள் என்பன கொடுக்கலாம்.

★ அதிர்ஷ்டநாள்; சனி, வியாழன்.

மீனம்: எதிலும் புதுமையைத் தேட முற்படும் உங்களுக்கு அரசியலில் எதிர்ப்புக்கள் இருக்கும். அங்கும், இங்கும் ஓடி, ஓடித்திரியும் இயல்புள்ள நீங்கள் பொருளில் நிதானமாகவும், தொழில் ஸ்தானத்தில் கவனமாகவும், நிதானமாகவும் இருக்கவும். வீண்பழி தேடிவரும். விதிவசப்பட்ட பலன்கள் கொடுக்கும். வாகனத்தில் நிதானமாக இருக்கவும். வீடு,மனை, பொருள், தொழில்ஸ்தானங்களில் பலவித மாற்றங்கள் கொடுக்கும். மறதி. அடிக்கடி ஏற்பட்டபடி இருக்கும் சளித் தொல்லைகள் கொடுக்கும். வயிற்றுநோ, வாய்வுத் தொல்லை, சமிபாட்டுக்குறைபாடு, உஷ்ணபிடைகள் கொடுக்கும். தகுந்த வைத்தியம் செய்யவும். ரேவதி நட்சத்திரகாரர் போக்குவரத்தில் அவதானமாக இருக்கவும.

★ அதிர்ஷ்டநாள்: சனி, திங்கள், வியாழன்.

தீராத விளையாட்டுப்...

(III ஆம் பக்கத் தொடர்)
பண்புகள் வளரும்.

இந்தப் பருவம் மிக இனிமையான பருவம் —

சின்னஞ் சிறுசுகளின் மனங்களில் எதுவும் பசுமரத்தாணி போற் பதிந்துவிடும். ஆகவே சமூகத்தில் நல்ல வரவேற்பளிக்கக் கூடிய விடயங்களை எளிய அணுகு முறை மூலம் தெரியப்படுத்த வேண்டும். தீயவற்றை அறவே நீக்கிவிட வேண்டும். அப்போதுதான் எதிர்கால சந்ததியினர் நற்பிரஜைகளாக உருவாக முடியும். அதற்கான அத்திவாரம் இள வயது உள்ளங்களில் முறையாக இடப்பட வேண்டும்.

எனவே பல்வேறு நற்பழக்கவழக்கங்களைக் கற்பித்தால் அவர்கள் பின்பற்றுவர். பெற்றோர் ஏனோ தானோ என்றிருந்துவிடலாகாது. இவர்களுக்கு அன்பையும் பரிவையும் அள்ளிக் கொட்டித் தென்புடன் வாழ வழிசெய்கு வேணுமாக;

''குழந்தாய் உன்உடம்பு இரும்பை ஒத்த தசைநார்களையும் உருக்கைப் போன்ற நரம்புகளையும் கொண்டு மிக உறுதியாக அமைந்திருக்கட்டும். ஆனால் அதனுள் மென்மையான உள்ளத்தை அமைத்துக்கொள்''

- சுவாமி விவேகானந்தர். ★

எயிறிழந்த...

(V ஆம் பக்கத் தொடர்)
புன்னகையை வரவழைத்துக் கொண்டு, ''நேற்று சேர், நான் லீவு'' என்றாள்.

''லீவு சரி. முன்னறிவித்தல் தராமல் லீவெடுக்கக் கூடாதென்று தெரியுமோ தெரியாதோ?'' என்றார் நாகையா ஒரு குழந்தையைக் கேட்பது போல. லோஜினி 'தெரியும்' என்று தலையசைத்தாள். நாகையா விடவில்லை.

''சரி சரி: அப்ப ஏன் லீவு எடுத்தனீர்? இப்ப எண்டாலும் சொல்லுமன்'' என்றார்.

லோஜினி மீண்டும் மிகுந்த சிரமப்பட்டு ஒரு புன்னகையை வரவழைத்துக் கொண்டாள்.

''சரி சரி, சொல்ல முடியாத காரணமெண்டால் பறவாயில்லை விடும்.'' என்றவாறு சற்று அப்பால் கிடந்த ஒருபேப்பர்கட்டை எடுத்தார். ''இஞ்சை பாரும், இந்த ஸ்ரேற்மன்ரை இப்பிடியே அடிக்கிறது? விளங்கேல்லையெண்டால் என்னட்டைக் கேட்டிருக்கலாம் தானே?''

மீண்டும் ஒரு தடவை லோஜினியைத் தன் பார்வையால் அளந்தார் நாகையா.

லோஜினி எதுவும் பேசவில்லை.

''இண்டைக்கு இதை முழுசாய் விளங்கப்படுத்திப் போட்டுத்தான் மற்ற வேலை'' என்றவாறு தன் கதிரையில் வசதியாய்ச் சாய்ந்துகொண்டார்.

''சீ, இது என்ன கரைச்சல் இண்டைக்கு நான் ஆற்றை முகத்திலை முளிச்சனோ என்று தனக்குள்ளே எண்ணியவாறு சிலையாய் அமர்ந்திருந்தாள் லோஜினி. அப்போது அங்கே வந்த சுரேஷ், ''சேர் உங்களைத் தேடி சுசி எண்டு யாரோ வந்திருக்கினம்'' என்றான்.

''சுசியை உடனை வரச் சொல்லு'' என்ற நாகையா ''லோஜினியைப் பார்த்து லோஜி, நீர் இப்ப போம். நான் பிறகு உம்மைக் கூப்பிறன்'' என்றார். முகம் தெரியாத அந்த சுசியை வாழ்த்தியவாறு பொறியிலிருந்து விடுபட்ட மானாய் வெளியே விரைந்தாள் லோஜினி.

நாள்கள் வேகமாய் நகர்ந்து கொண்டிருந்தன. நாகையா இளைப்பாறி நான்கு நாள்கள் கடந்திருந்தன. அவரைப் பொறுத்தவரை றிட்டயர்மன்ற் பெரிதாய் எந்தப் பாதிப்பையும் அவரில் ஏற்படுத்தவில்லை. இப்போதும் அவர் பழைய நாகையாவாய்த் தான் இருந்தார். நாகையாவின் இடத்துக்கு நியமிக்கப்பட்டவர் அங்கு வந்துசேர்வதில் சிறிது தாமதமேற்பட்டதால் தொடர்ந்தும் சில நாள்கள் பதவி வகிக்குமாறு நிர்வாகம் நாகையாவைக் கேட்டிருந்ததால் தனது ஓய்வின் பின்பும் அவர் அலுவலகத்துக்குச் செல்ல வேண்டியதாயிற்று. நாகையாவைப் பொறுத்தவரையில் அது தன் திறமைக்குக் கிடைத்த ஒரு கௌரவமாகவே அவர் கருதிக்கொண்டார். ஊழியர்கள் எல்லோரும் தன்னை இப்போது முன்னைவிட அதிகமான மதிப்போடு நோக்குவதாக அவர் கருதிக் கொண்டார்.

அன்று நாகையா மிகவும் கோபமாயிருந்தார்.

''இண்டைக்கு இந்த ரங்கநாதனை என்ன செய்யிறன்பார்'' என்றவாறு ''சுரேஷ், ரங்கநாதனை வரச்சொல்லு'' என்றார். மறு நிமிடமே ரங்கநாதன் மிகவும் நிதானமாய் நடந்து வந்தான்.

''ரங்கநாதன், நான் நேற்றுச் சொன்னது நினைவிருக்கிதோ?'' என்றார் நாகையா.

'என்ன'? என்றார் ரங்கநாதன் அலட்சியமாய்.

''என்னவோ? இவ்வளவு நாள் இஞ்சை வேலைசெய்தும் உமக்குப் பொறுப்பு வரேல்லை. இண்டைக்குக் காலமை என்னையும் பிசுப் பண்ணிக் கொண்டு வாரும் எண்டு நான் நேற்றுச் சொன்னதை அதுக்கிடையிலை மறந்துபோனீரே?'' என்றார் நாகையா ஆத்திரத்தோடு.

''கண்டநிண்டவனையெல்லாம் பிக்கப்பண்ணவேணும் எண்ட தேவை எனக்கில்லை.'' என்றார் ரங்கநாதன் நிதானமாய்.

நாகையாவுக்கு சம்மட்டி கொண்டு யாரோ தன்னை அறைந்தது போலிருந்தது.

''ரங்கநாதன், நீ ஆரோடை கதைக்கிறாய் எண்டதை மறந்து போகாதை'' என்றார். நாகையா.

''ஓம். நான் இப்ப ஆரோடை கதைக்கிறன் எண்டு எனக்கு நல்லாய்த் தெரியும், பதவியிலை இருக்கேக்கை கொஞ்சங்கூட மனிசத் தன்மையோடை நடந்து கொள்ளத் தெரியாத ஒரு பரிதாபத்துக்குரிய சிவனோடை கதைச்சுக் கொண்டிருக்கிறன் எண்டு எனக்கு நல்லாய்த் தெரியும்.'' என்றார் ரங்கநாதன்.

''ரங்கநாதன் நான்...நான் நினைச்சால் உன்னை என்ன செய்வன் தெரியுமே?'' என்றார் நாகையா...

''சும்மா கதைக்கவேண்டாம். எங்களைப் பொறுத்தமட்டிலை நீ இப்ப ஒரு நாய்க்குச் சமன். பல்லில்லாத நாய்க்குச் சமன். பல்லில்லாத நாயாலை சும்மா கத்தத்தான் முடியுமேயொழிய கடிக்க முடியாது. உன்னைத் தன்ரை தேவைக்காக இந்த நிர்வாகம் கொஞ்ச நாள் இந்தக் கதிரையிலை ஏத்தி வைச்சிருக்குது. ஆனால், நாங்கள் எங்கடை மனத்திலையிருந்த எப்பவோ உன்னை எடுத்தெறிஞ்சிட்டம்.'' என்றபடி விரிட்டென்று அவ்விடத்தை விட்டுச் சென்றார் ரங்கநாதன்.

''நீ இப்ப ஒரு நாய்; பல்லில்லாத நாய்'' என்ற அந்த வார்த்தைகள் ஈட்டியாய் வந்து தாக்க நாகையா அப்படியே கதிரையில் அமர்ந்தார். அடிபட்ட நாயாய் அவர் மனது துடித்துக் கொண்டிருந்தது. ★

(யாவும் கற்பனை)

திசைமாறும்...

(V ஆம் பக்கத் தொடர்)
மூடியா அதிர்ச்சியுடன் திரும்பினான். இங்கேயும் ரகசிய மாய்க் காய்ச்சுகிறார்களா என்ன...?

முதலாளி சிப்பந்தியை அடித்து விடுகிற மாதிரிப் பார்த்தார்.

''அங்காலை கூட்டிப் போடா பேமானிப் பயல்...''

அவர்கண்கள் சொல்லாமல் சொல்லின. அவரோடு வந்து சேர்ந்த இந்த ஒரு வருடத்தில் அவரைப் பற்றி அறிந்து விட்டிருந்த அந்தப் பேமானிப்பயல் 'டக்கென்று' உள்ளே கூட்டிப் போனான். சற்று நேரத்தில் அவர்கள் 'ஃபுல்' லாக வெளியே வந்தனர்.

அவன் ஒரு வாய் விழுங்கிய தேநீரோடு... மிச்சம் குடிக்கத் தோன்றாமல் நின்றான். முதலாளி கடைக் கண்ணால் தன்னைப் பார்ப்பது போற்பட்டது. இந்த இடத்தில் இனி இருக்கக் கூடாது. அவன் கடகடவென்று விஷம் குடிப்பது போற்குடித்தான். முதலாளிக்கு முன் வந்து சில்லறைகளைக் குலுக்கியெடுத்து மேசை மேல் வைத்தான்.

''சேர்...'' அவர் எழுந்திருந்தார். கொஞ்சம் மரியாதையில் குழைவது போலிருந்தது அவர் குரல்.

''என்ன...?'' இறுகிப் போய்க் கேட்டான்.

''நீங்கள் எக்ஸைஸ் இன்ஸ்பெக்டரா...''

''இல்லை...'' அவன் பட்டென்று வெளியேற முயன்றான். ''நில்லுங்கோ சேர். அப்பிடியெண்டா, உங்களுக்கு உங்கட சம்பளத்தைக் காட்டிலும் கூடின காசு தருவம் நாங்கள்...''

அவன் அவரை ஒரு பூச்சியைப் பார்ப்பது போலப் பார்த்தான்.

ஒன்றும் பேசாமல் விடுவிடென்று சைக்கிளை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

★ ★ ★

சரியாய் பதினாலு நாள் கழித்து திரும்பவும் வந்த ஒரு திங்கட்கிழமையில் அவன் தன் நண்பன் நாதனோடு அதே இடத்திற்கு வந்தான்.

முதலாளி அந்த இரண்டு கிழமைக்குள் அவனைப் பற்றி மறந்திருக்க வேண்டும்... இடையில வேறு பிரச்சினைகள் வராத காரணத்தாலும்...

''டேய், உனக்கென்னடா ஓடர் பண்ணுறது...'' நண்பனை உபசரிப்பதற்காகத் தான் கேட்டானே தவிர பழைய வடை ஞாபகம் குடைவைப் புரட்டியது.

''வெறும் ரீயே போதுமடா...'' நாதனின் வார்த்தைகள் அவனுக்கு நிம்மதியைக் கொடுத்தன.

இவர்கள் ரீயைக் குடித்தபடி பார்த்துக் கொண்டிருந்தார்கள் கோயிலிலே மணி சலீரிட்டது. சிறிசுகள் கத்திக் கொண்டிருந்தன. பொன்னம்மாக்கா ''அம்மாளாச்சி...'' என்று தலைமேல் கையை உயர்த்திக் கொண்டிருந்தா. சைக்கிள் கடை என்றுமில்லாத அதிசயமாய் வெறிச்சோடிக் கிடந்தது. வாசிகசாலையில் இப்போதுதான் கொழும்புப் பத்திரிகைகள் வந்திருக்க வேணும் பள்ளிக் கூடப் பையன்கள் குழுமி நின்றார்கள்.

மூட்டை தூக்கியவர்கள் உள்ளே போனார்கள்.

நாதன் டம்ளரை வைத்துவிட்டு எழுந்தான். ரகுவும் எழும்பமுயல நாதன் தடுத்தான்.

''வேண்டாமெடா நீ இரு நான் சும்மா போறமாதிரி போய் கண்டுபிடிச்சு வாறன்...''

நாதன்உள்ளே போவதைக் கண்டு முதலாளி திடுக்கிட்டார். ரகுராஜை அடையாளம் கண்டவுடன் அவரது முகம் பகீரென்றது.

நாதனின் பின்னால்தானும் போனார்.

அவன் காத்திருந்தான். அவர்கள் வர நேரமாயிற்று. உள்ளே வாக்குவாதமோ, கைகலப்போ நடக்கிறதாக்கும் என அவன் நினைத்தான்.

மூட்டை தூக்கியவர்கள் ஊதிய வயிறுடன் ஏப்பம் விட்டபடி தள்ளாடிக் கொண்டே வெளியே போனார்கள்.

''என்னாயிற்று நாதனுக்கு...'' ஏதாவது செய்து விட்டார்களா?

இவன் உள்ளேபோக எழுந்தான். அதேநேரம் நாதனின் கையைப் பிடித்து ''நல்லது தம்பி'' என்று வழிந்தவாறே முதலாளி வெளிப்பட்டார். இவனைப் பார்த்த அவரது கண்களில் ஓர் ஏளனச் சிரிப்புத் தெரிந்தது.

''அங்கையொண்டுமில்லையெடா ரகு. நான் வடிவாப் பாத்திட்டன் வாடா...''

அவன் ரகுவைக் கூப்பிட்டான். ரகுவிற்கு அதிர்ச்சியை விழுங்குவது கடினமாயிருந்தது. ஒன்றும் பேசாமல் எழுந்தான். ஒருமுறை முதலாளியைப் பார்த்து விட்டு அவரது வெற்றிக்குமுன் எதுவும் செய்ய லாயக்கற்றவனாய்த் திரும்பிநடந்தான்.

''ரகு......'' நாதன் கூப்பிட்டான்.

''என்னடா...என்ன பேசாமப் போறாய்...?'' ரகு திரும்பினான். நேரே பார்த்தபடி கேட்டான்...

''உன்னை உப்பிடிச் சொல்ல வைக்க அவர் எவ்வளவு தந்தவர்...?''

அந்தக் கேள்வியால் ஆடிப் போனான் நாதன்.

''நீ......நீ......உனக்கு ஆர் சொன்னது...?''

''சொல்லு...எவ்வளவு தந்தவர்...?''

''ஏன் உனக்கும் பாதி தர வேணுமோ'' தன் மிரட்சியிலிருந்து விடுபட்டுக் கொஞ்சம் குதித்தலாய்க் கேட்டான் நாதன்.

''சீ...நான் ஒரு விசரன். உன்னை நம்பி இவ்வளவு தூரம் கூட்டி வந்தேனே. எத்தினையோ சனம் வயிறெரிஞ்சு சாகப்போறதுக்கு நீ லஞ்சம் வாங்கிக் கொண்டிரு ...உன்னை நம்பிவந்த நான் ஒரு விசரன்தான்...'' அவன் ஆற்றாமையைக் கொட்டினான்.

''டேய் ரகு உனக்கிப்ப தெரியாதெடா, தனிக் கட்டை பெரிய ஞாயம் கதைப்பாய். பிறகு என்னை மாதிரி பெஞ்சாதி பிள்ளை எண்டு வந்தாப்பிறகு தான் ......''

''அப்பிடி நானும் மாறுவனெண்டா எனக்குப் பெஞ்சாதி பிள்ளைகளே வேண்டாம், சமூகத்தை உருக்குலைகசுக் கொண்டு ஒரு வாழ்க்கை வாழுறதே......''

''அடேய் விசரா, உன்ரை கதைக்குத்தானடா இன்னும் வேலை கிடைக்காமல் அலையிறாய்...''

''கையாலாகாத லஞ்சம் வாங்கிற எக்ஸைஸ் இன்ஸ்பெக்டரா இருக்கிறதை விட அது எவ்வளவோ மேல்...'

'எவ்வளவோவில்' கொஞ்சம் அழுத்திச் சொன்னான் ரகு.

''என்னடா சொன்னனி...'' நாதன் அவன் சட்டைக் கொலரைப் பற்றினான். அந்த முகத்தில் சாராயவாடை அடித்தது.

[illegible] அவன் கையை [illegible] நடந்து கொண்டிருந்தான்.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அரசனின்...

(IX ஆம் பக்கத் தொடர்)

பார்த்தார்.

''என்னை உனக்கு அடையாளம் தெரிகிறதா? நன்றாகப் பார்'' என்றார்.

அந்த ஆள், ''என்ன இப்படி கேட்கிறீர்கள்? நீங்கள் மகாராஜா இல்லையா?'' என்றார்.

''அது இல்லை... இதற்கு முன்பு என்னை எங்கேயாவது பார்த்த ஞாபகம் உனக்கு இருக்கிறதா?''என்று அரசர் கேட்டார்.

''இல்லையே!'' என்றான் அவன்.

ராஜா தன்னுடைய அலங்காரத்தைக் கலைத்தார்.

உடனே அந்த ஆளுக்கு நினைவு வந்து விட்டது!

''அரசே, அன்றைக்கு உங்களிடமிருந்தா குதிரையை கடத்திக் கொண்டு போனேன்? என்னை மன்னித்து விடுங்கள்'' என்று சொல்லி அவர் காலில் விழுந்தான்.

''இதோ பார், எழுந்திரு... நான் சொல்வதைக் கவனமாகக்கேள்: நாளைக்கு நான், நீ திருட முயன்ற வழக்குக்காகத் தண்டனை கொடுக்கப் போகிறேன்! அன்றைக்கு நீ என்னை ஏமாற்றியதற்கு நான் உன்னைக் தண்டிக்கப் போவதில்லை.... அது மட்டுமல்ல... நான் உன்னிடம் ஏமாந்த விஷயத்தை நீயும் யாரிடமும் சொல்லி விடாதே! இந்த ரகசியம் நம் இருவருக்கும் மட்டும் தெரிந்ததாக இருக்கட்டும்!'' என்று கூறினார்.

இந்தக் கதையை நண்பர் ஒருவர் என்னிடம் சொல்லி விட்டு, ''அந்த ராஜா ஏன் அப்படி அந்த ஆளிடம் சொன்னார்?'' என்று ஒரு கேள்வியைக் கேட்டார்.

நான் சிறிது நேரம் யோசித்துவிட்டுப் பதில் கூறினேன்:-

''ராஜாவே திருடனிடம் ஏமாந்து விட்டார் என்ற விஷயம் மக்களுக்குத் தெரிந்தால் அது மிகவும் கேவலம் இல்லையா? அதனால் அப்படி சொல்லியிருப்பார்'' என்றேன்.

நண்பர் புன்சிரிப்புடன், ''எல்லோரும் இப்படித்தான் சொல்கிறார்கள். ஆனால் அது காரணமில்லை'' என்றார்.

''சரி, நீங்களே என்ன காரணம் என்று சொல்லுங்கள். ராஜா ஏன் அப்படி சொன்னார்?'' என்று அவரிடமே கேட்டேன்.

அவர்சொன்னார்:-''அதாவது விஷயம் என்னவென்றால்... அந்த நிகழ்ச்சி வெளியில் எல்லோருக்கும் தெரிந்து போய்விட்டால்... கஷ்டப்படுபவர்களுக்குக் கை கொடுத்து உதவ எல்லோரும் தயங்க ஆரம்பித்துவிடுவார்கள். அதன் பிறகு நாட்டில் தர்மம் கெட்டுவிடும். யாரும் இன்னொருவருக்கு உதவி செய்ய முன்வரமாட்டார்கள். அப்படி ஒரு நிலை தன்னுடைய நாட்டில் வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் ராஜா அவ்விதம் செய்தார்'' என்று நண்பர் விளக்கம் கூறினார்.

★

- தென்கச்சி சுவாமிநாதன் -

குருநானக்...

(IX ஆம் பக்கத் தொடர்)

செய்யவேண்டும், சொல்லுங்கள்'' என்று பணக்காரர் வினவினார்.

''நீங்கள் செய்யவேண்டியது என்னவென்றால் இந்த ஊசியைப் பத்திரமாக வைத்திருக்க வேண்டும், நாம் இருவரும் இறந்து போன பிறகு, மற்றோர் உலகத்தில் நாம் சந்திக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது! அப்போது இந்த ஊசியைக் கொண்டுவந்து என்னிடம் கொடுங்கள். இதுதான் நீங்கள் எனக்காகச் செய்ய வேண்டிய உதவி'' என்று குரு நானக் புன்சிரிப்போடு கூறினார்.

இதைக் கேட்டதும் பணக்காரர் திருதிருவென்று விழித்தார்.

''அது எப்படிங்க? நான் சாகும்போது எப்படி இந்த ஊசியை எடுத்துக்கொண்டு இன்னோர் உலகத்திற்கு வர முடியும்?'' என்று கேட்டார்.

குருநானக், ''ஊசிபோன்ற மிகவும் ஒரு சிறிய பொருளைக்கூட நாம் இந்த உலகத்தைவிட்டுப் போகும் போது எடுத்துக்கொண்டு போக முடியாது என்னும் போது, உங்களுடைய செல்வங்களையெல்லாம் எப்படி அங்கே எடுத்துவரப்போகிறீர்?'' என்றார்கள்.

குருநானக் இப்படிக் கேட்டதும் அந்தப் பணக்காரர் யோசிக்க ஆரம்பித்தார்.

அப்போது குருநானக் சொன்னார்: ''இதோ பாருங்கள்... நாம் செய்யும் நல்லது —கெட்டதுதான் கடைசிவரையிலும் நம்முடன் இருக்கும். மற்றவர்கள் நன்றாக இருக்கவேண்டும் என்பதற்காக நம்மிடம் உள்ள பொருளைச் செலவிட வேண்டும். அப்படிச் செய்யவில்லையானால் நாம் மனிதப்பிறவி எடுத்தும் பயனில்லை; நம்மிடம் பணம் இருந்தும் பயனில்லை''

இவ்விதம் குரு நானக் சொன்ன பிறகுதான் அந்தச் செல்வந்தரின் அறிவுக் கண் திறந்தது.

உடனே அவர் குருநானக்கை வணங்கி, ''ஐயா என்னிடமிருந்த ஆணவம் இப்போது போய்விட்டது. இனிமேல் என்னிடம் இருக்கும் செல்வத்தை நல்ல வழியிலேயே செலவழிப்பேன்'' என்று தெரிவித்தார்.

நம்மிடம் இருக்கும் பணம் எப்போதும் நம்மோடு கூடவே வந்துகொண்டிருக்காது. இப்படிச் சொல்வதால் 'நாம் பணம் சம்பாதிக்க முயற்சி செய்யக் கூடாது! என்று யாரும் தவறாக நினைத்துவிடலாகாது.

முறையான வழியில் பணம் சம்பாதிக்கத்தான் வேண்டும். அதை முறையான வழிகளில் செலவு செய்யவும் வேண்டும். அதனால் ஒரு பெரிய மனநிறைவு கிடைக்கும்; அந்த மனநிறைவை அனுபவித்தவர்களுக்கே அதன் பெருமை தெரியும்.

சொர்க்கத்திற்குப் போகிறவர்கள் இங்கேயிருந்து பணத்தை எடுத்துக்கொண்டு போகமுடியாது. ஆனால் நம்மிடமுள்ள செல்வத்தை இங்கு மற்றவர்களுக்குப் பயன்படும்படி செய்து, அதனால் கிடைக்கக்கூடிய புண்ணியத்தை அங்கு எடுத்துக் கொண்டு போகமுடியும்.

தங்கக் கிண்ணத்துக்காக...

(I ஆம் பக்கத் தொடர்ச்சி)

1930 ஆம் ஆண்டு ஜூலையில் உருகுவேயின் தலைநகரான மொன்டி விடியோவில் ஆரம்பமான உலக கிண்ணத்துக்கான ஆட்டம், இன்று பல பில்லியன் ரசிகர்களை தொலைக் காட்சியின்முன்னே கொண்டு வந்து கட்டிப் போட்டு விட்டது. இதன் வளர்ச்சி இவ்வளவு பிரமாதமாக இருக்கும் என அப்போது எவரும் கணித்திருக்கவில்லைப்போலும்.

எட்டுப்பட்டங்கள்கொண்ட (எண்கோண வடிவான) ஒரு மதுக்கிண்ணத்தை (Chalice) வெற்றித் தேவதை (Goddess of Victory) பிடித்திருக்கும் வண்ணம் வடிவமைக்கப் பட்டது FIFAயின் காணாமற் போனமுதற்கிண்ணம். வெள்ளியால் வார்க்கப்பட்ட இது தங்கமுலாம் பூசப்பட்டு தகதகவென ஜொலித்திருந்தது. இதன் பாதம்மோ lapis lazuli எனப்படும் பெறுமதிமிக்க நீலக்கல்லினால் ஆனது.

3.8 கிலோகிராம் எடையும் 35 சென்ரிமீற்றர் உயரம் கொண்ட இக்கிண்ணத்தின் பாதத்தில் நான்கு பக்கமும் தங்கத்தகடுகள் பதிக்கப்பட்டிருந்தன. 1930 முதல் 1970 வரை கிண்ணத்தை வென்றவர்கள் பற்றிய விவரங்கள் அத் தகடுகளில் பொறிக்கப்பட்டே இருந்தன.

1928இல் இதை உருவாக்கியவர் Abel Lafleur என்ற பிரெஞ்சுசிற்பியாவார். இரண்டாம் உலகயுத்தத்தின்போது இதை தொலைந்து விடாமல் சப்பாத்துப் பெட்டிக்குள் வைத்து தமது படுக்கையில் வைத்திருந்து காப்பாற்றினார்: சர்வதேச உதை பந்தாட்ட சம்மேளனத்தின் அப்போதைய உப தலைவராக விளங்கிய டாக்டர் சூலோரினா பரஸி என்ற இத்தாலியர்.

உலகயுத்தம் முடிவுற்றபின் 25 ஆண்டுகளைப் பூர்த்தி செய்த நிலையில் உலகக்கிண்ணம் மீண்டும் மிளிரத் தொடங்கியது.

1966இல் சுமார் 36 ஆண்டு கால வரலாற்றைக்கொண்ட இக் கிண்ணம் காணாமற் போய்விட்டது: உதைபந்து உலகம் சோகத்தில் ஆழ்ந்து விட்டது. அப்போது அது இங்கிலாந்தில் ஓர் உதைபந்தாட்டத் தொடருக்காக காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த தருணம்.

ஒரு மரத்தின் அடியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த இக்கிண்ணம் மீண்டும் கண்டெடுக்கப்பட்டு விட்டது. ''Pickles''என்ற ஒரு குட்டி நாயின் விளையாட்டு அது!

ஆனால் 1983 இல் றியோடி ஜெனரோவில் கிண்ணம் களவுபோயே விட்டது. தங்கத்துக்காகவும் வெள்ளிக்காகவும் இதன் பெறுமதிதெரியாதவர்கள் திருடிச் சென்று உருக்கிவிட்டார்கள் என்ற கறைபடிந்த வரலாற்றை மனித இனம் தட்டிச் சென்று விட்டது. கற்பூரவாசனை அறியாத கள்வர்கள் அல்லவோ?

மூன்று தடவைகள் தொடர்ந்து உலகக் கிண்ணத்தை வென்றதால் அதனை வைத்திருக்கும் உரிமையைப் பெற்றிருந்த பிரேஸில் நாட்டின் உதை பந்தாட்டச் சம்மேளனம் [illegible] உலகக் கிண்ணம் ஒன்றைத் தயாரித்து வழங்கப் பணித்தது.

ஐம்பதுக்கும் மேற்பட்ட வடிவங்களின் மாதிரிகள் பரிசிலனைக்கு எடுக்கப்பட்டன. இத்தாலிய சிற்பியான Silvio Gazzaniga இம்முறை கிண்ணத்தை உருவாக்கும் வாய்ப்பினைத் தட்டிக் கொண்டார்.

உலகமே ஒருபந்தாக—அதை பெற்றுக் தாங்கும் விரல்கள் வீரர்களின் கரங்களாக— பாதத்தில் இருந்து சுருண்டு முறுகி எழும் வடிவம். உலக உதைபந்தாட்ட வீரர்கள் எவரும் இக்கிண்ணத்தைத் தட்டிச் செல்லத் துடிக்கும் வகையில் இது பிரமாதமாக வடிவமைக்கப்பட்டு உள்ளது.

36 சென்ரி மீற்றர் உயரமும் ஐந்து கிலோ எடையும் கொண்ட இக்கிண்ணமோமுழுவதும் 18 கரெட் தங்கத்தினால் செய்யப்பட்டது. இது 18 கரெட்டில் 625 பவுண் நிறை அல்லது 22 கரெட்டில் 512 பவுண் நிறையைக் கொண்டது.

இது சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நிரந்தரச் சொத்து! வெல்பவர்களுக்கு இது போன்ற ஒரு மாதிரிக் கிண்ணம்—தங்க முலாம் பூசப்பட்டு வழங்கப்படும்.

2038 ஆம் ஆண்டு வரை இக்கிண்ணத்தை வெல்பவர்களின் பெயர்களைப் பொறிப்பதற்கு கிண்ணத்தில் இடஒதுக்கீடு காணப்படுகிறது.

தங்கத்துக்கு ஆசைப்படும் திருடர்களின் கரங்களில் இதுவும் சிக்காவிட்டால் சரி. [illegible] மாதிரி ஒரு மட்டும்தானே.

★

விடைகள்

iV ஆம் பக்கத்தில் சிறுவர் சுடர் பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

இயலுமா?

```
(1)  1 1 1
       1 1
         1
         1
         1
     -----
       125
```

(2) 94 தேசிக்காய்கள்.

(3) இருநூறு தடவைகள்.

உங்களுக்குத் தெரியுமா?

(1) கற்பனை.

(2) கோவா.

(3) மணிக்கூடு.

(4) கிளிநொச்சி

(5) வைகாசி.

('உங்களுக்குத் தெரியுமா? புதிரைத் தொகுத்தவர் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மாணவி கிரிசாலினி ஸ்ரீகரன்.)

'எல் - நினோ'...

(VII ஆம் பக்கத் தொடர்)

அவஸ்தைப் பட்டதை சர்வசாதாரணமாகக் காணமுடிந்தது.

இந்தியாவில் சில மாநிலங்களில் நீடித்த வரட்சியாலும், சில மாநிலங்களில் வெள்ளம் காரணமாகவும் பாதிப்புக்கள் ஏற்பட்டன.

'லா—நினா' காலத்தில் தென்னாசியாவில் முற்றான குளிர்காலநிலை (WINTER-SEASON) இருக்காது. ஆனால் வழமைக்கு மாறான குளிரை இப்பகுதி மக்கள் அனுபவிக்க நேரிடும் என்று வானிலை ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

வாரியார் கூறிய...

(IX ஆம் பக்கத் தொடர்)

''மன்னவனே! உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்!'' என்று கூறி அருள் புரிந்தாள்.

மன்னன், ''தாயே! இந்தப் பூசாரி குற்றத்தை உணர்ந்து கொண்டான்: ஒப்புக் கொண்டான். மன்னிப்பது உன் இயல்பு தேவி. இவனை மன்னித்து இவனை எழுப்பிக் கொடு. பின்னர் மழை பெய்து மக்கள் சுகமடையச் செய்'' என்றான்.

அம்பிகை அருள்புரிந்தாள்; பூசாரி எழுந்தான். அது முதல் ஆலயத்தில் பலியிடும் கொடுமையை அகற்றினான்.

நன்கு மழை பொழிந்தது; நாடு தழைத்தது.

செய்த வினை செய்தவனை வந்தடையும் என்பது திண்ணம்.

★

செம்மணிப்...

(II ஆம் பக்கத் தொடர்)

எனவே தமிழ் அரசியல் கட்சிகளும், தமிழ் மக்களும் கோரிக்கை விடும் வரையும் காத்திருக்காது செம்மணித் தேடுதலில் அரசு உடனடியாக இறங்க வேண்டும்.

எழுபதுகளின் பிற்பகுதியிலும், எண்பதுகளின் பிற்பகுதியிலும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அரச படைகள் செய்த கைதுகள், சித்திரவதைகள், கொலைகளின் விளைவாகவே — மனித உரிமை மீறல்களின் விளைவாகவே —

மனித உரிமை மீறல்களை — படுகொலைகளை — தடுக்க அரசு தவறியதாலேயே — மறைக்க முற்பட்டதாலேயே தீவிரவாதம் வலுவடைந்தது என்பதனை அரசு மறந்துவிடக் கூடாது.

செம்மணி புதைகுழி விவகாரத்தில் அரசு கண்ணை மூடிக் கொண்டிருப்பின், குடாநாட்டில் மக்கள் எழுச்சி ஒன்று உண்டானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை,

★ ★ ★

அடுத்து வரும் சில மாதங்களில் இலங்கை அரசியலில் திடீர் திருப்பங்கள் ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகள் உருவாகி வருவதாக நம்பிக்கையாகக் கூறப்படுகிறது. இப்போதைய ஜனாதிபதி அரசியல் துறவுபூண, அவருடைய தம்பி அனுரா பண்டார நாயக்கா ஜனாதிபதியாக வரக் கூடும். திரை மறைவில் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாகத் தெரிகிறது;

இப்போதைய பிரதமரும் இவர்களின் தாயாருமாகிய சிறிமாவோ பண்டார நாயக்கா பிரதமர் பதவியிலிருந்து விலக திரு அனுரா பண்டார நாயக்கா பிரதமராகப் பதவிஏற்பது முதற் கட்டம் எனவும், சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்க ஜனாதிபதி பதவியிலிருந்து விலக அப்பதவியை திரு: அனுரா பண்டார நாயக்கா ஏற்பது அடுத்த கட்டமாக இருக்கும் எனவும் சொல்லப்படுகிறது. இலங்கை அரசமைப்புச் சட்டப்படி ஜனாதிபதி பதவி வெற்றிடமானால் உடனே அப்பதவியை ஏற்பது பிரதமரே.

கடந்த பொதுத்தேர்தலில் மக்களுக்குக் கொடுத்தவாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத நிலையிலுள்ள சந்திரிகா அடுத்த தேர்தலில் முகம் கொடுக்க முடியாத நிலை உள்ளது. வேறு பல வகையிலும் விரக்திபடைந்துள்ள அவர் லண்டனில் குடியேற ஆயத்தமாகி வருகிறார். ஏற்கனவே அங்கு வீடு வாங்கப்பட்டுவிட்டதாகத் ஹேஸ்யங்கள் வெளியாகியுள்ளன;

சிறிமாவோ பண்டார நாயக்கா மிகவும் உடல் தளர்ந்த நிலையில் உள்ளார்; பொது வைபவங்களிற்குச் சக்கரக் கதிரையிலேயே செல்கிறார். ஆகவே அவரும் ஓய்வு பெற வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது.

ஆனால் தாம் பதவி விலகினால், அமைச்சர் அனுருத்த ரத்வத்தை அந்த இடத்துக்கு வந்துவிடக்கூடும் என்ற அச்சம் உள்ளது. அதனை அவர் விரும்பவில்லை. இதன் காரணமாகவே மகன் அனுராவை உள்ளே இழுக்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

ஐ.தே.கவிலிருந்து விஜயபால மெண்டிஸ் இடைநிறுத்தப்பட்டதால் விரக்தியடைந்துள்ள அனுராவை சுதந்திரக் கட்சி பக்கம் இழுப்பது சுலபம் என்று கருதப்படுகிறது.

அனுரா பண்டாரநாயக்கா உள்ளே வந்து பதவியேற்றால், அனுருத்த ரத்வத்தையும் அவருடைய ஆதரவாளர்களும் வெளியேறக் கூடும் என்ற அச்சம் உள்ளது. இதற்கான மாற்று ஏற்பாடுகளும் ஆராயப்படுவதாகத் தெரிகிறது.

★ ★ ★

கனடாவில் வாழும் தமிழர்கள் இலங்கையின் உற்பத்திப் பொருள்களை கொள்வனவு செய்யாமல் பகிஷ்கரிக்கும் இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்கள்.

இலங்கையின் உற்பத்திப் பொருள்களை வாங்குவதால் கிடைக்கும் பணத்தைக் கொண்டு இந்நாட்டு அரசு தமிழருக்கு எதிராகப் போரை நடத்துவதாகவும்—

இலங்கை உற்பத்திப் பொருள்களைப் பகிஷ்கரிப்பதன் மூலம் தமிழரைப் படுகொலை செய்யாதே என்ற செய்தியை அழுத்திச் சொல்ல முடியும் என்றும்— பகிஷ்கரிப்பு இயக்கத்தை முன்னெடுக்கும் வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை உற்பத்திப் பொருள்கலள பகிஷ்கரிக்கும் இயக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும், வெற்றி அடைந்து வருவதாகவும் கனேடியத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழன் எங்கே சென்றாலும் போராடும் உணர்வும், நிலையும் தான்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தோனேசியாவில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம்

கிழக்கு ரிமோர் பிரச்சினைக்கு தீர்வு காணுமா?

இந்தோனேசியாவில் சுஹார்ட்டோ பதவி கவிழ்ந்ததை அடுத்து கிழக்கு ரிமோர் பிரச்சினைக்கு தீர்வு காணும் கோரிக்கை மீண்டும் வலுப் பெற்று வருகிறது.

1975 ஆம் ஆண்டு கிழக்கு ரிமோரை (East Timor) இந்தோனேசியா பலவந்தமாகக் கைப்பற்றித் தன்னுடன் இணைத்துக் கொண்டது.

கிழக்கு ரிமோரில் இந்தோனேசியாவின் ஆதிக்கத்துக்கு எதிராக கடந்த 23 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் போராட்டத்தில் பல்லாயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர்; சொத்துக்களுக்கும் உடமைகளுக்கும் பேரழிவு ஏற்பட்டது.

ஆட்சி மாற்றத்தால் புதிய சூழ்நிலை

இந்தோனேசியாவின் புதிய ஜனாதிபதியாகபி.ஜே ஹபீபீ (B.J.Habibie) பதவி ஏற்ற பின்னர் கிழக்கு ரிமோர் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வெகுவாக வலியுறுத்தப்பட்டு வருகிறது.

கிழக்கு ரிமோர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான சரியான நேரம் வந்து விட்டதாக மேற்கு நாடுகளின் ராஜதந்திரிகள் கருதுகின்றனர்.

கிழக்கு ரிமோர் இந்தோனேசியாவின் ஒரு பகுதியாக தொடர்ந்து இருக்க வேண்டும் என்று பெரும்பாலான மேற்கு நாடுகள் கருதுகின்றன. ஆனால் இந்தோனேசியா கூடுதல் சுயாட்சி வழங்கி கிழக்கு ரிமோர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று அவை கோரி வருகின்றன.

தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதற்கு இந்தோனேசிய வெளிவிகார அமைச்சர் அலி அலாராஸும் ஆதரவு வழங்கி உள்ளார்.

கிழக்கு ரிமோர் விடுதலை இயக்கத் தலைவர் குஸ்மாவோவை (Gusmao) அவர் 1996 இல் சிறையில் சந்தித்துப் பேச்சு நடத்தினார். கிழக்கு ரிமோர் பிரச்சினைக்குத் தீர்வு காண சுஹார்ட்டோ அரசு மேற்கொண்ட முதலாவது முயற்சியாக அப் பொழுது அது கருதப்பட்டது. குஸ்மாவோ இன்னும் சிறையிலேயே இருந்து வருகிறார்.

சிறையில் உள்ள கிழக்கு ரிமோர் அரசியல் கைதிகளை இந்தோனேசிய அரசு விடுதலை செய்து ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைப்பது மூலம் சமாதான முயற்சிகளை ஆரம்பிக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

வெளிநாட்டு மத்தியஸ்தத்துக்கு எதிர்ப்பு

கிழக்கு ரிமோர் பிரச்சினையில் ஐரோப்பிய யூனியனும் அதிக அக்கறை காட்டி வருகிறது.

எனினும் கிழக்கு ரிமோர் பிரச்சினையில் வெளிநாட்டு மத்தியஸ்தத்தை இந்தோனேசியா எதிர்க்கிறது. கிழக்கு ரிமோர் மக்களுடன் பேசித் தீர்க்க வேண்டிய பிரச்சினை என்கிறது இந்தோனேசியா.

வரலாறு

16 ஆம் நூற்றாண்டில் ரிமோர் பிரதேசம் போர்த்துக்கலின் காலனித்துவ நாடாக மாறியது.

எனினும் 1613ஆம் ஆண்டு ஒல்லாந்து வர்த்தகர்களே முதலில் ரிமோருக்கு வந்தனர். ஆனால் இந்தோனேசியா கூடுதல் சுயாட்சி வழங்கி கிழக்கு ரிமோர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று அவை கோரி வருகின்றன.

தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதற்கு இந்தோனேசிய வெளிவிகார அமைச்சர் அலி அலாராஸும் ஆதரவு வழங்கி உள்ளார்.

கிழக்கு ரிமோர் விடுதலை இயக்கத் தலைவர் குஸ்மாவோவை (Gusmao) அவர் 1996 இல் சிறையில் சந்தித்துப் பேச்சு நடத்தினார். கிழக்கு ரிமோர் பிரச்சினைக்குத் தீர்வு காண சுஹார்ட்டோ அரசு மேற்கொண்ட முதலாவது முயற்சியாக அப் பொழுது அது கருதப்பட்டது. குஸ்மாவோ இன்னும் சிறையிலேயே இருந்து வருகிறார்.

சிறையில் உள்ள கிழக்கு ரிமோர் அரசியல் கைதிகளை இந்தோனேசிய அரசு விடுதலை செய்து ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைப்பது மூலம் சமாதான முயற்சிகளை ஆரம்பிக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

வெளிநாட்டு மத்தியஸ்தத்துக்கு எதிர்ப்பு

கிழக்கு ரிமோர் பிரச்சினையில் ஐரோப்பிய யூனியனும் அதிக அக்கறை காட்டி வருகிறது.

எனினும் கிழக்கு ரிமோர் பிரச்சினையில் வெளிநாட்டு மத்தியஸ்தத்தை இந்தோனேசியா எதிர்க்கிறது. கிழக்கு ரிமோர் மக்களுடன் பேசித் தீர்க்க வேண்டிய பிரச்சினை என்கிறது இந்தோனேசியா.

வரலாறு

16 ஆம் நூற்றாண்டில் ரிமோர் பிரதேசம் போர்த்துக்கலின் காலனித்துவ நாடாக மாறியது.

எனினும் 1613ஆம் ஆண்டு ஒல்லாந்து வர்த்தகர்களே முதலில் ரிமோருக்கு வந்தனர். ஆனால் போர்த்துக்கலுக்கும் ஒல்லாந்துக்கும் இடையில் ரிமோரில் ஆதிக்கப் போட்டி ஏற்பட்டது.

போர்த்துக்கலும் ஒல்லாந்தும் 1859, 1893, 1898, 1914 ஆகிய ஆண்டுகளில் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் மூலம் தமக்கு கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எல்லைகளை வகுத்து ரிமோரை கிழக்கு ரிமோர், மேற்கு ரிமோர் என்று துண்டாடின.

குபாங் (Kupang) மாகாணத்தை மையமாகக் கொண்ட மேற்கு ரிமோர் ஒல்லாந்தரின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுடச்சு ரிமோர் என அழைக்கப்பட்டது.

டிலியை (Dili) தலைநகராகக் கொண்ட கிழக்குப் பகுதி போர்த்துக்கலின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு கிழக்கு ரிமோர் என்று அழைக்கப்பட்டது.

இந்தோனேசியா ஒல்லாந்திடம் இருந்து சுதந்திரம் பெற்ற போது, ஒல்லாந்தரின் கட்டுப்பாட்டில் இருந்து மேற்கு ரிமோர் தானாகவே இந்தோனேசியாவின் ஒரு பகுதியாகி விட கிழக்கு ரிமோர் போர்த்துக்கலின் தால் போர்த்துக்கலுக்கும் ஒல்லாந்துக்கும் இடையில் ரிமோரில் ஆதிக்கப் போட்டி ஏற்பட்டது.

போர்த்துக்கலும் ஒல்லாந்தும் 1859, 1893, 1898, 1914 ஆகிய ஆண்டுகளில் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் மூலம் தமக்கு கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எல்லைகளை வகுத்து ரிமோரை கிழக்கு ரிமோர், மேற்கு ரிமோர் என்று துண்டாடின.

குபாங் (Kupang) மாகாணத்தை மையமாகக் கொண்ட மேற்கு ரிமோர் ஒல்லாந்தரின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுடச்சு ரிமோர் என அழைக்கப்பட்டது.

டிலியை (Dili) தலைநகராகக் கொண்ட கிழக்குப் பகுதி போர்த்துக்கலின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு கிழக்கு ரிமோர் என்று அழைக்கப்பட்டது.

இந்தோனேசியா ஒல்லாந்திடம் இருந்து சுதந்திரம் பெற்ற போது, ஒல்லாந்தரின் கட்டுப்பாட்டில் இருந்து மேற்கு ரிமோர் தானாகவே இந்தோனேசியாவின் ஒரு பகுதியாகி விட கிழக்கு ரிமோர் போர்த்துக்கலின் ஆதிக்கத்தின் கீழ் தொடர்ந்து இருந்து வந்தது.

கிழக்கு ரிமோரில் சுதந்திரப் போராட்டம்

போர்த்துக்கலின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து கிழக்கு ரிமோரை விடுவிக்கும் போராட்டம் சிறிது சிறிதாக தலைதூக்கி போர்த்துக்கல் ஆட்சியாளர்களுக்கு சவாலாக உருவெடுத்து வந்தது.

1975 இல் போர்த்துக்கலில் சர்வாதிகாரி சலசாரின் (Salazar) ஆட்சி கவிழ்க்கப்பட்டது. ஆட்சிக் கவிழ்ப்பை அடுத்து போர்த்துக்கலில் நிச்சயமற்ற நிலை உருவானது இதனைப் பயன்படுத்தி, கிழக்கு ரிமோரில் போர்த்துக்கல் ஆதிக்கத்தின் கீழ் இருந்து சுதந்திரம் கோரி போராடி வந்த புரட்சிகர முன்னணி சுதந்திர பிரகடனம் செய்தது.

சந்தர்ப்பத்தை எதிர் பார்த்து காத்திருந்த இந்தோனேசியா உடனடியாக தனது படைகளை அனுப்பி கிழக்கு ரிமோரைக் கைப்பற்றிக் கொண்டது.

கிழக்கு ரிமோர் இன்னும் போர்த்துக்கலின் ஒரு காலனித்துவ நாடு என்றும் அந்த நாட்டு மக்களுக்கு சுய நிர்ணய உரிமை உண்டு என்றும் போர்த்துக்கல் கருதுகிறது.

ஆனால் போர்த்துக்கலின் ஆதிக்கத்தில் இருந்து அது விடுவிக்கப்பட்ட பின்பே அதனை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததாக இந்தோனேசியா வாதாடுகிறது.

கிழக்கு ரிமோர் சம்பந்தமாக போர்த்துக்கல் எந்த விதமான அதிகார மாற்றத்தையும் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1975 படையெடுப்பு

1975 இல் கிழக்கு ரிமோரை இந்தோனேசியா தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த போது பெரும் படை எடுப்பு ஒன்றையே நடத்தி இருந்தது.

குண்டு வீச்சு விமானங்கள் பெரும் அளவில் பயன்படுத்தப் பட்டன. பரா துருப்புக்கள், கடற்படையினர் பெரும் அளவில் அனுப்பப் பட்டனர்.

கிழக்கு ரிமோரை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கு இந்தோனேசியா நடத்திய தாக்குதல்களில் சுமார் 60 ஆயிரம் கிழக்கு ரிமோர் மக்கள் கொல்லப் பட்டனர். கிழக்கு ரிமோர் பெண்கள் பலர் இந்தோனேசியப் படையினரால் கற்பழிக்கப்பட்டனர்.

கிழக்கு ரிமோரின் சனத் தொகையிலேயே பத்தில் ஒரு பங்கினர் இந்தப் படையெடுப்பின் போது கொல்லப்பட்டனர்.

கிழக்கு ரிமோரில் இந்தோனேசியாவின் பிடியைத் தொடர்ந்து வைத்திருக்கவும் பெருமளவு முஸ்லிம் குடியேற்றத்தை ஏற்படுத்தவும் சுஹார்ட்டோவின் ஆட்சிக் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும் கிறிஸ்தவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட கிழக்கு ரிமோர் மக்கள் இந்தோனேசியாவின் ஆதிக்கத்தை ஒரு போதும் ஏற்றுக்கொள்ளவில்லை.

நோபல் பரிசு

கிழக்கு ரிமோரைச் சேர்ந்த இருவருக்கு 1996 இல் சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

ஒருவர் கிழக்கு ரிமோரில் வசிக்கும் பிஷப் கார்லோஸ் பெலோ. மற்றவர் வெளி நாட்டில் அஞ்ஞாதவாசம் புரியும் கிழக்கு ரிமோர் மனித உரிமைகள் இயக்க உறுப்பினர் ஜோஸ் ராமோஸ்

கிழக்கு ரிமோர் பிரச்சினைக்கு தீர்வு காணும் அவசியத்தை இந்த நோபல் பரிசு சம்பவம் அதிகரித்திருந்தது. அத்துடன் கிழக்கு ரிமோர் பிரச்சினையைசர்வதேசமயப் படுத்தவும் இது உதவியது.

தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா கடந்த ஆண்டு கிழக்கு ரிமோர் சென்று பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சித்தார். குஸ்மாவோவையும் சிறையில் சந்தித்தார். எனினும் சுஹார்ட்டோவின் ஆட்சி கவிழ்ந்த பின்பே தற்பொழுது ஓரளவு சுமுகமான சூழ்நிலை உருவாகி வருகிறது.

★

அதிகாரத்தை தக்க வைப்பதற்கு யெல்ட்சின் நடத்தும் போராட்டம்!

ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் யெல்ட்சின் தமது அதிகாரத்தை தக்கவைப்பதற்காக ரஷ்ய நாடாளுமன்றத்தில் கம்யூனிஸ்டுக்களுடன் பெரும் போராட்டம் ஒன்றை நடத்தி வருகிறார்.

சமீபத்தில் யெல்ட்சினுக்கு எதிராக ரஷ்ய நாடாளுமன்றத்தின் கீழ் சபையில் குற்றப்பிரேரணை கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டது.

★ 1991 இல் சோவியத் யூனியன் சிதறிப் போவதற்கு காரணமாக இருந்தது.

ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சினும், பிரதமர் சேர்கி கிரியென்கோவும் காணப்படுகின்றனர்.

★ 1993 இல் ரஷ்ய நாடாளுமன்றம் மீது தாக்குதல் நடத்த உத்தரவிட்டது.

★ செச்சினியா மீது யுத்தம் நடத்தி ரஷ்யாவின் பொருளாதாரம் சீர்குலைந்து போகக் காரணமாக இருந்தது.

இந்த மூன்று காரணங்களையும் காட்டி யெல்ட்சின் மீது குற்றப் பிரேரணை கொண்டு வருவதற்கு ரஷ்ய நாடாளுமன்றத்தின் கீழ் சபையில் கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதற்கு முன்னோடியாக 16 உறுப்பினர்கள்கொண்ட நாடாளுமன்ற கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டு குற்றப் பத்திரிகை தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகி உள்ளன.

இந்த குற்றப்பத்திரிகை தயாரிக்க பல மாதங்கள் செல்லலாம். அதனை நிறைவேற்றி அமுல் செய்ய கட்டங்களைத் தாண்டிச் செல்ல வேண்டும்.

கம்யூனிஸ்ட்டுகளின் சவால்களை எதிர்கொள்ளும் நடவடிக்கையாக கீழ் சபையை கலைத்து விடப்போவதாக யெல்ட்சின் பயமுறுத்தி வருகிறார்.

குற்றப் பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுவிட்டால் அதனைக் கலைக்கும் அதிகாரம் 1993 அரசமைப்புச் சட்டத்தின் கீழ் யெல்ட்சினுக்கு கிடையாது.

1993 ரஷ்யாவின் அரசமைப்புக்கு இணங்க ஜனாதிபதி மீது குற்றப்பிரேரணை கொண்டு வருவதானால் கீழ் சபையின் 450 உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினரின் ஆதரவைப் பெறவேண்டும். தற்பொழுது கீழ் சபையில் கம்யூனிஸ்டுக்களுக்கு அரைப்பங்கு உறுப்பினர்களின் ஆதரவே உள்ளது. மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் அதனை நிறைவேற்றினாலும் அரசமைப்பு நீதிமன்றமும் உயர் நீதிமன்றமும் பிரேரணையை அங்கீகரிக்க வேண்டும். அதன் பின்பு மேல்சபைக்கு பிரேரணை விடப்பட்டு அங்கும் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளால் நிறைவேற்றப்பட வேண்டும்.

இந்தனை கட்டங்களையும் தாண்டி பிரேரணை மேல் சபைக்கு வந்தாலும் கிரெம்ளின் ஆதரவாளர்களைப் பெரும் பான்மையாகக் கொண்ட மேல் சபையில் இந்த பிரேரணை நிறை வேற வாய்ப்புக் கிடையாது என்றே கருதப்படுகிறது.

1993 இல் யெல்ட்சினுக்கு எதிராக ரஷ்யநாடாளுமன்றத்தில் நடத்தப்பட்ட புரட்சி, டாங்கிகள் உதவியுடன் அடக்கப்பட்ட பின்பும், கம்யூனிஸ்ட்டுகள் கிரெம்ளினுடன் ஓரவு ஒத்துப்போகும் கொள்கையையே சிறிது காலமாக கடைப்பிடித்து வந்தனர்.

1991 இல் ஏற்பட்ட நிகழ்வுகளால் மக்கள் அதிகம் களைப்படைந்து இருந்ததும் —

நாடாளுமன்றத்தின் அதிகாரம் குறைந்த சபையினால் பிரயோசனம் அதிகம் இல்லாததுமே இதற்குக் காரணம் ஆகும்.

இதனால் பிரதமர் விக்ரர் செர்நோமைடினுக்கு ஆதரவான போக்கையே கம்யூனிஸ்ட்டுகள் கடைப்பிடித்து வந்தனர். பிரதமர் மீது தமது செல்வாக்கை பிரயோகிப்பதில் ஓரளவு வெற்றியும் கண்டு வந்தனர்.

எனினும் முதலாவது உதவிப் பிரதமர்களாக அனடொலி ஸுபைஸ் என்பவரையும் பொரிஸ் நெம்ட்சோவ் என்பவரையும் நியமித்து விக்ரர் செர் நோமைடினை பதவி நீக்கம் செய்தது மூலம் கம்யூனிஸ்ட்டுகளின் செல்வாக்கை யெல்ட்சின் மேலும் மழுங்கடித்துள்ளார்.

சேர்கி கிரியென்கோ (Sergei Kiriyenko) புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.

எனினும் யெல்ட்சின் தற்பொழுது ஈட்டி உள்ள வெற்றிகள் தற்காலிகமானவை என்றே கருதப்படுகிறது.

பொருளாதாரத்துறையில் பெரும் பின்னடைவுகளை எதிர் நோக்க வரும் ரஷ்யாவில் கம்யூனிஸ்ட்டுகள் பலம் அடைந்து வருவதை நீண்ட காலத்தில் தடுத்து விட முடியாது எனறே கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org